விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 239 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 7, வியாழக்கிழமை 23.07.2015

வானிலை

கூ.வெ. 30°C
கு.வெ. 29°C
தெளிவான வானிலை

## ஐ.தே.முவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று

**27இல் வெளியிடுகிறது ஐ.ம.சு.மு.**

கொழும்பு, ஜூலை 23
ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளி

பக்கம் 24

# திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வு

## கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் இதுவே போர்க்குற்ற விசாரணைக்கும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 23
செப்ரெம்பர் மாதம் வெளியாகும், இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன், தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு அமைய வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துவதாகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன அறிக்கை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் இரவு செவ்வாய்க் கிழமையுடன் முற்றுப் பெற்றுள்ளன. இறுதி வரைவைத் தயாரிக்கும் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன்,

பக்கம் 24




## 80 கண்காணிப்பாளர்கள் வடக்கில் பணியாற்றுவர்

ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பு அதிகாரி யாழில் நேற்று தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்பு பணிக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் 80 கண்காணிப்பாளர்கள் வடக்கில் பணியாற்றவுள்ளதாக, ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழு அதிகாரி கிறிஸ்ரெய்ன் பாண்பிரேபா தெரிவித்தார்.

யாழ் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்பு பணிக்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐரோப் பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் வடக்குக்கு நேற்றைய தினம் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இதன்போது யாழ்.மாவட்டச் செயலகத்தில் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோரைச் சந்தித்தனர். அத்துடன், வடக்கு

பக்கம் 24

## வெள்ளை வான் குழுவால் ராஜபக்ஷாக்களுக்கு ஆபத்து

சொல்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஜூலை 23
நானும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வசிக்கும் மீரிஹான பகுதியில் வெள்ளை வான் சம்பவம் நடந்துள்ளது. நாங்கள் ஆபத்தில் இருக்கின்றோம். வெள்ளைவான் கலாசாரத்தை ஊக்குவித்ததாக எம்மைக் குற்றம் சுமத்திய சோபித தேரர் எங்கே ? இதுதான் ஜனநாயகமா ? நல்லாட்சியா ? இவ்வாறு கேள்விகளைத் தொடுத்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.



கொழும்பு, பத்தரமுல்லையில் ஐக்கிய மக்கள் சுதந்

பக்கம் 24

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை விலகும்

**ரணில் நம்பிக்கை**



யாழ்ப்பாணம், ஜூலை 23
இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு மீன்கள் இறக்குமதி செய்வதற்கு விதித்துள்ள தடை அடுத்த சில மாதங்களில் விலக்கிக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகப் பிரதமர்

பக்கம் 24

## யாழில் தேர்தல் நடத்த தடை விதிக்குமாறு மனு

இலங்கை சுதந்திர முன்னணி நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரி, எங்கள் இலங்கை சுதந்திர முன்னணி கட்சி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு எங்கள் இலங்கை சுதந்திர முன்னணி வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தது. இருப்பினும், அந்தக் கட்சியின் வேட்புமனு, யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின்

பக்கம் 24

## யாழ்ப்பாணத்தில் இதுவரை வன்முறைகள் ஏதுமில்லை

தேர்தல் நடவடிக்கைகள் சுமுகம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். தேர்தல் மாவட்டத்தில் இதுவரை எந்த வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை. தேர்தல் நடவடிக்கைகள் சுமுகமாக இடம் பெற்று வருகின்றன. தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் இதற்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. இனியும் ஒத்துழைப்பை வழங்குமாறு அவர்களிடம் கோரியுள்ளோம் என யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் நா.வேதநாய கன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயல

பக்கம் 24

## சயனைட்டுடன் கைதானவர் தலைவர் பிரபாவின் நண்பர்

**கியூ பிரிவுப் பொலிஸார் வெளியிட்ட தகவல்**

யாழ்ப்பாணம், ஜூலை 23
தமிழகத்தில் கடந்த திங்கட்கிழமை சயனைட் குப்பிகளுடன் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் இருவரில், ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெருங்கிய நண்பர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக, கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் உச்சிப் புளி என்ற பிரதேசத்தில் வைத்து, இலங்கைத் தமிழ் அகதிகள் இருவர் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து ஜி.பி.எஸ். கருவிகள் மற்றும் 300 கிராம் சய

பக்கம் 24

## ஆதரவாளர் ஒருவரை தாக்கினாராம் மஹிந்த

இணையங்களில் வீடியோ வெளியானதால் பரபரப்பு




கொழும்பு, ஜூலை 23
அக்குரஸ்ஸவில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடந்த தேர்தல் பரப்புரையில், ஆதரவாளர் ஒருவரை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவேசமாகத் தாக்கும் காட்சி சமூக ஊடகங்களிலும், இணையத் தளங்களிலும் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அக்குரஸ்ஸ பஸ் நிலையத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பரப்புரைக் கூட்டம் இடம் பெற்றது. கூட்டம் நடந்த மேடையை நோக்கிச் சென்று கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷ திடீரென ஆதரவாளர்

பக்கம் 24

## நிரந்தரத் தீர்வுக்கு புதிய அரசமைப்பு

அவசியம் என்கிறார் மங்கள



கொழும்பு, ஜூலை 23
இனப் பிரச்சினைக்கு, தற்போதுள்ள அரசமைப்பு மூலமாக தீர்வைக் காண முடியாது என்று தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள, புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார்.

பக்கம் 24

## வெள்ளை வானுடன் கைதான சிப்பாய்கள் பிணையில் விடுதலை

கொழும்பு, ஜூலை 23
மீரிஹானவில் வெள்ளை வான் ஒன்றில் துப்பாக்கியுடன் சிவிலுடையில் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த படையினர் மூவரும் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மீரிஹான பகுதியில் வைத்துப் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்

பக்கம் 24

# 67 ஆண்டு கால ஆட்சியில் ஏற்படவில்லை நல்லிணக்கம்

ஒரு சமூகத்தை ஒடுக்க தேசிய பாதுகாப்பை பயன்படுத்தக்கூடாது என்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூலை 23
67 வருட ஆட்சியில் நாட்டில் தேசிய சமாதானமும், தேசிய நல்லிணக்கமும் ஏற்படுத்தப்படவில்லை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களது சமய, கலாசார, மொழி உரிமைகள் சமவுரிமையாக்கப்படவேண்டும். அதனூடாகவே சமாதானமும், நல்லிணக்கமும் உருவாகும். அதை தற் போதைய ஆட்சியாளர்களால் உருவாக்கமுடியாது. ஜே.வி.பியால்

பக்கம் 24

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சமூக அவலம் ஏற்படும் வகையில் நீதிமன்றங்கள் பிணை வழங்கா

## கஞ்சா வழக்கொன்றில் மேல்நீதிமன்று எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

நீதிமன்றத்தின் மீதான தாக்குதல், போதை வஸ்து குற்றங்கள், கசிப்பு காய்ச்சியமை, பாலியல் வல்லுறவு, கோஷ்டி மோதல், ரவுடித்தனம், தெருச் சண்டித்தனம் போன்ற சமூக விரோதக் குற்றச் செயல்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கினால் பெரும் அவலத்தை ஏற்படுத்திவிடும். இந்தச் சமூகத்தில் அமைதி நிலவும் நிலையில் அதனைக் கெடுப்பதாக நீதிமன்றங்கள் பிணை வழங்கமாட்டாது என்று யாழ். மேல் நீதிமன்று தெரிவித்துள்ளது.

பருத்தித்துறைப் பகுதியில் 19 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை முதலாம் கட்டை வியாபாரி மூலையைச் சேர்ந்த செல்லத்துரை மதிரூபராசா என்பவர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றினால் கடந்த மே மாதம் 13 ஆம் திகதியில் இருந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி அவரது தந்தையார் சட்டத்தரணி மூலமாக யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார்.

அந்தப் பிணை விண்ணப்பத்தை குறுகிய கால தவணையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மேல்நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அது தொடர்பான கட்டளையிலேயே நீதிபதி மா.இளஞ்செழியன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமூக விரோதக் குற்றச் செயல்கள் தொடர்பிலான சந்தேக நபர்களுக்கான பிணை விண்ணப்பங்கள் தேர்தல் காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என அவர் தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் மீதான தாக்குதலானது நீதிச் சேவை மீதான தாக்குதலாகும். போதை வஸ்து குற்றங்களானது, சமூகத்தின் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதலாகும். பாலியல் வல்லுறவு குற்றங்கள் பெண்கள் மீது நடத்தப்படுகின்ற மோசமான தாக்குதல்களாகும். வாள்வெட்டுக்கள், கோஷ்டி மோதல்கள், தெரு ரவுடித்தனம் போன்றவை அப்பாவி இளைஞர்கள் மீதான தாக்குதல்களாகும். கசிப்பு விற்பனை என்பது, மாணவ சமூகம் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து நடத்தப்படுகின்ற சமூக கலாசாரம் மற்றும் பண்பாட்டின் மீது நடத்தப்படுகின்ற தாக்குதல்களாகும். இத்தகைய குற்றங்களுக் காகக் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய நீதிமன்றங்களின் உத்தரவுக்கமைவாக நூற்றுக்கணக்கானவர்கள் விளக்கமறியலில் இருந்து வருகின்றனர்.

இந்தக் குற்றங்கள் சமூக விரோதச் செயற்பாடுகள் மட்டுமல்லாமல், சமூகத்தில் கலாசார சீரழிவை ஏற்படுத்துகின்ற பாரதூரமான குற்றங்களாகும். இக்குற்றங்களுக்கு மேல் நீதிமன்றத்தினால், விசேட, விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே பிணை வழங்கக்கூடிய நிலைமை உள்ளது.

இந்தக் குற்றங்கள் தொடர்பிலான சந்தேக நபர்களின் பிணை மனுக்கள் தேர்தல் காலத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. பிணையும் வழங்கப்பட மாட்டாது.- என்று தெரிவித்தார் நீதிபதி இளஞ்செழியன்.

குறித்த சந்தேக நபரின் பிணை விண்ணப்பத்தின் மீதான குறுகிய கால விசாரணையை நிராகரித்து பிணை தொடர்பான பரிசீலனைக்காக வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற-4)

# அற்ப சலுகைகள் எவற்றுக்கும் அடிபணியார் வடமராட்சியார்

### சரவணபவனுக்கு ஆதரவு திரட்டும் கூட்டத்தில் வீர மறவர்கள் பிறந்த மண்ணில் வாழ்பவர் நாம் எனவும் முன்னாள் கல்விப் பணிப்பாளர் பெருமிதம்

கரணவாய், ஜூலை 23

வீர மறவர்கள் பிறந்த வடமராட்சி மண்ணில் வாழுகின்ற எமது மக்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்காக எவருக்கும் அடிபணிந்து வாக்களிக்கமாட்டார்கள். தேசவிரோத சக்திகளுக்கு இந்தத் தேர்தலில் தக்க பதில் கொடுப்பார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வு நிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணபவானந்தன்.

கடந்த திங்கட்கிழமை மாலை வடமராட்சி மேலைப்புலோலி கந்த முருகேசனார் சனசமூக நிலையமுன்றலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு ஆதரவு திரட்டும் வகையில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொதுமக்கள், சனசமூக நிலையத்தினர் எனப் பெரும் எண்ணிக்கையான கூட்டம் அங்கு திரண்டிருந்தது.

தொடர்ந்து உரையாற்றிய சரவணபவானந்தன் தெரிவித்ததாவது:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒன்று திரண்டு வாக்களித்து எமது வாக்களிப்பு வீதத்தைக் கூட்ட வேண்டும். அப்போதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.இதன்மூலம்எமது பேரம்பேசும் சக்தியை வலுப்ப டுத்த முடியும்.

எமது தேசியத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள், மக்களின் சொத்துக்களைச் சூறையாடியவர்கள், கொலைக் கலாசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டவர்கள், மக்களை ஏமாற்றிப் பிழைத்தவர்கள் பேரினவாத சக்திக ளால் கைவிடப்பட்ட நிலையில் தற்போது தனிக்கட்சியில் போட்டியிட்டு மக்களிடம் வாக்குப்பிச்சை கேட்கின்றார்கள். மகேஸ்வரி நிதியம் என்ற பெயரில் மணல் மோசடியில் ஈடுபட்டார்கள். இவர்களால் எத்தனை பார ஊர்திகளின் உரிமையாளர்கள் நடுவீதியில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இப்படிப்பட்டவர்கள் எந்த முகத்துடன் எம்முன் வாக்குக் கேட்டு வருகின்றார்கள்.

மறவர்கள் பிறந்து வளர்ந்து வீர தீரச் செயல்களைப் புரிந்தவர்கள் வாழ்ந்த மண்ணில் வாழும் வடமராட்சி மக்கள் தமிழ்த் தேசியத்தின் மீது அளவற்ற பற்றுக் கொண்டவர்கள். அவர்கள் பேரினவாத சக்திகளின் அடிவருடிகளின் அற்ப சொற்ப சலுகைகளுக்கு அடிபணிந்து போக மாட்டார்கள். மாறாக தமிழ்த் தேசியத்தின் குரலாக ஒலித்து வருகின்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து அதன் கரங்களைப் பலப்படுத்துவார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எமக்கு உண்டு.

மக்கள் சேவையை மகேசன் சேவையாகச் செய்து வருகின்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி. அவரை அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெறச் செய்ய வேண்டும் அப்போதுதான் அவரையும் அவரது ஊடகங்களையும் தமிழ் மக்களின் உரிமைக்காக இன்னும் தீவிரமாகக் கொடுக்க வைக்க முடியும். அதற்கு எமது மக்கள் ஒன்று திரண்டு வாக்களிக்க வேண்டும் -என்றார்.

இந்தக் கருத்தரங்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர்கள் க.பரஞ்சோதி, பொ.குகதாசன் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (உ)

## நீதிமன்ற நடவடிக்கைக்கு இடையூறு: இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் யாழ். மாநகரசபை மைதானத்தில் சினிமா பாடல்களை ஒலிபரப்பிய இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அண்மையில் தென்னிந்திய இசையமைப்பாளரொருவர் கலந்து கொண்ட இசைநிகழ்ச்சியொன்று யாழ். மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

அன்றைய தினம் காலைவேளை நீதிமன்ற நடவடிக்கைகள் இடம் பெற்றபோது பாடலை ஒலிபரப்பு செய்த இருவருக்கே அபராதம் விதிக்கப்பட்டது. (ற-103)

## கைபேசியில் ஆபாசப் படம் இளைஞருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படங்களை வைத்திருந்த ஆவரங்காலைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை யாழ். பஸ் நிலையப் பகுதியில் வைத்து கைது செய்ததாகத் தெரிவித்து பொலிஸார் நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இளைஞரை 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறும் 50 மணித்தியாலம் சமூகசேவை செய்யுமாறும் உத்தரவிட்ட நீதிவான் பெ.சிவகுமார் ஆபாசக்காட்சிகள் அடங்கிய நினைவக அட்டையை அழிக்குமாறும் உத்தரவிட்டார். (ற-103)

# கூட்டமைப்பே அங்கீகரிக்கப்பட்டுள்ளது தமிழரின் நம்பிக்கைக்குரிய கட்சியாக

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு



உலக அரங்கில் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கீ கரிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகத்தான் சர்வதேச நாடுகள் இன விடுதலைக்கான தீர்வு ஆலோசனைகளில் எம்மையும் இணைத்துச் செயற்படுகின்றன. எனவே அந்த அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் மக்கள் ஆதரவை இந்தத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்த வேண்டும்.

யாழ். தேர்தல் தொகுதிக் கிளை மற்றும் ஊரகக் கிளை உறுப்பினர்களுடனான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை மாட்டீன் வீதியிலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் யாழ்ப்பாணத் தொகுதிக் கிளைத் தலைவரும் தேசியப் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளவருமான சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெற்றபோது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது, கொள்கைகளும் இலட்சியங்களும் நேர்மையாய் இருக்கும் போது மக்களால் நேசித்து தெரிவு செய்யப்படுகின்றன. எமது போராட்டம் சந்தர்ப்ப சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப பல வழிகளில் முன்னெடுக்கப்பட்டாலும், அதன் இலக்கு என்றும் ஒன்றுதான். அதைத் தொடர்ந்து நகர்த்துவது மக்கள் கைகளில்தான் உள்ளது.

எம்மைத் தோற்றுப்போன சமுதாயம் என முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ கூறினார். அவரால் எமது பகுதியில் எப்போதாவது வெற்றி பெற முடிந்ததா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று கேட்கிறார்கள். நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் தமிழர்களின் உரிமைக்காக, மக்களின் அன்றாடத் தேவைகளுக்காக குரல் கொடுப்பது யார்? நில அபகரிப்பு, சிறையில் வாடுவோர் தொடர்பாக வழக்குகள் தொடுக்கப்பட்டு வெற்றிகள் கிடைத்தது யாரால்? அரசுடன் ஒட்டியிருந்து அமைச்சுப் பொறுப்புக்களை வகித்தவர்கள் எமது இன விடுதலைக்காக எப்போதாவது நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினார்களா?

மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வழங்குமாறு நாம் தொடுத்த வழக்குக்கு சாதகமான தீர்ப்பை வழங்கியதால் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தூக்கி எறியப்பட்டார். சம்பூர், வலி. வடக்கு விடுவிக்கப்படுகிறது. சர்வதேச அரங்கில் போர்க்குற்ற விசாரணை அறிக்கைகள் வருகின்றன. இவைகள் த.தே.கூட்டமைப்பில் செயற்பாடுகளால் நேர்ந்தவை என்பது மக்களுக்குத் தெரியும். தொடர்ந்து எமது அரசியல் தீர்வுக்கான வழிகளை முன்னகர்த்த திடசங்கற்பம் கொண்டு மக்கள் விழிப்புடன் செயற்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிக ஆசனங்களைப் பெற்றுத்தர வீட்டுச் சின்னத்தைத் தெரிவு செய்யவேண்டும் என்றார்.

வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் தேசியப்பட்டியலில் இடம் பெற்றுள்ள சூ.சே.குலநாயகம், மேரியம்மா ஆகியோரும் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (உ-135)

# வாழை, பப்பாசி செய்கையாளருக்கு மானிய விலையில் நீர்ப்பாசன கருவி

அச்சுவேலி, ஜூலை 23

யாழ்.மாவட்டத்தில் வாழைச் செய்கை மற்றும் பப்பாசிச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் தூவல் நீர்ப்பாசன கருவி சாதனங்கள் வழங்கப்படுகின்றன. அரை ஏக்கருக்குக் குறையாத விஸ்தீரணத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களும் பயிர்ச்செய்கையில் ஈடுபட முன்னாயத்தம் செய்வோரும் மானிய அடிப்படையில் தூவல் நீர்ப்பாசன கருவி சாதனங்களை பெறுவதற்கு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்துக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் புதிதாக வாழைப் பயிர் செய்வோரை ஊக்குவிப்பதற்கும் பப்பாசிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பதற்கும் யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களம் மானிய விலையில் தூவல் நீர்ப்பாசனக் கருவி சாதனங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வாழைப் பயிர்ச் செய்கையில் புதிதாக நவீன உத்திகளைக் கையாண்டு பயிர் செய்வோர் மிகமிகக் குறைவு. பெருமளவில் 10 வருடத்துக்கு மேற்பட்ட வாழைப் பயிர்களே பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேநேரம் குறுகிய காலத்தில் நிறையவருமானம் தரும் பயிராக பப்பாசி பயிர்ச்செய்கை அமைந்துள்ளது. பப்பாசிப்பழத்துக்குதளம்பல் இல்லாத விலை நிலவரம் காணப்படுவதோடு சந்தை வாய்ப்பும் உள்ளது. அத்துடன் நாளாந்தம் நல்ல வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மரபுவழி நீர்ப்பாசனமுறையினால் பெருமளவு நீர் வீண்விரயம் செய்யப்படுவதோடு நீர்ப்பாசனத்துக்கான செலவும் மனித உழைப்பும் தேவைப்படுகின்றது. தூவல் நீர்ப்பாசனம் மூலம் நீர் வீண்விரயம் செய்யப்படுவதும் குறைவு, செலவும் சுருக்கம், மனித உழைப்பும் இல்லை. எனவேதான் நவீன உத்திகளுடன் கூடிய தூவல் மற்றும் சொட்டு நீர்ப்பாசன முறைகள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. என யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் கி.ஸ்ரீ பால சுந்தரம் தெரிவித்தார். (ற-11)

# சொந்த நிலங்களே எங்களுக்கு தேவை

## வலி.வடக்கு மக்கள் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

எங்கள் சொந்த நிலங்கள்தான் எங்களுக்குத் தேவை. மாற்றிடங்களில் குடியேறுவதற்கு நாங்கள் தயாரில்லை. மயிலிட்டித் துறைமுகம் சுனாமியால் சேதமடைந்திருந்தால், அதனைப் புனரமையுங்கள். அதை விடுத்து, புதிதாக வேறிடத்தில் கட்டித் தருகின்றோம் என்று கதை விடாதீர்கள். – இவ்வாறு காட்டமாகத் தெரிவித்திருக்கின்றார், வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம்.

மயிலிட்டி துறைமுகம் சேதமடைந்திருப்பதன் காரணமாக, மயிலிட்டி மக்களை வளலாயில் புதிய துறைமுகத்தை நிர்மாணித்து குடியேற்றும் திட்டத்தை, கடற்படையினர் முன்வைத்திருந்தனர். குறித்த திட்டத்துக்கு, எதிர்ப்புத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

சுனாமியால் மயிலிட்டி துறைமுகம் சேதமடைந்தது என்று தெரிவிக்கின்றனர். ஆனால் உண்மையில் துறைமுகம் பெரியளவில் சேதமடையவில்லை. துறைமுகத்திலிருந்து சில சிமெந்து உருளைகள் கடலில் வீழ்ந்துள்ளன. அவற்றை பாரம் தூக்கியின் உதவியுடன் மீண்டும் நிமிர்த்த முடியும். அதனைப் புனரமைப்புச் செய்வது, புதிய துறை முகத்தை நிர்மாணிப்பதை விட எளிதான காரியம்.

கடற்படையினர் சொல்வதைப் போல சேதமடைந்த துறைமுகத்திலிருந்து, எப்படி சிமெந்து மூடைகளும் சீனி மூடைகளும் இறக்குகின்றனர். சேதம் அடைந்தது என்பதைக் காரணம் காட்டி, எமது மக்களை மயிலிட்டியிலிருந்து விரட்ட முடியாது. எங்கள் ஊரும், எங்கள் துறைமுகமும் எங்களுக்குத் தேவை.

அதனைத் தராவிட்டால், தேர்தலின் பின்னர் அஹிம்சை ரீதியாகப் போராடி நாம் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை. நல்லாட்சி அரசில் அவ்வாறு நடக்க வேண்டிய தேவை இருக்காது என்று கருதுகின்றோம்.– என்றுள்ளது. (ந–5)



கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் தெல்லிப்பழையைச் சேர்ந்தவரான நலன்விரும்பி ஒருவர் வேலணைப் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட நான்கு மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் துவிச்சக்கர வண்டிகளையும், லண்டனில் வதியும் மற்றொரு சமூக ஆர்வலர் ஒருவர் கண்பார்வையற்ற நான்கு பேருக்கு உதவித் தொகையாக 5,000 ரூபாவும் வழங்கியுள்ளனர். இந்த உதவிகள் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது கடந்த வாரம் வேலணைப் பிரதேச செயலகத்தில் வைத்து யாழ்.மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனனால் உரியவர்களுக்கு வழங்கப்பட்டன. (ந–7)

# மாணவர்களைக் குறிவைத்து 'கோலா ஸ்பிறே' எனும் பானம்

## எச்சரிக்கின்றது சுகாதார அமைச்சு

தென்மராட்சி, ஜூலை 23

பாடசாலை மாணவர்களை குறிவைத்த சிறிய பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட கோலா ஸ்பிறே என்னும் பானம் பாடசாலைகளுக்கு அண்மித்த பகுதிகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பானத்தை வாயினுள் விசிறக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் உணவுச் சட்டத்தின் சுட்டுத் துண்டு தொடர்பான ஒழுங்கு விதிகளை மீறி சுட்டுத் துண்டிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பானத்தில் அடங்கியுள்ள பொருள்கள் தொடர்பில் விளக்கமாக சுட்டுத் துண்டில் குறிப்பிடப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்தவர் பாலித மகிபால அது தொடர்பாக உணவுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக நடவடிக்கை எடுக்குமாறும் அறிவித்ததுடன், வேறு உற் பத்திகள் உணவுச் சட்டத்தின் விதி களை மீறி சந்தையில் விற்பனைக்கு இருக்குமாயின் அது தொடர்பாக விழிப்பாக இருக்கும்படியும் அறிவித்துள்ளார்.

அதேவேளை கிண்டர் ஜோய் என்னும் இறக்குமதி செய்யப்பட்ட சொக்கலட் சந்தைகளில் காணப்படின் அவற்றையும் விற்பனைக்கு விடாமல் அப்புறப்படுத்துமாறும் அறிவித்துள்ளார். (ந–9)

# ஒரு மாதமாக இளைஞனை காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 23

மனநிலை பாதிக்கப்பட்ட நாவற்குழியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடந்த ஒரு மாதகாலமாகக் காணவில்லை என்று அவரது பெற்றோர் முறைப்பாடு செய்துள்ள தாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் யூட் றொசான் (வயது 18) என்ற இளைஞனே காணாமல் போயுள்ளார்.

அவருக்குள்ள நோய் காரணமாக சிகிச்சைக்காகக் கடந்த மாதம் 15 ஆம் திகதி தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு பெற்றோருடன் சென்றிருந்தார். அதன்பின்னர் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு அண்மையில் பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்றுள்ளார் என்றும் ஆனால் இதுவரை அவர் வீடு திரும்பவில்லை என்றும் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந–4,106)

# விவசாயப் பொருள்களை இனி சுகாதார பரிசோதகர் சோதிப்பார்

## அதிகாரம் வழங்கியது சுகாதார அமைச்சு

தென்மராட்சி, ஜூலை 23

விவசாயத்துக்குப் பயன்படுத்தும் பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்களை பரிசோதனை செய்யும் அதிகாரம் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் விவசாயத்துக்குப் பயன்படுத்தும் கிருமிநாசினிகள், களைநாசினிகள், உரவகைகள் உட்பட விவசாயத்துக்குப் பயன்படுத்தும் உற்பத்திப் பொருள்களை விவசாயத் திணைக்களத்தினரே பரிசோதனைகளை நடத்தி வந்துள்ளனர். பாவனைக்குதவாத மற்றும் தரம் குறைந்த பொருள்கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதால் தாம் ஏமாற்றப்படுவதாக விவசாயிகள் முறைப் பாடு செய்தததையடுத்து இவற்றினைப் பரிசோதனை செய்வதுடன் பொருளின் தரம் மற்றும் காலாவதி திகதி போன்றவற்றை பரிசோதிக்கும் அதிகாரம் விவசாயத் திணைக்களத்துடன் பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் விவசாய பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்கள் உரிய உரிமம் பெற்றுள்ளதா என்பதை பரிசோதிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பாலித மகிபால அறிவித்துள்ளார். (ந–9)

# பாடசாலை காவலாளி சடலமாக மீட்பு

மட்டக்களப்பு பட்டிருப்புக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் இரவுவேளைக் காவலாளியாக கடமையாற்றிய இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்மாந்துறையில் வசிக்கும் அகமட் லெப்பை முகமட் சபீக் (வயது–23) என்ற இளைஞரே இவ்வாறு மீட்கப்பட்டவராவார்.

குறித்த பாடசாலைக்கு கடந்த திங்கட்கிழமை இரவுக் கடமைக்குச் சென்ற இந்த இளைஞன் மறுநாள் காலையிலும் கதிரையில் உட்கார்ந்திருந்ததைக் கண்டு பாடசாலைக்கு வந்த மாணவர்கள் அழைத்துள்ளனர். அப்போது அவர் எதுவும் பேசாமல் இருந்ததை அடுத்து ஆசிரியர்கள் மற்றும் அதிபருக்கு இதுகுறித்து மாணவர்கள் தெரியப்படுத்தினர்.

இளைஞன் உயிரிழந்துள்ளமை அறியப்பட்டதை அடுத்து அது குறித்து வெல்லாவெளிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மற்றும் திடீர் மரணவிசாரணை அதிகாரி த.கராளசிங்கம் ஆகியோர் சடலத்தை பார்வையிட்டனர். சடலம் உடற்கூற்றுச் சோதனைக்காக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது. (ந)

# வெங்காய செய்கையில் விவசாயிகள் நாட்டம்

## தற்போதைய காலநிலையால்



யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் காலநிலையைக் கருத்தில் கொண்டு அநேகமானவர்கள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வலிகாமம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் அனேகமான விவசாயிகள் இந்தக் கோடைகால வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். தற்போது கடும் வறட்சி என்றாலும் வெங்காயப் பயிர்கள் ஓரளவு நல்ல நிலையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் தற்போது வெங்காயத்தின் விலை என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. நேற்று மன்தினம் திருநெல்வேலி சந்தை நிலவரப்படி ஒரு கிலோ சின்ன வெங்காயம் 150 ரூபாவாக விற்கப்பட்டது.

கடந்த மே மாதத்தில் கொட்டித் தீர்த்த கோடை மழையால் குடாநாட்டில் பயிரிடப்பட்ட வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்த வெங்காய செய்கை பாதிப்பால் அனேகமான விவசாயிகள் நஷ்டப்பட்டனர். வெங்காய பயிர்கள் இந்த மழையால் முழுமையாகவே அழுகிப் பழுதடைந்தன. இதனை அடுத்தே வெங்காயத்தின் விலை அதிகரித்துச் சென்றது.

இந்த வெங்காய விலை அதிகரிப்பை அடுத்து அனேகமாக விவசாயிகள் தற்பொழுது வெங்காய செய்கையில் ஈடுபட்டும் வருகின்றனர். (ந–17)

# சட்டவிரோத கருக்கலைப்பால் குடும்பப் பெண் உயிரிழந்தார்

## வைத்தியசாலை சிற்றூழியர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 23

குடும்பப் பெண் ஒருவர் சட்ட விரோதமாகத் தனது கருவைக் கலைக்க முற்பட்டதால் அவருக்குப் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். அதற்குக் காரணமானவர் என்று கூறப்படும் வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சுமார் 30 வயதுடைய குறித்த பெண்ணும் கணவனும் ஒன்றாகவே வசித்து வருகின்றனர். அவர்களுக்கு 2 குழந்தைகளும் உள்ளன. இந்நிலையில் 3 ஆவது கரு உருவாகியதை அடுத்து, வறுமையும் கருத்தில் கொண்டு அந்தக் கருவைக் கலைப்பதற்கு கணவன் மனைவி இருவரும் தீர்மானித்த னர் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அது தொடர்பில் வைத்தியசாலைக்குச் சென்று கருக்கலைக்க முற்பட்டதாகவும் எனினும் அந்த வைத்தியசாலையில் பணி புரியும் பெண் சிற்றூழியர் ஒருவரே அதனைத் தனது பொறுப்பில் எடுத்துச் செய்ததாகவும், அதற்குரிய பணத்தை தம்மிடமிருந்து அந்தப் பெண் பெற்றுக் கொண்டிருந்தார் என்றும் உயிரிழந்த பெண்ணின் கணவன் ஆரம்ப விசாரணையில் கூறியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் அவர்கள் முதலில் வேறு எங்கோ கருக்கலைப்புச் செய்துள்ளனர் என்றும் தன்னிடம் வரும் போது பதட்டத்துடனேயே வந்தார்கள் என்றும் கைது செய்யப்பட்டுள்ள பெண் முறைப்பாடு கூறியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவர் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந–4)

# தேர்தல் வன்முறை முறைப்பாடுகள் கிளி.மாவட்டத்தில் பதிவாகவில்லை

## அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிப்பு

நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் இது வரை எந்த விதமான வன்முறை சம்பவங்கள் தொடர்பான பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை எனகிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

எதிர் வரும் நாடாளுமன்ற தேர் தொடர்பாக நேற்று அரச அதிபரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது–

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 80 ஆயிரம் வாக்காளர்களுக்காக இம்முறை 96 வாக்கு அளிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. அதில் 7 வாக்கெண்ணும் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் வன்முறைகளுக்கான முறைப்பாடுகளை பதிவு செய்வதற்காக கிளிநொச்சி மாவட்டத்தின் 3 பிரதேச செயலகங்களும், கரைச்சி பிரதேச செயலகத்துக்காக மாவட்ட செயலகமுமாக மொத்தம் 4 முறைப்பாட்டு நிலையங்கள் அடை யாளப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் வன்முறைகளுக்கான முறைப்பாடுகளை பதிவு செய்வதற் காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது வரை கிளிநொசசி மாவட்டத்தில் தேர்தல் வன்முறை சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை. முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை. தேர்தல் கடமைகள் அனைத்தும் சுமுகமான முறையில் நடைபெற்று வருகின்றன. – என்றார். (ற–21)

# சாரதி அனுமதிப் பத்திரமில்லாத முதியவருக்கு கட்டாயச் சிறை

கிளிநொச்சி, ஜூலை 23

அனுமதிப்பத்திரம் இன்றி வாகனத்தை ஓட்டியமை உட்பட 3 குற்றத்துக்காக் கைது செய்யப்பட்ட 58 வயது முதியவருக்கு ஒரு மாத கால கட்டாய சிறைதண்டனையும் 15ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்து தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ வஹாப்தீன்.

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, வீதி விபத்தை ஏற்படுத்தும் வகையில் வாகனத்தை செலுத்தியமை தொடர்பான மூன்று குற்றங்களுக்காக முழங்காவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 55 வயதுடைய முதியவர் ஒருவர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கினை தீவிரமாக விசாரணை செய்த நீதிபதி முதியவர் வீதியில் பயணித்தவர்களை பீதியில் ஆழ்த்தியதாக கூறி அவருக்கு 1 மாத கால கட்டாய சிறை தண்டனையும், 15ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு உத்தரவிட்டார்.(ற–21)

# கடைத் தொகுதி திறப்பு விழா

சாவகச்சேரி, ஜூலை 23

சாவகச்சேரி பிரதேச சபையின் எழுதுமட்டு வாழ் சந்தைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடைத்தொகுதி திறப்புவிழா இன்று வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் திருமதி த.தர்சினி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராசாவும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச்சபையின் உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை, இளைப்பாறிய அதிபர் ஐ.வரதராசா, உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம், இளைப்பாறிய கிராம அலுவலர் வ.வேல்முருகு ஆகியோரும் கலந்துகொள்வர். (ற–131)

# நீதிமன்று முன்பாக ஒலி எழுப்பியவருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்திற்கு முன்பாக ஒலி எழுப்பினார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குற்றவாளிக்கு 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று. கிளிநொச்சி மாட்ட நீதிவான் நீதிமன்றிற்கு முன்பாக உள்ள ஏ–9 வீதியில் ஒலி எழுப்புவதற்கு தடை செய்யப்பட்ட பகுதியில் வாகன ஹோரன் ஒலியை எழுப்பினார் என்ற குற்றச்சாட்டில் வாகன சாரதிக்கு எதிராக நீதிமன்றத்தின் முன்பாக நின்ற போக்குவரத்து பொலிஸாரால் மன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது சாரதியை தீர விசாரித்த நீதிமன்று வீதி ஒழுங்கு முறைகளை மீறியதால் 3ஆயிரம் ரூபா தண்டம் வழங்குமாறு உத்தரவிட்டதோடு இனிமேல் இவ்வாறு ஒலி எழுப்பும் பட்சத்தில் கடுமையான தண்டனை வழங்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (ற–21)

# சர்வதேச சுகாதார அதிகாரியென யாழ். நகர கடைகளில் சோதனை

## மனநிலை பாதிக்கப்பட்டவரின் திருவிளையாடல்

சர்வதேச சுகாதார அதிகாரி என்று கூறிய ஒருவர், தான் ஜனாதிபதி மைத்திரிபாலவின் அனுமதியுடன் வந்துள்ளதாகக்கூறி யாழ்.நகரிலுள்ள உணவகங்கள் மற்றும் கடைகளுக்குள் சென்று பரிசோதனை நடத்தி சுகாதார சீர்கேடாக இருந்தவற்றை ஒழுங்கமைக்குமாறும் தவறின் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வேன் என்று எச்சரித்துள்ளார் . அதையடுத்து பல கடை கள், உணவகங்கள் உடனடியாக முன்னரைவிட துப்புரவாக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது. ஆனால் அவ்வாறு வந்தவர் சுன்னாகத்தைச் சேர்ந்த மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவர் என்று பின்னர் தெரிய வந்துள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த நபர் தன்னைச் சர்வதேச சுகாதார வைத்திய அதிகாரி என்று கூறி அதனைக் குறிக்கும் அடையாள அட்டை ஒன்றையும் கழுத்தில் மாட்டிக் கொண்டு சென்றே யாழ்.நகரக் கடைகளில் இந்தத் திருவிளையாடலைப் புரிந்துள்ளார்.

அறிவுறுத்தல் வழங்கி குறித்த நேரத்தில் குறைபாடுகளைச் சீர்செய்யத் தவறின் சட்ட நடவடிக்கைதான் என்றும் அந்த நபர் கடுமையாகவே கூறிச் சென்றுள்ளார். அவரை நம்பிய கடைக்காரர்களும், உணவகத்தினரும் பொருள்களை உரிய முறையில் சுகாதாரமாக வைத்துள்ளனர். மரக்கறிகளும் ஒழுங்கு படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரே அவ்வாறு வந்தவர் அப்படியான அதிகாரி அல்ல என்பது தெரிய வந் தது. சில கடைகளில் பொருத்தப் பட்டிருந்த சிசிரிவி கமராக்களைக் கொண்டு அது தொடர்பில் கடைக் காரர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்வாறு வந்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என் றும் அவர் சுன்னாகத்தைச் சேர்ந்த வர் என்றும் பின்னர் தெரியவந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இப்படியான சம்பவங்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். அத்தகைய கதைகளைக் கூறி யாராவது வந்தால் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையைப் பார்வையிட்டுப் பரிசீலித்த பின்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் உணவு மருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் த்விர்ந்த எவரையும் அனுமதிக்க வேண்டாம். சந்தேகமான நபர்கள் வந்தால் உடனடியாக மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு 021 222 2645 என்ற இலக்கத்துடன் அல்லது பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் திவ்வியகுமாரன் 071 8627615 ஆகியோருக்குத் தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கும்படியும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ற–4)

# மணல் அனுமதிப் பத்திரத்தை எடுத்து விற்றவருக்கு மறியல்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் மணல் அனுமதிப் பத்திரத்தை அனுமதியின்றி எடுத்து, அதை மணல் ஏற்றும் நபர்களுக்கு விற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கரைச்சி பிரதேச செயலாளருடைய சாரதியை தொடர்ந்தும் 8ஆம் மாதம் 5ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி.

நேற்று மாலை கிளிநொச்சி மாவட்ட நீதிவான நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட குறித்த வழக்கு விசாரணையிலே நீதிபதி இந்த உத்தரவை வழங்கினார்.

கடந்த ஒரு மாதகாலத்திற்கு முன்பு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயகத்திலுடைய செயலாளரது சாரதியாக கடமையாற்றி வந்த நபர் பிரதேச செயலகத்தினுடைய மணல் அனுமதிப்பத்திரத்தை களவாக எடுத்து மணல் ஏற்றும் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அந்த அனுமதிப்பத்திரத்துடன் மணல் ஏற்றி வந்த சந்தேக நபர் ஒருவரை கிளிநொச்சி போக்கு வரத்து பொலிஸார் கைது செய்திருந் த னர். கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற் கொள்ளும் போது அனுமதிப்பத்திரத்தை வழங்கிய குறித்த சாரதி உட்பட அறுவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணைகளின் போது முதலாவது சந்தேக நபரான குறித்த சாரதி மாத்திரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஏனைய ஐவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று இதனுடைய வழக்கு விசாரணை மன்றில் எடுத்து கொள்ளப்பட்டது. இதன்போதே வழக்கை தீர விசாரித்த கிளிநொச்சி மாவட்ட நீதிபதி முதலாவது சந்தேக நபரான குறித்த சாரதியை எதிர்வரும் 8ஆம் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற–21)

# நெல்லுக்கு உரிய விலை இல்லை நெருக்கடிக்குள் கிளி. விவசாயிகள்

கிளிநொச்சி, ஜூலை 23

சிறுபோக நெற் செய்கை வெற்றியளித்தபோதும் நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாக கிளிநொச்சி இரணைமடு விவசாய சம்மேளன செயலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடு குளத்திற்குட்பட்ட சுமார் 11 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இம்முறை சிறுபோக நெற் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இப்பயிர் செய்கையிலும் மூன்று மாதத்தின் பின்னரான நெல் விளைச்சலிலும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் வெற்றி கண்டிருந்தனர்.

ஆனால் அவர்களுடைய கடும் உழைப்புகுரிய பயனை அவர்கள் பெறமுடியாதுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தற்போது ஒரு மூடை நெல் ஆயிரத்து 800 ரூபா வரையிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றது. இது விவசாயிகளுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்துகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து சம்மேளன செய லாளர் மேலும் தெரிவித்தா வது:–

நெல் லினுடைய விலையானது வீழ்ச்சியடைந்துள்ளது. நெல் சந்தைப்படுத்தும் அதிகார சபையினால் நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று கோரி இரணைமடு விவசாய சம்மேளத்தால் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அரச அதிபர் இல்லாததன் காரணமாகவோ என்னவோ அது இன்னும் நடைமுறைப்படு த்தவில்லை. எனவே அரச அதிபர் விவசாயிகளின் நன்மை கருதி சிறுபோக விளைச்சலுக்கான சரியான விலையை பெற்று கொடுக்க வேண்டும்.– என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 9 குளங்களின் கீழ் மொத்தமாக இம்முறை 15ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் நெற் பறிர்செய்கை மேற் கொள்ளப்பட்டிருந்தது. (ற–21)

# மைத்திரியின் ஆசியுடன் பிரதமர் ஆசனத்தில் அமருவார் மஹிந்த

## சு.க. உறுப்பினர்களின் நம்பிக்கை இது

கொழும்பு, ஜூலை 23

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரு வெற்றியடையும் என்றும், அதன்பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆசியுடன் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ஆசனத்தில் அமருவார் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இப்படி கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கமாட்டார் எனவும் தேசியப் பட்டியலில் அவருக்கு இடமில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னதாக அறிவித்திருந்தார். எனினும், கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள், மஹிந்த வேண்டும்" என வலியுறுத்தினர். இதனால், கட்சியின் ஒற்றுமை மற்றும் பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஜனாதிபதி வேட்புமனு வழங்கினார்.

எதிர்வரும் 17ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றதும், நாடாளுமன்றத்தில் பெரும்பாலானவர்கள் மஹிந்தவையே பிரதமராக்க வேண்டும் எனக் கோருவார்கள். எனவே, ஜனாதிபதியின் விருப்பத்துடன் மஹிந்த ராஜபக்ஷ பிரதமரா வார்.

அதேவேளை, ஜனாதிபதியின் அறிவிப்பையடுத்து, நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தீர்மானித்தேன். இதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தேன். எனினும், ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி உட்படப் பல தரப்பினரும் என்னுடன் கலந்துரையாடி முடிவை மாற்றுமாறு கேட்டனர். அத்துடன், எனது ஆதரவாளர்களும் என்னைக் கைவிடவில்லை.

நான் அரசியலில் இருந்து விலகியிருந்தால் அது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாக அமைந்துவிடும். எனது விலகலை வைத்து அவர்கள் பிரசாரம் நடத்துவார்கள். எனவே தான் முடிவு மாற்றப்பட்டுள்ளது– என்றார். (க)

# பிடித்தவரை ஜனாதிபதி பிரதமராக்க முடியாது

## உதய கம்மன்பில கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதியே பிரதமரை நியமிக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், ஜனாதிபதிக்கு பிடித்தவரை பிரதமராக நியமிக்க முடியாது. ஜனாதிபதியானாலும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். – இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மஹிந்தவால் உயிர்பெற்ற நபர்களில் ரணில் விக்கிரமசிங்க முக்கியமானவர். தனது குடும்பத்துக்கு ஒட்சிசன் கொடுக்கவே மஹிந்த மீண்டும் வருவதாக ரணில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியான தோல்விகளை சந்தித்த வேளையில் மஹிந்தவே ரணிலுக்கு ஒட்சிசன் கொடுத்தார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியினர் எதிர்க் கட்சியாக செயற்பட்ட சந்தர்ப்பத்தில் ஊடக சுதந்திரம், ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் பேசினார்கள். ஆனால் இன்று ஆட்சிக்கு வந்தவுடன் இவர்களின் வாக்குறுதிகள் அனைத்தையும் மறந்து தமது ஆட்சியைத் தக்க வைக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் செய்து வருகின்றனர். ஆனால் நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இலங்கையில் கடந்த காலத்தில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வோம்.

மக்களுக்கு காணிகளை கொடுப்பதும் மீள்குடியேற்றங்களை செய்வதுமாக அரசு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. ஆனால் மக்கள் இவற்றின் பின்னணியைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் மக்களுக்கு காணிகளை கொடுப்பதாக கூறி வியாபார நிறுவனங்களுக்கும் தனியார் துறையினருக்கும் சர்வதேச நிறுவனங்களுக்குமே காணிகளை கொடுக்கின்றனர். மக்களுக்கு கொடுப்பதாக காட்டிவிட்டு அதிகளவிலான நிலங்களில் தனியார் துறையினரது வியாபார நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

அதுமட்டும் இல்லாது ரணில் விக்கிரமசிங்க இன்று மஹிந்தவை விமர்சிக்கின்றார். தனது குடும்பத்துக்கு ஒட்சிசன் கொடுக்கவே மஹிந்த மீண்டும் வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியான தோல்விகளை சந்தித்த வேளையிலும் ரணிலின் தலைமைப்பதவி பறிபோக நேர்ந்த நிலையிலும் மஹிந்தவே ரணிலுக்கு ஒட்சிசன் கொடுத்தார்.

இன்று வடக்கில் சுதந்திரமாகச் சென்று தமிழ் மக்களின் வாக்குகளை ரணில் கேட்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்ததும் இந்த மஹிந்தவேயாவார். இன்று நெடுஞ்சாலைகளில் வேகமாகச் சென்று தேர்தல் பரப்புரைகளைச் செய்ய முடிந்துள்ளமையும் மஹிந்தவால் தான் என்பதை ஏற்க வேண்டும். மஹிந்தவினால் உயிர்பெற்ற நபர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் ரணில் விக்கிரமசிங்கவேயாவார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் உரிமையோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ரணிலுக்கு இல்லை. அதேவேளையில் ஜனாதிபதியால் தான் பிரதமர் நியமிக்கப்படுவார்.–என்றார். (ற)

# பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும் மஹிந்த

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அழைப்பு



கொழும்பு, ஜூலை 23

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகின்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பகிரங்க விவாதத்துக்கு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை வேட்பாளரானதம்மோடுநேரடிதொலைக் காட்சி விவாதம் ஒன்றுக்கு வருமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்த பகிரங்க அழைப்பை விடுத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றாலும் அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட மாட்டாது என்பதை ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்துள்ளார் என்றும் அகிலவிராஜ் காரியவசம் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராக குருணாகல் மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.அவர் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்றாலும் அவருக்கு பிரதரமர் பதவி கிடைக்கப்போவதில்லை என்பதையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் வருவிருக்கும் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை வேட்பாளராக நான் களமிறங்கவுள்ளேன். எனக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக மஹிந்த பரப்புரைகள் செய்கின்றார். இந்த நிலையில் தண்ணீர், மருந்து பொருள்களின் விலை அதிகரித்துவிட்டதாகவும் அவற்றை கொள்வனவு செய்ய அதிக தொகையைச் செலவிட நேரிட்டுள்ளதாகவும் மஹிந்த தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இது ஐக்கிய தேசிய கட்சி அரசு உருவாக்கிய பிரச்சினை அல்ல. கடந்த அரசின் ஆட்சிக் காலத்திலும் குருநாகல் மாவட்டத்தில் மட்டுமன்றி முழு நாட்டிலும் இந்தப் பிரச்சினைகள் இருந்தன. இது தொடர்பில் 10 வருட ஆட்சியில் அறிந்திருக்காத மஹிந்த தற்போது இதனை விளங்கிக் கொண்டுள்ளார்.

அதனால் அரசியல் மேடைகளில் ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் செயற்பாடுகள் குறித்து விவாதிப்பதை, விமர்சிப்பதை விடுத்து அவர் நேரடி தொலைகாட்சி விவாதம் ஒன்றுக்கு வர வேண்டும். அந்த நிகழ்வின் போது ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் செயற்பாடு மற்றும் குருநாகல் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் விரிவான விவாதம் ஒன்றை நடத்த நான் தயாராகவே உள்ளேன்.

தற்போது குருநாகல் மாவட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் தயாசிறி ஜயசேகர, ஜோன்சன் பெர்னாண்டோ ஆகியோருக்கிடையில் தத்தமது வாக்கு வங்கியை அதிகரித்து கொள்வது தொடர்பில் முரண்பாடு நிலவுகின்றது.

மறுபுறம் கடந்த காலங்களில் பொதுக் கூட்டங்களுக்கு மக்களை ஏற்றிச் செல்ல முன்னாள் ஜனாதி பதி பெற்றுகொண்ட வாகனங்களுக்கு மட்டும் 3 கோடி ரூபா கடன் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இவ்வாறு பல வகையிலும் அவர் மக்கள் சொத்துக்களை சூறையாடியுள்ளார்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அநுராதபுரம் கூட்டத்தின் போது பெரகூட்டில் வந்திருந்தார். ஆனால் அவரது கூட்டத்துக்காக தூரப் பிரதேசங்களிலிருந்து பஸ்கள் மூலம் வரவழைக்கபட்ட ஆதரவாளர்கள் மீண்டும் வீடு செல்ல பணம் இல்லாத நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதி ஒருவரின் உதவியோடு வீடு திரும்பியுள்ளனர். இது தான் மஹிந்தவின் அரசியல் போக்கு என்பதை அவரது ஆதரவாளர்கள் உணர்ந்து கொண்டிருப்பர்.

அதுபோன்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்மைப்புக்கும் சுதந்திர கட்சிக்கும் இடையில் தற்போது விரிசல் நிலையொன்றையே காணமுடிகிறது. அதனால் சுதந்திர கட்சியின் ஒரு பிரிவு நல்லாட்சி நிமித்தம் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுகிறது. சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்கவும் ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவராக இருந்தவர் என்பதை அறிந்தவர்கள் எம்முடன் இணைந்து போட்டியிட பின்வாங்க மாட்டார்கள் என எதிர்பார்கிறேன்.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் வருகையால் ஐக்கிய தேசிய கட்சியின் பலம் குன்றிவிடும் என பலரும் எதிர்பார்த்திருந்த நிலையில் அதற்கு மாறாக அவர் வருகையின் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் பலம் அதிகரித்தே செல்கிறது. முன்னர் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து தயாசிறி ஜயசேகர எம்.பி.வெளி யேறிய போது ஐக்கிய தேசிய கட்சியின் மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் விலகிச் சென்றனர். ஆனால் தற்போது மஹிந்த வருகையின் பின்னர் எஸ்.பி.நாவின்ன உள்ளிட்ட சு.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களும் பல மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப் பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துள்ளனர். – என்றார். (ற)





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: சாதுரியமாகச் செயற்பட்டு நன்மை காண்பீர்கள். உறவினர், மத்தியில் செல்வாக்கு உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். பிள்ளைகளின் நலனில் அக்கறை ஏற்படும்.

**இடபம்**: பேச்சில் அதிருப்தி கலந்திருக்கும். குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். பணக் கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**மிதுனம்**: எதிர்கால வாழ்வு சிறக்கப் பாடுபடுவீர்கள். பெரியவர்களின் ஆசியும், வழிகாட்டுதலும் கிடைக்கும். தொழில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். இலாபம் உயரும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்**: சுய தேவை நல்ல முறையில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். முக்கிய செலவுக்கு சேமிப்பைப் பயன்படுத்துவீர்கள். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**சிங்கம்**: மனம், உடலில் புத்துணர்வு மேலோங்கும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து பிரச்னை நல்லமுறையில் தீரும்.

**கன்னி**: பிறருக்கு உதவும் எண்ணம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடை விலகி ஆதாயம் உயரும். வீட்டை அழகுபடுத்த அலங்காரப் பொருள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் செயல்பாட்டால் பெருமை உண்டாகும்.

**துலாம்**: நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விருந்தினர் வருகையால் பணச்செலவு ஏற்படலாம். குடும்பத்தினர் ஆதரவு, மனதுக்கு நம்பிக்கை தரும்.

**விருச்சிகம்**: எதிலும் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. மனைவியின் செயற்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்;களை இரவல் வாங்குவது கூடாது.

**தனுசு**: பொது விடயங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு மனதுக்கு மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும். குடும்பத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும்.

**மகரம்**: இனிமையாகப் பேசி, பிறர் மனதில் இடம் பெறுவீர்கள். பணிகள் அனைத்தும் எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். இல்லறத் துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள்


**கும்பம்**: மறைமுக எதிரியை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்புத் தேவை. இலாபம் சுமாராக இருக்கும். பிள்ளைகளின் செயல்பாடு மனதுக்கு நிம்மதியளிக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**மீனம்**: பொது விடயங்களில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. எதிர்பார்த்த நல்லசெய்தி வீடு தேடி வரும்.

**பறவைகளை வாங்கி கூண்டில் அடைத்து வளர்ப்பதைவிட, ஒரு மரத்தை நடுங்கள்.... பறவைகளே அதில் நன்றாகக் கூடு கட்டி வாழ்ந்துகொள்ளும்.**




# தனுஷ்க்கு பொது அறிவு குறைவாம்



"சினிமாவில் என்னை முன்னிறுத்த வேண்டியிருக்கின்றது. அதற்காக நான் எனது திறமைகளை வெளிப்படுத்துகின்றேன். படத்தில் சொன்னதை அப்படியே செய்கின்றேன். எனக்குப் பொது அறிவு குறைவு". மாரி பட வெற்றி குறித்து தனுஷ் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போதே இவ்வாறு கூறினார். சீரியஸ் படங்களில் நடித்த எனக்கு மாஸ் படம் ஒன்றில் நடிக்க வேண்டும் என்ற ஏக்கம் இருந்தது. அது மாரி மூலம் தீர்ந்திருக்கிறது. இந்தப் படம் தெலுங்கு, இந்தியிலும் டப் ஆகிறது. இதில் லோக்கல் தாதாவாக நடித்திருக்கிறேன்.

அனிருத்தும், நானும் இணைந்தால் வெற்றி என்கிறார்கள். எங்கள் இருவருக்குமான இணக்கம் அப்படி. சின்ன வயதிலிருந்தே பழகி வருகிறோம். இசை சரியில்லை என்றால் வெளிப்படையாகச் சொல்வேன். உடனே மாற்றிக் கொள்வார். நான் எழுதும் வரிகள் சரியில்லை என்று அவர் சொன்னால், அதை மாற்றிவிடுவேன். இதுபோன்ற கருத்துப் பரிமாற்றமும், புரிந்துகொள்ளும் தன்மையும் இருப்பதால் பிரச்சினையின்றிப் பணிபுரிகிறோம்.

நான், இயக்குனர்கள் குடும்பத்தில் இருந்து வந்தவன். எனக்கும் படம் இயக்கும் ஆசை இருக்கிறது. சில வருடங்களுக்குப் பிறகு இயக்கலாம். அதுவரை நடிப்பில் கவனம் செலுத்துவேன்.

சினிமா சிரமமான ஒருதுறை. இங்கு போட்டி அதிகம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கதாநாயகன் அல்லது கதாநாயகியின் தலைவிதி மாறுகிறது. இப்படிப்பட்ட துறையில் என்னை முன்னிறுத்தவும், திறமைகளை வெளிப்படுத்தவும் உஷாராக இருக்க வேண்டியிருக்கிறது. எனக்குப் பொது அறிவு குறைவு. படத்தின் ஸ்கிரிப்ட்டில் சொல்லியிருப்பதை மட்டுமே செய்கிறேன் – என்றார்.






# பெயர் மாறிய அப்பாடக்கர்

சுராஜ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிப்பில் தயாராகி இருக்கும் "அப்பாடக்கர்" படத்தின் தலைப்பை தற்போது "சகலகலா வல்லவன்" என்று மாற்றி இருக்கிறார்கள்.

சுராஜ் இயக்கத்தில் ஜெயம் ரவி, திரிஷா, அஞ்சலி, விவேக், சூரி உள்ளிட்ட பலர் நடிப்பில் தயாராகி இருக்கும் படம் அப்பாடக்கர். தமன் இசையமைத்து இருக்கும் இந்தப் படத்தை லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கிறது.

படத்தின் இறுதிகட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், தற்போது "அப்பாடக்கர்" என்ற தலைப்பை "சகலகலா வல்லவன்" என்று படக்குழு மாற்றி இருக்கிறது. வரிச்சலுகையை முன் வைத்து படக்குழு பெயர் மாற்றம் செய்திருக்கிறது என்கிறார்கள்.



# மீண்டும் கலக்கப் போவது யாரு ?

சின்னத்திரையில் நகைச்சுவை நிகழ்ச்சியின் மூலம் அறிமுகமான சிவகார்த்திகேயன், விஜய் தொலைக்காட்சியின் கலக்கப் போவது யாரு 5 ஆவது சீசனுக்கான புரமோசன் நிகழ்ச்சியில் நடித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

விஜய் தொலைக்காட்சியின் கலக்கப் போவது யாரு நிகழ்ச்சி மீண்டும் எதிர்வரும் 26 ஆம் திகதியிலிருந்து ஒளிபரப்பாக உள்ளது. அதற்கான போட்டியாளர்கள் தேர்வு நிகழ்ச்சி பல கட்டங்களாக நடைபெற்றுள்ளது.

தமிழ் சினிமாவில் பிரபல நடிகர்களில் ஒருவராக இருக்கும் சிவகார்த்திகேயனின் அறிமுகம் விஜய் தொலைக்காட்சி தான். கலக்கப் போவது யாரு நிகழ்ச்சியில் போட்டியாளராக அறிமுகமாகி, வெற்றி பெற்று பின்னர் அதே நிகழ்ச்சிக்கு தொகுப்பாளராக உயர்ந்தார்.

தன்னை அறிமுகப்படுத்தியவர்களையும், வளர்த்து விட்ட விஜய் தொலைக்காட்சியையும் மறக்காமல் இருக்கிறார் சிவகார்த்திக்கேயன். தான் அறிமுகமான கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியை இப்போது பிரபலப்படுத்த அந்த நிகழ்ச்சியின் புரோமோவில் நடித்துக் கொடுத்திருக்கிறார் சிவகார்த்திகேயன்.

# சுயேச்சை குழு 6



## காயப்பட்ட உடம்பில் ஆறாத மகா ரணத்திற்கு கடவுளாய் வந்துதவியவர் வே.கணேஸ்வரன்

2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிப் போரில் ஏ.கே. 47 துப்பாக்கி ரவை என் வலது பக்கம் முதுகில் துளைத்து சுவாசப்பை உறுப்புக்களை பாதிக்கக்கூடிய வகையில் நெஞ்சுக்கருகில் தங்கியிருந்து. ஆறு வருடங்கள் கடந்த பின்னும் சத்திர சிகிச்சை செய்து அதனை எடுக்க வழியின்றி இருந்த எனக்கு உயிர் பிச்சை தந்தவர் கணேஷ்வரன் வேலாயுதம் ஐயா அவர்கள். அவர் என்னைப் பொறுத்தவரையிலேயே ஒரு கடவுள்.

ஜீவராசா அருள்சாகரன் நான். 31 வயது. முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிப் போரின் பேரழிவில் ஷெல்பட்டு காயமடைந்தேன். புல்மோட்டை மருத்துவ முகாமில் வைக்கப்பட்டு தப்பிப் பிழைத்தேன். என் முதுகில் பாய்ந்த துப்பாக்கி ரவை என் சுவாசப் பைக் கருகில் தங்கியது. அதை எடுக்கும் பட்சத்தில் என்னுடைய உயிருக்கு ஆபத்து இருப்பதாக வைத்தியர்கள் கூறினர். அதிஷ்டவசமாக உயிர் பிழைத்தாலும் உடம்பில் இருக்கும் ரவையைப் பற்றி நினைக்க நினைக்க என்னால் சகஜமான வாழ்க்கையை வாழ முடியவில்லை. அழுகை பீறிட்டது. மனைவி. மூன்று பிள்ளைகள் என நினைத்துப் பார்த்தால். சோகத்தின் இறுக்கம் தளராமல் துவண்டு விடுவேன். அதிக தூரம் நடக்க முடியாது. பாரம் தூக்க முடியாது. குடும்பத்தை வாழ வைக்க முடியாது. என்னுடைய எதிர்காலம் திகில் நிறைந்ததாகவே இருந்தது.






இப்படி இருக்கையில். கடவுள் வரம் தந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். சிவன் பவுண்டேசன் என்ற அமைப்பின் தலைவர் வேலாயுதம் கணேஸ்வரன் என்னைத் தேடி வந்தார். எனக்கு அறுவைச் சிகிச்சையை செய்ய எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கிறேன் என்றார். அவர் வழங்கிய நிதியுதவியினால் கொழும்பிலுள்ள லங்கா தனியார் வைத்தியசாலைக்குச் சென்று அறுவைச் சிகிச்சை மேற்கொண்டேன். இப்போது நான் உடல் ஆரோக்கியத்துடன் இருக்கின்றேன்.

இந்த அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளாது விட்டிருந்தால் என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும். சுவாசப்பைக்கருகில் தங்கியிருந்த ரவை துருப்பித்திருந்தது. அது மிக ஆபத்தானது என அறுவைச் சிகிச்சை நிபுணர் என்னிடம் தெரிவித்தார்.

எனக்கு மறுவாழ்வு தந்து கருணை காட்டிய மனிதரை நான் எப்படி மறப்பது? மறைப்பது. என்னைப் பொறுத்தவரையில் ஐயா கடவுள் ரூபத்தில் கடவுள் மாதா எனக்கு வந்து உதவி செய்திருக்கிறார். என் மறுவாழ்வுக்கு உதவிய வேலாயுதம் கணேஸ்வரன் ஐயா நாடு முழுவது முள்ள விசேட தேவையுடைய சிறார்களுக்கு 14 கிளைகள் திறந்து இலவசமாக உதவி செய்து வருகிறார் என அறிந்தேன். இவர் தம் சொந்த நிதியின் மூலம் சுயநலம் பாராது எல்லாயின மக்களும் உதவி புரிந்து வரும் பெரும் கொடை வள்ளல்.

இவர் எமது மாவட்டத்தில் ஆறாம் இலக்கம் சுயேச்சைக் குழுவில் கேடயம் சின்னத்தில் ஆறாம் இலக்கத்தில் போட்டியிடுகின்றார். என்னுடைய வாக்கை மட்டுமல்ல என்னுடைய குடும்பத்தின் வாக்கும் அவருக்குத்தான். என்னுடைய கோணப்புலம் நலன்புரி முகாமிலுள்ள அனைத்து மக்களும்கூட அவருக்கு வாக்களிக்கத் தயாராக இருக்கின்றார்கள். யாழ். மண்ணில் வாழும் அனைத்து மக்களும் நல்ல மனப்பாங்குடன் சேவையாற்றும் ஐயா அவர்களுடைய வெற்றியை உறுதி செய்ய தங்களுடைய வாக்குகளையும் வழங்குமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

அன்புடன்

**ஜீவராசா அருள்சாகரன்,**

*கோணப்புலம் நலன்புரி முகாம், மல்லாகம், யாழ்ப்பாணம்.*




# 6

சிவன் பவுண்டேசன் நிறுவுநர்

# வேலாயுதம் கணேஸ்வரன்

கொடை வள்ளல், சமூக ஆர்வலர்

பாராளுமன்றத் தேர்தல் - 2015

சிவஞானம் சிறீதரன்

🏠 X 10



க.தர்மலிங்கம் (J.P)
இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி
கோப்பாய் தொகுதி பொருளாளர்,
வலி. கிழ. பிரதேசசபை, துணைத் தவிசாளர்,
புத்தூர் (நீர்வேலி)

தாய் மண் மீதும்!
தமிழ் மக்கள் மீதும்!!
அடங்காப் பற்றுக்கொண்ட
தமிழ் பற்றாளன் தம்பி
சிவஞானம் சிறீதரனை
வெற்றிபெறச் செய்வோம்

பாராளுமன்றத் தேர்தல் 2015
வன்னி தேர்தல் தொகுதி



🏠 X 3

ஈழமக்களின் இயல்பான வாழ்விற்காய்...
திரு. இ.சாள்ஸ் நிர்மலநாதன்
தொழிலதிபர்
பிரஜைகள் குழு உபதலைவர்
இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ் தேசிய கூட்டமைப்பு)
3
வன்னி தேர்தல் தொகுதி மக்கள்

பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்

🏠 X 7

நேர்மை! எளிமை!! உறுதி!!!

7



எங்களில் ஒருவரான
திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்
அவர்களை ஆதரிப்போம்.
(முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம்
அவர்களின் புதல்வன்)
- கோப்பாய் தொகுதி மக்கள்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## சிங்கள, ஆங்கில கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

இந்த ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு சிங்கள, ஆங்கில வகுப்புக்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபையின் கீழ் இயங்கும் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளையோர் விவகார அமைச்சால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் இந்த வகுப்புகள் எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் வார நாள்களில் காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கற்கை நெறியை பயில விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கல்வியங்காட்டில் உள்ள மும்மொழிக்கற்கை நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ற)

## தொழிலாளர் குடியிருப்புகள் திறப்பு விழா

தென்மராட்சி, ஜூலை 23

சாவகச்சேரி நகரசபையால் 75 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 5 தொழிலாளர்களுக் கான குடியிருப்புகள்( விடுதிகள் ) எதிர் வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதுடன், தொழிலா ளர்களிடம் கையளிக்கப்படவுமுள்ளன.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நகர சபைத் தலைவர் உப தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரால் ஐந்து வீடுகளும் திறந்து வைக்கப்படவுள்ளன. (ற-9)

## மோதலில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 23

கொடிகாமம் ரயில் நிலையத்தில் ஏற்பட்ட மோதலில் காயடைந்த இரு இளைஞர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

இரவு தபால் ரயிலுக்கு உறவினர்களை வழியனுப்ப வந்தவர்களிடையேயே மோதல் நடந்துள்ளது. அதில் அல்லாரை வடக்கைச் சேர்ந்த கந்தசாமி அம்ல்ராஜ் (வயது-24), கொடிகாமம் எருவனைச் சேர்ந்த சின்னையா திலீபன் (வயது-26) ஆகியோரே காயங்களுக்குள்ளாகியுள்ளனர். (ற-9)

## புலமைப் பரிசில் மாணவர்களுக்கு கருத்தரங்குகள்

தென்மராட்சி, ஜூலை 23

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாதிரிப் பயிற்சிக் கருத்தரங்குகள் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி என்பவற்றில் நடைபெறவுள்ளன.

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் கிளைகளின் அனுசரணையுடன் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட முதலாவது பரீட்சையில் 111க்கும் அதிகமான புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் 111 க்கு குறைவான புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலும் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறி வித்துள்ளார். (ற-9)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 23

வயாவிளான் கிழக்கு கோணாவலை ஸ்ரீ முத்துமாரியம்மன்; ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. கனடாவில் வாழும் சி.கேதாரசிங்கம் குடும்பத்தினரால் இந்த ஆலயத்துக்கான அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கொடியேற்ற தினத்தன்று அன்னதான மண்டபம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

★★★

கரணவாய், ஜூலை 23

பருத்தித்துறை மேலைப்புலோலி ஆலடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ஜ-108)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 23

வயாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளதாக பங்குத்தந்தை அருட்திரு அன்ரனிபாலா அடிகள் தெரிவித்துள்ளார்.

நூறாண்டுகள் பழைமைவாய்ந்த குறித்த ஆலயம் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்தபோது, அதன் கூரைப்பகுதி இராணுவத்தால் அகற்றப்பட்டிருந்த நிலையில் தற்போது அப்பகுதி மக்களால் புதிய கூரை அமைக்கப்பட்டு திருவிழா நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-135)

★★★

தென்மராட்சி, ஜூலை 23

மிருசுவில் படித்த மகளிர் திட்ட துர்க்காபுரம் ஸ்ரீ நாக துர்க்கா அம்பாள் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். தேர்த்திருவிழா அன்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்கந்த தேசிக ஞான சம்பந்த பரமச்சாரிய சுவாமிகள், யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் ஆகியோரின் அருளுரைகள் இடம்பெறும். (ஜ-9)

## புனித லிகோரியார் ஆலய நவநாள் திருவிழா

தென்மராட்சி, ஜூலை 23

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய நவநாள் திருவிழா எதிர்வரும் நாளை வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் இரண்டாம் திகதி காலை திருச்சொரூப பவனியுடன் நிறைவு பெறுமெனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

ஆலய பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் நவநாள் திருவிழா இடம்பெறுமெனவம் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## விபத்தில் பெண் உயிரிழப்பு

மொரட்டுவ, ஜூலை 23

மொரட்டுவ லுனாவ பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

ஆயுர்வேத வைத்தியசாலை சந்திக்கு அருகாமையில் மொரட்டுவை நோக்கி சென்ற தனியாருக்குச் சொந்தமான பஸ் ஒன்று அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்த குறித்த பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த பெண் லுனாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்தார்.

அதே பிரதேசத்தில் வசிப்பவரான 70 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக லுனாவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (ற)

## விதிமுறைகளை மீறிய 8 சாரதிகளுக்கு அபராதம்

தென்மராட்சி, ஜுலை 23

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய எட்டு சாரதிகளுக்கு 66 ஆயிரத்து 500 ருபா அபராதமும் கடமைக்குச் சென்ற வேளையில் வெளிச்சமில்லாத மோட்டார் சைக்கிளில் சென்ற அரச உத்தியோகத்தருக்கு அரச செலவாக 2 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அத்துடன் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் குடியிருப்புக்களை வைத்திருந்த மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அதன்போதே இவ்வாறு அபராதங்கள் விதிக்கப்பட்டன.

பாலாவி தெற்கைச் சேர்ந்த ஒருவர் உழவு இயந்திரம் செலுத்தியமை தொடர்பாக ஆறு குற்றச்சாட்டுக்களுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 28 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாரத்திய அனுமதிப் பத்திரமின்மை, டிராக்டர் பெட்டிக்கு இலக்கத் தகடு இன்மை, போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனத்தை செலுத்திமை, வாகன வரிப் பத்திரமின்மை, பெட்டியுடன் சென்ற வாகனத்தை பொலிஸார் இரு இடங்களில் நிறுத்துமாறு சமிக்ஞை செய்த போது நிறுத்தாமல் சென்றமை ஆகிய ஆறு குற்றங்களுடன் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதால் 28 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.இவற்றில் இலக்கத் தகடு இல்லாத பெட்டியைக் கொண்டு சென்றமைக்காக 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 18 ஆயிரம் ரூபாவும், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனஞ் செலுத்திய ஐந்து பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் அபராதமும் விதிக்கப்பட்டது.அத்துடன் மது போதையில் வாகனம் செலுத்திய ஒருவருக்கு 5 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், அவரது சாரதிய அனுமதிப் பத்திரத்தை மூன்று மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார்.(ற-9)

## போசாக்கு விழிப்புணர்வு கண்காட்சி

தென்மராட்சி, ஜுலை 23

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பிரிவினரும் பிரதேச தாய்மார் கழகங்களும் இணைந்து நடத்தும் போசாக்கு தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி வரணியிலும் சாவகச்சேரியிலும் நடத்தப்படவுள்ளன.

வேள்ட் விஸன் நிறுவன அனுசரணையுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை வரணி பிரதேச மருத்தவமனையிலும் 29 ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திலும் போசாக்கு கண்காட்சிகள் நடத்தப்படவுள்ளன.

குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரையிலான உணவு வகைகள் தொடர்பாக காட்சிப் பொருள்களும் நிஜ உணவுகளும் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன என்றும் உணவு தொடர்பான செயன்முறை விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற-9)

## குறும்பட வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜுலை 23

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் 'வற்றுப் பெருக்கு' எனும் குறும்பட வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணம் கலந்து கொள்வார்.(ஐ)

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள பான்சி கடைக்கு (18 - 40) வயதுக்குட்பட்டவர்கள் தேவை. யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 021 222 5967
077 765 1590

### தேர்தல்கள் திணைக்களம்
### பாராளுமன்றத் தேர்தல் - 2015
### தேர்தல் சட்டங்களைச் செயல்வலுப் பெறச் செய்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது எழுந்த விடயங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரினால் முன்வைக்கப்பட்ட தெளிவுபடுத்தல்களின் பின்னர் எட்டப்பட்ட இணக்கப்பாட்டிற்கிணங்க அவ்விடயங்கள் தொடர்பாக பின்பற்றியொழுக வேண்டிய செயலொழுங்குகள்.

01. தேர்தல் செயன்முறையில் பிரசார அலுவல்களுக்காக ஆதரவாளர்கள் வீடுவீடாகச் செல்லும் போது ஒரு பிரதேசத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ள முடிந்த ஆகக்கூடிய தொகை 25 இற்கு மேற்படாத எண்ணிக்கை கொண்ட ஆதரவாளர்களேயாவர். அதாவது பொதுமக்கள் மற்றும் வாகனப் போக்குவரத்திற்குத் தடையற்ற விதத்திலும் மற்றும் ஊர்வலமொன்றென்ற வகையில் தோற்றமளிக்காதவாறும் ஆதரவாளர்கள் சிலர் வீடு வீடாகச் சென்று வாக்குகளை இரந்து கேட்பதற்கு அல்லது துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்குத் தடைகிடையாது. இருப்பினும்,துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்காக வீடு வீடாகச் செல்லும் போது மக்கள் கூட்டமாக அல்லது இசை முழக்கம், மெகாபோன் பாவனை மற்றும் காட்சிப் பதாகைகளைப் பயன்படுத்தல் என்பன கூடாது.

02. பஸ் தரிப்பு நிலையங்கள்,பொது வர்த்தகச் சந்தைகள், புகையிரத நிலையம் என்பனவற்றிற்கு எதிரில் பொது மக்கள் நடமாடுகின்ற இடங்களில் சட்டவிரோதமற்ற பிரசார துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்கு அல்லது அவ்வாறான இடங்களில் வீதி நாடகங்கள் ஊடாக பொதுமக்களுக்கு இடையூறற்ற விதத்தில் பிரசார அலுவல்களை மேற்கொள்வதற்கு தடையில்லை. இருப்பினும், அவ்வாறான பணிகள் தொடர்பாகக் குறித்த பொலிஸ் நிலையத்திற்கு முன்கூட்டியே அறிவிப்பது மிகவும் பொருத்தமாகும்.

03. மேலும் வேட்பாளர் அல்லது வேட்பாளரின் நெருங்கிய உறவினர்கள் (வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள்) துண்டுப்பிரசுரம் விநியோகித்தல் பணிகளுக்காக அல்லது வாக்குகளை இரந்து கேட்பதற்காக வீடு வீடாகச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளல்வேண்டும்.

04. அச்சகரின்/வெளியீட்டாளரின் தகவல்கள் குறிப்பிடப்படாத துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல்,சட்ட முரணான அறிவித்தல்களை அச்சிடல் போன்ற சட்ட முரணான செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.

05. வேட்பாளர் பிரயாணம் செய்யும் வாகனத்தில்,கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்புக்குரிய கொடிகள் மற்றும் அறிவித்தல்கள் அல்லது ஸ்ரிக்கர் அல்லது வேட்பாளரின் பெயர், இலக்கம், உருவப்படம் என்பனவற்றை காட்சிப்படுத்த முடியும். இருப்பினும் வேட்பாளர் பிரயாணம் செய்யும் வாகனம் தவிர்ந்த (வேட்பாளர் பயன்படுத்தும் வாகனம் என உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வாகனம்) வேறு எந்தவொரு வாகனத்திலும் கட்சி/வேட்பாளர் பெயர், இலக்கம்,ஸ்ரிக்கர், அறிவித்தல், உருவப்படம் என்பவற்றைக் காட்சிப்படுத்த முடியாது. ஏனெனில், வேட்பாளர் பயன்படுத்தும் வாகனமெனத் தெரிவித்து பஸ் வண்டி அல்லது அவ்வாறான பாரஊர்திகளை கட்சிச் சின்னம்,வேட்பாளர் இலக்கம்,பெயர் போன்றவற்றை உள்ளடக்கிய ஸ்ரிக்கர், அறிவித்தல், கொடி பதாகை என்பவற்றினால் சோடனை செய்து பயன்படுத்த முடியாது.

06. வேட்பாளரின் சொந்த பிரசார அலுவல்களுக்காக வெவ்வேறு பிரதேசங்களுக்கு செல்லும்போது அதிக எண்ணிக்கையான வாகனங்களில் பயணம் செய்வது வாகன ஊர்வலமொன்றாவதால், 05 வாகனங்களை விட அதிக எண்ணிக்கையான வாகனங்களை அவ்வாறான பயணங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

07. தேர்தல் காலப்பகுதிக்குள் தேர்தல் பிரசார/ஊக்குவிப்பு அலுவல்களுக்குரிய ஊர்வலங்கள், பாதயாத்திரைகள் மற்றும் வாகனப் பேரணிகள் ஆகியவற்றை நடத்துதல் தேர்தல் சட்டமீறலொன்றென்பதால் அவ்வாறான ஊர்வலங்கள்,பாதயாத்திரைகள் மற்றும் வாகனப் பேரணிகள்,துவிச்சக்கர வண்டி ஊர்வலங்கள் போன்ற எதனையும் நடத்தக்கூடாது.

08. இலக்கத்தகடற்ற அல்லது போலி இலக்கம் கொண்ட அல்லது கராஜ் இலக்கம் கொண்ட வாகனங்களை வேட்பாளர் ஊக்குவிப்பு அலுவல்களுக்கு ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது.

09. அரசியல் கூட்டம் நடத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அது தொடர்பாக பிரசாரம் செய்வதற்காக அல்லது கூட்டக் காணிக்கு வெளியில் பெருந்தெருக்கள் அல்லது மின் கம்பங்கள்,தொலைபேசி கம்பங்களில் கொடிகள், பதாகை கள்,உருவப்படங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்வேண்டும். ஏதேனும் மாவட்டமொன்றில் கட்சியொன்றினால் நடத்தப்படுகின்ற பிரதான கூட்டத்திற்காக மாத்திரம் அது தொடர்பாக முன்னறிவித்தலொன்று செய்யப்படின் கூட்டக் காணியிலிருந்து 100 மீற்றர் உயர்ந்தபட்ச தூரமொன்றிற்கு கட்சியின் நிறத்தைக்கொண்ட கொடிகளைப் பயன்படுத்திச் சோடனை செய்ய முடியும்.

10. கூட்ட மண்டபமொன்றினுள் கூட்டம் நடத்தப்படுகின்ற போது வெளியில் சத்தம் வெளிவராதவாறு கூட்ட மண்டபத்தினுள் ஒலி பெருக்கலுக்காக பபல் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்தும் போது விஷேட அனுமதியொன்றைப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை. இருப்பினும்,அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தை அறிவுறுத்துவது கட்டாயமாகும். ஏதேனுமொரு விதத்தில் வெளியில் ஒலி பெருக்கப்படுவதால் அவ்வாறான உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டுமென பொலிஸார் அறிவிப்பார்களாயின் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

11. ஒலிபெருக்கிச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி பெற்றுக்கொண்டு நடத்தப்படுகின்ற அரசியல் கூட்டமொன்றின் போதும் கூட்டக் காணிக்கு வெளியில் ஒலிபெருக்கி உபகரணங்களை பொருத்தி கூட்ட காணிக்கு வெளியில் பிரசார அலுவல்களை மேற்கொள்ளக் கூடாது. கட்சியின் தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களிலும் கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்புக்கான இசைகச்சேரிகள் தொடர்பிலும் இவ்விதிமுறை செல்லுபடியாகும். வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலி பெருக்கி உபகரணங்களைப் பயன்படுத்தி பிரசார அலுவல்களை மேற்கொள்வது சாதாரண சட்டத்தின் கீழும் தவறொன்றென்பதால்,அவ்வாறான அலுவல்களிலிருந்து தவிர்ந்து கொள்ளல்வேண்டும்.

12. கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசம் மற்றும் தெஹிவளை,கோட்டை,கொலன்னாவ,வத்தளை உள்ளிட்ட கொழும்பு மாநகர அதிகார எல்லை பிரதேசத்திற்கு அண்மித்த சன நெருக்கடிமிக்க நகர் பிரதேசங்களில் அல்லது அவ்வாறான நிலைமையொன்று காணப்படுகின்ற விஷேட பிரதேசங்களில் தோட்ட கூட்டங்கள் (Pocket Meeting) நடத்தும் போது ஒலிபரப்புக்காக மெகாபோன் (Mega Phones) அல்லது பபல் (Buffles) பயன்படுத்துவது தொடர்பில் அவ்வாறான கூட்டங்களை நடத்த எதிர்பார்க்கின்ற கட்சி/சுயேட்சைக் குழுவினால் செய்யப்படுகின்ற கோரிக்கைகள் தொடர்பாக தேர்தல்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்களினால் மேலும் கலந்துரையாடப்பட்டு முறையான அறிவுறுத்தல்கள் குறித்த பொலிஸ் நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும்.

13. சன நெருக்கடிமிக்க நகர் பிரதேசங்கள் விஷேடமாக அதிகளவு வரிசை வீடுகள் அமையப்பெற்றுள்ள பிரதேசங்களில் நடத்தப்படுகின்ற சிறிய மக்கள் சந்திப்புக்களின் போது,தோட்ட கூட்டங்கள் மற்றும் மண்டபத்தினுள் நடத்தப்படுகின்ற கூட்ட மொன்றின் போது வெளியில் ஒலி விரிவடையும் விதத்தில் சட்டவிரோத ஒலிபரப்பு சாதனங்களைப் பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல்வேண்டும்.

14. இடம்பெயர் மேடைகள் அல்லது கண்காட்சி ஊர்திகள் அல்லது டிஜிடல் திரைகளைக் கொண்ட வாகனங்களைப் பயன்படுத்திப் பிரசார அலுவல்களை மேற்கொள்வதற்கு சாத்தியமுண்டெனினும், அத்தகைய இடம்பெயர் மேடைகள் அல்லது கண்காட்சி ஊர்திகள் அல்லது டிஜிடல் திரைகளைக்கொண்ட வாகனங்கள் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செல் லும்போது பிரசார அலுவல்களை மேற்கொள்ள முடியாது மற்றும் அவற்றில் பொருத்தப்பட்டுள்ள கட்சி/வேட்பாளர் காட்சிப் பதாகைகள் அனைத்தையும் முழுமையாக மறைக்காது பெருந்தெருக்களில் பயணிக்கவும் முடியாது. அதேபோன்று அத்தகைய இடம்பெயர் மேடைகள் அல்லது கண்காட்சி ஊர்திகள் அல்லது டிஜிடல் திரைகளை கொண்ட வாகனங்களினூடாக பிரசார அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்களை முன்கூட்டியே குறித்த பொலிஸ் நிலையத்திற்கும் மற்றும் காணியுரிமை யாளருக்கும் அறிவித்து கூட்டமொன்றை நடத்துவதற்காக பெற்றுக்கொள்ளவேண்டிய அனுமதியை எழுத்து மூலம் பெற்றிருத்தல் வேண்டும். பொதுவாக கூட்டங்களுக்காக அனுமதி வழங்கப்படுகின்ற பொது இடங்கள் மற்றும் முறையான அனுமதியுள்ள தனிப்பட்ட இடங்கள் தவிர பெருந்தெருக்கள் அல்லது நடைபாதைகள் அல்லது வேறு பொது இடங்களில் இவ்வாறான பிரசார அலுவல்களை மேற்கொள்ள முடியாது. மேற்கொள்ளவும் கூடாது.

15. அரச அல்லது மாகாண சபை அல்லது அரச நிறுவனங்களில் அலுவலகங்களில் அல்லது அது அமையப் பெற்றுள்ள தொகுதிகளில், உள்ளுராட்சி நிறுவனங்களில் அரச பாடசாலைகளில் வாக்குகளை இரந்து கேட்டல், துண்டுப் பிரசுர விநியோகம் அல்லது கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்பு அறிவித்தல்/பிரசாரப் பலகைகளை காட்சிப்படுத்தல் கூடாது.

16. சமயத் தலங்களில் அல்லது வணக்க வழிபாட்டுத் தலங்களில் எவ்விதமான அரசியல் கூட்டமொன்றையும் நடத்துவதிலிருந்து தவிர்ந்துகொள்ளவேண்டும். அதேபோன்று சமயத் தலங்களில் நடத்தப்படுகின்ற சமய அலுவல்களூடாக அரசியல் கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்பு அலுவல்களை மேற்கொள்வதிலிருந்து தவிர்ந்துகொள்ளவேண்டும்.

17. வீதியின் இரு மருங்கில் அல்லது பொது இடங்களில் உள்ள டிஜிடல் அறிவித்தல் பலகைகளை எந்த விதத்திலும் அரசியல் கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்பு அலுவல்களுக்காகப் பயன்படுத்தக் கூடாது.

18. ஆகஸ்ட் 04 ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 13 ஆம் திகதிவரை க.பொ.த (உயர்தரப்) பரீட்சை நடத்தப்படவுள்ளதாலும் மற்றும் ஆகஸ்ட் 23 ஆம் திகதி ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்படவுள்ளதாலும்,குறித்த மாணவர்களின் கல்வி நட வடிக்கைகளுக்கு அல்லது பரீட்சை அலுவல்களுக்கு இடையூறான விதத்தில் பிரசார அலுவல்களை மேற்கொள்ளல் கூடாது.


19. ஆகஸ்ட் மாதம் 15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் எந்தவொரு கூட்டத்தையும் அல்லது பிரசாரப் பணி எதனையும் ஒருபோதும் மேற்கொள்ளல் கூடாது.

20. இப்பரிந்துரைகள் அல்லது விதிகள் தயாரிக்கப்பட்டிருப்பது அரசியற் கட்சிகளது அல்லது குழுக்களது அல்லது வேட்பாளர்களது பிரசார அலுவல்களுக்கு தடையேற்படுத்தும் நோக்கத்தோடன்றி நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடத்துவதற்குத் தேவையான சிறந்த நிலைமையொன்றைப் பேணுவதற்காக மாத்திரமென்பது தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் செயலகத்தில்.
2015.07.23

(c 17886) (45.3.7)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்
**இராமலிங்கம் முருகுப்பிள்ளை**

தோற்றம்
16.09.1932

மறைவு
25.06.2015

கடந்த 25.06.2015 இறைபதம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வம் அமரர் இராமலிங்கம் முருகுப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 24.07.2015 வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று.அஸ்திதொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அற்புதராஜா (ஜேர்மனி),
சண்முகராஜா,
சபாநாதன் (லண்டன்),
தவராஜா (லண்டன்),
தனராஜா (சுவிஸ்),
மற்றும் மருமக்களும், பேரப்பிள்ளைகளும்.

சோடாக்கடையடி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(56243) (45.3.7)

## கொட்டன்களால் தாக்கியோருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 23
குறித்தொரு தரப்பினரை கொட்டன்களால் தாக்கிக் காயம் விளைவித்த நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
மந்துவில் கிழக்குப் பகுதியில் இரு பகுதியினருக்கிடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் மோதலில் ஈடுபட்ட இரு பகுதியினருக்கும் எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த நால்வரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-9)

## தேர்தல்கள் திணைக்களம்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2015
வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்காளர்கள் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டுமென்பது தொடர்பான விசேட அறிவித்தல்

தேர்தலின்போது வாக்காளர் ஒருவர் வாக்கெடுப்பு நிலையத்தில் தனது ஆளடையாளத்தை புகைப் படத்துடனான அடையாள அட்டையொன்றின் மூலம் நிருபித்தல் கட்டாயமாகும். இதன் பொருட்டு பின்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு
3. செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
4. அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை (பழைய அல்லது புதிய E அடையாள அட்டை)
5. முதியோர் அடையாள அட்டை (பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட)
6. ஆட்பதிவுத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற மதகுருமார்களுக்கான அடையாளஅட்டை.
7. 2015.01.08 ஆம் திகதி நடத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலுக்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை.
8. 2012,2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட மாகாண சபைத்தேர்தல்களின் போது தேர்தல்கள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் (மீள புதுப்பிக்கப்பட்டு கிராம அலுவலர்கள் மூலமாக விநியோகிக்கப்படும்)

2) மேற்குறிப்பிடப்பட்ட அடையாள அட்டைகளுள் ஒன்றேனும் இல்லாத வாக்காளர்கள் இதற்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டையொன்றை துரிதமாக பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோன்று அடையாள அட்டையொன்று இருக்குமாயின் அது வாசிக்க முடியாதவாறு எழுத்துக்கள் அழிந்தோ அல்லது புகைப்படம் தெளிவில்லாமலோ இருக்குமாயின் அவர்கள் கட்டாயமாக தற்காலிக அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகும். தெளிவில்லாத அடையாள அட்டைகள் , அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களினால் விநியோகிக்கப்பட்டுள்ள சேவை அடையாள அட்டைகள் /தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கின்ற போது விநியோகிக்கப்படுகின்ற பற்றுச்சீட்டு போன்ற புகைப்படமொன்றுடன் கூடிய அல்லது புகைப்படம் இல்லாத வேறு எந்தவோர் ஆவணமும் செல்லுபடியான அடையாள அட்டையொன்றாக வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

03. தற்காலிக அடையாள அட்டைகள் , வாக்காளர் வதிகின்ற பிரிவின் கிராம அலுவலரினாலும் தோட்ட அத்தியட்சகரினாலும் விநியோகிக்கப்படுமாதலால் , தற்காலிக அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் வாக்காளர்கள் , உடனடியாக அண்மையில் எடுக்கப்பட்ட செ.மீ 2 அகலத்தையும் x செ.மீ 3 உயரத்தயும் கொண்ட வர்ண கறுப்பு அல்லது வெள்ளை நிற புகைப்படங்கள் இரண்டுடன் தான் வதிகின்ற பிரிவின் கிராம அலுவலரை/தோட்ட அத்தியட்சகரை சந்திக்குமாறு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. தற்காலிக அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக வாக்காளர், கிராம அலுவலரினால் அல்லது தோட்ட அத்தியட்சகரினால் விநியோகிக்கப்படுகின்ற விண்ணப்பபத்திரத்தைப் பூர்த்தி செய்து மேலே கூறப்பட்ட இரண்டு புகைப்பட பிரதிகளுடன் அவரிடம் கையளித்தல் வேண்டும். இதற்காக எந்தவித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.

4) இத்தகைய விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2015.08.10 ஆம் திகதியுடன் முடிவடையுமென விசேடமாக அறிவிப்பதுடன் கிராம அலுவலரினால்/தோட்ட அத்தியட்சகரினால் குறிப்பிட்ட தற்காலிக அடையாள அட்டைகளை சிரேட்ட பிரதி / பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் மேலொப்பத்துடன் வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் குறித்த விண்ணப்பதாரர்களுக்குக் கையளிக்கப்படும். குறிப்பிட்ட மேலொப்பம் இல்லாத தற்காலிக அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5) மேலே குறிப்பிட்ட அடையாள அட்டைகளும், தற்காலிக அடையாள அட்டைகளும் தவிர்ந்த வேறு எந்தவோர் அடையாள அட்டையொன்றும் அல்லது புகைப்படத்துடனான ஆவணமொன்றும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலே குறிப்பிட்ட ஏதேனுமோர் ஆளடையாள ஆவணமொன்றின் மூலம் ஆளடையாளத்தை நிரூபிக்காத வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொன்றை வழங்க முடியாது போகுமெனவும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.


தேர்தல்கள் செயலகம்,
சரணமாவத்தை, இராஜகிரிய.
2015.07.23

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் ந. பரமேஸ்வரன்
அவர்களின் பாசமிகு தந்தையார்
**மா. நவரத்தினம்**
அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
நலன்புரிசங்கம், வலயக்கல்வி அலுவலகம் ,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி




எமது கல்லூரி சக ஆசிரியர்
சீனியர் அமரசோதி அவர்களின்
பாசமிகு தந்தையார்
**முருகர் சீனியர்**
(கரவெட்டி தெற்கு)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிராத்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ப.கணேசராசா
அவர்களின் அன்புத் தந்தை
**மார்க்கண்டு நவரத்தினம்**


அவர்கள் 21.07.2015 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ மயிலணி சைவ.ம.வி,
சுன்னாகம்.

(63272)
(9.3.7)

## கண்ணீர்க் காணிக்கை

வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன்
(ஆயுர் வேத வைத்தியர்)



அன்புத் தந்தையின் இழப்பால் கலங்கி நிற்கும் யாழ்.போதனா வைத்திய சாலை வேலைத்தள பொறுப்பு உத்தியோகத்தர்

**ப. குமரகுருபரன்**

அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களுடன் அன்னாரின் ஆத்மா அமைதியுற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
அலுவலக நலன்புரி சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(63271)
(5.3.7)

## செல்லப்பாச்சி குருபூசை



அன்னையின் மூன்றாவது குருபூசை திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள சடையம்மா மடத்தில் நாளை (24.07.2015 )வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியிலிருந்து நடைபெறவுள்ளது. இந்த நிகழ்ச்சிகளிலும் மகேஸ்வர பூசையிலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ,சமூகசேவை ஆர்வலர்கள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

லயன் .வல்லிபுரம் பரமசிவம் (ஜே.பி)
(மகன்)
நல்லூர்

(63115) (3,5)


## யாழ்ப்பாணத்தில்

மாணவ மாணவிகளுக்கான
உபவாச ஜெபம்



"தேவனால் பிறந்த எவனும் உலகை ஜெயிக்கிறான்"

விசேஷமாக பாடசாலை மாணவ மாணவிகளின் கல்வி அறிவிற்காகவும். O/L - A/L பரீட்சை எழுதவிருப்போருக்காகவும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்படும்.

பெற்றோர்களே, உங்கள் வாலிப பிள்ளைகளை இந்த ஜெபத்திற்கு அனுப்பி வையுங்கள்.
இந்தப் பாவ உலகில், இயேசுவுக்கென்று அவர்கள் சாட்சியாய் வாழ, இது ஒரு சந்தர்ப்பம்.

இடம் : வீரசிங்கம் மண்டபம்
(Jaffna town)
காலம் : ஜூலை 25
சனிக்கிழமை
நேரம் : 9.00 am - 3.00 pm



தேவ செய்தியாளர்
சகோ. K. ஜாண் பாலக்குமார்
(Door of Hope Ministries)

போதகர் ஐக்கியம் - 0777 164 226




## விரைவில் அறிமுகமாகும் Samsung Galaxy Tab S2

சம்சுங் நிறுவனம் தொடர்ச்சியாக சில ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்து வந்த நிலையில் தற்போது Samsung Galaxy Tab S2 எனும் புதிய டேப்பை அறிமுகம் செய்யவுள்ளது. அடுத்த வாரமளவில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த டேப்லட் 9.7 அங்குல அளவு, 2048 X 1536 Pixel Resolution உடைய Super AMOLED தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 1.9GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Samsung Exynos 5433 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது. இவை தவிர 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, நீடித்துச் செயல்படக்கூடிய 5870 mAh மின்கலம் என்பனவும் தரப்பட்டுள்ளன. இவற்றின் விலை தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

## வெற்றிகரமான பரிசோதிப்பில் Samsung Pay

சம்சுங் நிறுவனம் இலகுவான முறையிலும், விரைவாகவும் தனது தயாரிப்புக்களை கொள்வனவு செய்வதற்காக Samsung Pay எனும் வசதியை தனது வாடிக்கையாளர்களுக்காக ஏற்படுத்தியுள்ளது. இந் தச் சேவையின் சோதனை முயற்சிகள் தென் கொரியாவில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சம்சுங் நிறுவனம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளதுடன், இந்தச் சேவையின் ஊடாக புதிதாக அறிமுகம் செய்த Galaxy S6 மற்றும் S6 Edge கைபேசிகளையும் கொள்வனவு செய்ய முடியும் எனத் தெரிவித்துள்ளது. இந்தச் சேவை விரைவில் ஏனைய நாடுகளிலும் அறிமுகம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## விற்பனைக்கு வரும் Windows 10

மைக்ரோசொப்ட் நிறுவனம் இந்த மாத இறுதியில் தனது புதிய இயங்குதளப் பதிப்பான விண்டோஸ் 10 இனை அறிமுகம் செய்யவுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவிப்பை அண்மையில் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் வழக்கமாக இறுவட்டுக்களில் (CD / DVD) விற்பனைக்கு விடப்படும் இயங்குதளமானது தற்போது USB சாதனங்களிலும் விற்பனைக்கு வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விற்பனை நிலையங்களில் கிடைக்கக்கூடிய தாக இருக்கும்.

இதேவேளை டிஜிட்டல் டவுண்லோட் முறையிலும் மைக்ரோசொப்ட் இணையத்தளத்திலிருந்து இதனைத் தரவிறக்கம்செய்துகொள்ள முடியும்எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.




# முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகளுக்குத் தடை

## பொதுபல சேனா அமைப்பு கோருகின்றது

கொழும்பு, ஜூலை 23

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு கரகோஷம் செய்யும் இலங்கை முஸ்லிம் இளைஞர்களால் எமது தனித்துவத்தை இழந்துள்ளோம். இலங்கையிலுள்ள முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கள் அனைத்தையும் தடைசெய்ய வேண்டும்.– இவ்வாறு பொதுபலசேனா அரசை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு கிருலப்பனையிலுள்ள பொதுபல சேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அதன் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் முஸ்லிம் அடிப்படைவாதிகள் தலைதூக்கி வருவதாக நாம் மூன்று வருடங்களுக்கு முன்பிருந்தே கூறி வருகின்றோம். நாம் இந்த ஆபத்து எச்சரிக்கை சமிக்ஞையை பலமுறை விடுத்தோம். இது முஸ்லிம் மக்களுக்கு எதிராக நாம் செய்த பரப்புரையல்ல. முஸ்லிம் அடிப்படைவாதிகள் தொடர்பாகவே எச்சரிக்கைகள் விடுத்தோம். ஆனால் அன்று எம்மை இனவாதிகள் என முத்திரை குத்தினார்கள். இன்று இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் .எஸ்..எஸ் தீவிரவாத அமைப்பின் உறுப்பினராக இருந்துள்ளதோடு சிரியாவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

அன்று நாம் சொன்னது இன்று உண்மையென்பது நிரூபணமாகியுள்ளது. அரசு உடனடியாக இலங்கையில் இயங்கும் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்களை தடைசெய்ய வேண்டும். பாதுகாப்புத் தரப்பினரும் இவ்வாறான அமைப்புக்கள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும்.

இலங்கை சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமான நாடு. இங்கு தமிழ், முஸ்லிம் என இனக் குழுமத்தினர் வாழ்கின்றனர். ஆனால் அவர்களை இலங்கையர்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. 1970களில் இருந்து இலங்கையின் தனித்துவம் தொடர் பாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இது நாட்டில் நடைமுறை யில் உள்ளதா? இல்லை. இலங்கைக் கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கிரிக்கெட் போட்டிநடக்கும்போது பாகிஸ்தானுக்காக இங்குள்ள முஸ்லிம் இளைஞர்கள் கரகோசம் செய்கின்றனர்.

அவர்களின் இலங்கையின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை எங்கு போனது. சிங்கள பௌத்தர்களை பாதுகாக்கவே நாம் செயற்படுகின்றோம். சிங்களவர்களுக்கு பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளரணில், மஹிந்த, சந்திரிகாவால் முடியாதுள்ளது. – என்றார். (ற)



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவன் யேசுதாஸன் றொகான் உருவாக்கிய 'பலி அவன்' என்னும் தலைப்பிலான இறுவட்டு வெளியீடு அண்மையில் யாழ்.கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.ஜஸ்ரின் ஞானப்பிர காசம் இறுவட்டை வெளியிட்டு வைக்க அருட்பணி ஜே.சி.போல்றொகான்பெற்றுக்கொண்டார். (ற–9)

# கஞ்சா வைத்திருந்த இருவர் நேற்றுக் கைது

மட்டக்களப்பு, ஜூலை 23

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுக் காலை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி சந்திவெளிப் பகுதி பிரதான வீதியில் 6 ஆயிரத்து 320 மில்லிகிராம் கஞ்சாவை தன் வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 29 வயதுடைய வரும், மாவடிவம்பு பிரதான வீதியில் 7 ஆயிரத்து 820 மில்லி கிராம் கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட் டின் பேரில் 23 வயதுடைய நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே கஞ்சா விற்பனையில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இச்சம்பவங்கள் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற)

# மண் சரிவில் வீடு நாசம்

ஹற்றன், ஜூலை 23

ஹற்றன் வில்பிரட்புர பகுதியில் கேம்ப்வெளி பிரிவில் நேற்று அதிகாலையில் மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒரு வீடு முற்றாக சேத மடைந்துள்ளதுடன், மற்றுமொரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. பெரும் சத்தம் ஏற்பட்டதை அடுத்து வீட்டில் இருந்தவர்கள் வெளியில் ஓடியதால் வீட்டில் இருந்தவர்கள் மண் சரிவில் சிக்காது தெய்வாதீனமாக உயிர்த் தப்பியுள்ளனர்.



மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக அப்பகுதிகளில் மண்சரிவு அபாயம் நிலவுவதாகவும், எனவே மக்களை அவதானமாக இருக்குமாறும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ற)

## நாயைத் திருமணம் செய்யும் பெண்



ஆம்ஸ்டர்டாம், ஜூலை 23
நெதர்லாந்தின் ஹாலந்து பிரதேசத்தைச் சேர்ந்த டொமினிக்(41) என்ற பெண் தனது செல்லப் பிராணியை மேரியுவர் பெட். காம் என்ற வலைத்தளத்தின் மூலம் திருமணம் செய்ய வுள்ளார்.

அண்மையில் அவருடைய முதல் கணவர்டோரெக் சிறுநீரக் கோளாறு காரணமாக இறந்து போனார். 16 வருடங்கள் டோரெக்குடன் வாழ்ந்த டொமினிக்குக்கு டோரெக்கின் இறப்புக் கடுமை யான சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. அதிலிருந்து மீளும் முயற்சியாக அவர் டிராவிஸ் என்ற தனது நாயைத் திருமணம் செய்யவுள்ளார்.

டொமினிக், டிராவிஸை கிரீஸ் நாட்டில் தங்கியிருந்தபோது அங்குள்ள ஒரு கடற்கரையில் கடந்த 2003 இல் காண நேர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாக டொமினிக்குடன் செல்லமாகப் பழகத் தொடங்கிய நாய் டிரா விஸ், ஒரு கட்டத்தில் டொமினிக்குடன் கூடவே ஒட்டிக் கொண்டுவிட்டது. அப்போதிலிருந்து டொமினிக்குடனேயே இருக்கும் டிராவிஸை முறையாக திருமணம் செய்ய அவர் முடிவெடுத்துள்ளார்.

பொதுவாக நிகழும் திருமணங்களைப் போலவே இந்தத் திருமணத்தையும் நடத்த ஆயத்த வேலை கள் தொடங்கியுள்ளன. விர்ச்சு வல் டூர் ஆக கணினி முன்னால் கரம் பிடிக்கும் வாய்ப்பை இந்த வலைத்தளம் வழங்குகிறது. முறையான திருமணச் சான்றி தழை இந்த தளத்திலிருந்தே தம்பதிகள் பெற முடியும் என் பது கூடுதல் தகவல். (ஐ)

# அணுசக்தி விவகாரம் வடகொரியா உறுதி



சியோல், ஜூலை 23
அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின்எதிர்ப்பையும் மீறி,வடகொரியா தொடர்ந்து அணுசக்தித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட முறை அந்த நாடு அணுக்குண்டுச் சோதனை நடத்தியதுடன் தொடர்ந்து அணு ஏவுகணைச் சோதனைகளையும் நடத்தி வருகிறது.

அதன்காரணமாக அந்த நாட்டின் மீது அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதனால் அந்த நாடு வறுமையில் தத்தளிக்கிறது. ஆனாலும் தனது அணுசக்தித் திட்டங்களைக் கைவிடும் விடயத்தில், வடகொரியா அசைந்து கொடுக்கவில்லை. இதேபோன்ற நிலையில்தான் ஈரானும் இருந்து வந்தது. ஈரான் அணுசக்தித் திட்டங்களை ஆக்கபூர்வமான வகையில் செயற்படுத்தி வருவதாகக் கூறி வந்தபோதும், வல்லரசு நாடுகள் அதனை ஏற்கவில்லை. அந்த நாடு, அணுசக்தித் திட்டங்களை அழிவுவழிக்கே செயல்படுத்தி வருவதாகக் கூறி, பொருளாதாரத் தடைகளை விதித்தன. இந்த நிலையில் தான் அண்மையில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் ஈரான் பேச்சு நடத்தி, வரலாற்றுச் சிறப்புமிக்க அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதன்படி ஈரானின் அணுசக்தி உலைகளை ஐ.நா. ஆய்வாளர்கள் பரிசோதிக்க முடியும். ஈரான் அணு ஆயுதங்கள் வாங்குவதற்கான தடை நீடிக்கும். அதற்குப் பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் படிப்படியாக விலக்கிக்கொள்ளப்படும்.

இதேபோன்று வடகொரியாவும் இறங்கி வந்து அமெரிக்காவுடன் பேச்சு நடத்தி, பொருளாதாரத் தடைகளை விலக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி சர்வதேச அரங்கில் எழுந்துள்ளது. இது தொடர்பாக வடகொரியா வெளியுறவுத்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகளுக்கு எதிராக வடகொரியாவுக்கு அணுசக்தி திட்டம் அத்தியாவசியமானது. ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்துடன் எங்கள் நிலையை ஒப்பிடுவது சரியல்ல. அமெரிக்காவின் இராணுவச் செயற்பாடுகள், தென் கொரியாவுடன் கூட்டு இராணுவப் பயிற்சி, அணு ஆயுத அபாயம் ஆகியவை எங்களுக்கு எப்போதுமே ஆத்திரமூட்டுபவை. எங்கள் அணுசக்தித் திட்டங்களைக் கைவிடுவதற்கு அல்லது ஒருதலைப் பட்சமாக முடக்குவதற்கு (அமெரிக்காவுடன்) பேச்சு நடத்துவதற்கு எங்களுக்கு விருப்பம் கிடையாது. நாங்கள் அணுசக்தி நாடு என்பது தெளிவானது. அணு சக்தி நாடுகளுக்கென்று சொந்த நலன்கள் உண்டு. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# எதிர்க்கட்சிகளை ஒத்துழைக்குமாறு பிரதமர் மோடி வேண்டுகோள்



புதுடில்லி,ஜூலை 23
நாட்டின் நலனுக்காக நாடாளுமன்றத்தைச் சுமுகமாக நடத்த எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கும்படி பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சில அரசியல் கட்சிகள் முக்கியமான அலுவல்களின்போது நாடாளுமன்றத்தைச் சுமுகமாக நடத்துவதற்கு ஒப்புக் கொண்டிருந்தன. எனவே நாட்டின் நலனுக்கு பயன் அளிக்கக்கூடிய அளவில் அவர்கள் நல்லமுடிவை எடுத்து மழைக்கால கூட்டத் தொடரில் ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று நம்புகிறேன். நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான சில நல்ல செயல்களில் அனைவரும் இணைந்து பங்காற்றவேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நாடாளுமன்றம் சிறந்த அமைப்பாகத் திகழ்ந்து அதில் பயனுள்ள வகையில் விவாதங்கள் நடைபெறவேண்டும் என்பதுதான் எனது நோக்கம் ஆகும்.

நாடாளுமன்றத்தில் அரசியல் கட்சிகள் தங்களுடைய ஒத்துழைப்பை அளித்து வருவதற்கு நன்றி. தொடர்ந்தும் என்னால் இந்த ஒத்துழைப்பைப் பெற முடியும் என நம்புகிறேன் எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# பாக்தாத்தில் மீண்டும் தாக்குதல்



பாக்தாத்,ஜூலை 23
ஈராக் தலைநகர் பாக்தாத்தில் மக்கள் கூட்டம் நிறைந்த புடவைக் கடையொன்றுக்கு அருகே நடத்தப்பட்ட கார் வெடிகுண்டுத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. பாக்தாத் நகரில் கடந்த வாரம் ஐ.எஸ்., பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சாரதி இல்லாத கார்களுக்காக போலி நகரம் உருவாக்கம்



வொஷிங்டன்,ஜூலை 23
அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உலகிலேயே முதல் முறையாக சாரதி இல்லாத கார்களைச் செலுத்திப் பரிசோதிப்பதற்காக எம் - சிட்டி என்ற போலியான நகரத்தையே உருவாக்கியுள்ளனர்.

அதற்கான கட்டுமானப் பணிகளை கடந்த வருடம் முதல், மிச்சிகன் மாநில போக்குவரத்துத் துறையும் மொபிலிடி டிரான்ஸ்பர்மேஷன் சென்ரரும் இணைந்து மேற்கொண்டுள்ளன. அதற்காக 10 மில்லியன் டொலர் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக 32 ஏக்கர் அளவுக்கு பரந்து விரிந்து, ஸ்மார்ட் சிட்டி போன்ற தோற்றம் தரக்கூடிய போலி நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. பெயருக்குத்தான் போலி நகரமே தவிர, உண்மையான வீதியில் இருப்பது போன்று அனைத்துப் போக்குவரத்து அம்சங்களும் இந்த வீதியில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. இனி, பொதுமக்களுக்கான பிரதான வீதிகளில் தானியங்கிக் கார்களால் விபத்து ஏதும் ஏற்படாதென்று எதிர்பார்க்கலாம். (ஐ)

# ராஜீவ் கொலை வழக்கு மறுசீராய்வு மனுத் தாக்கல்



புதுடில்லி,ஜூலை 23
முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை ரத்துச் செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய பாரதிய ஜனதா அரசு உச்ச நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனு மீது மத்திய அரசும், ஜனாதிபதியும் முடிவு எடுப்பதில் நீண்ட காலதாமதம் செய்ததைக் காரணம் காட்டி அவர்களின் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து உச்ச நீதிமன்றம் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் தீர்ப்பளித்தது.

அதனைத் தொடர்ந்து அந்த 3 பேர் உட்பட ராஜிவ் கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 7 பேரையும் விடுதலை செய்வதற்கான தீர்மானத்தை தமிழ்நாடு சட்டசபையில் முதல் வர் ஜெயலலிதா கொண்டு வந்து நிறைவேற்றினார்.

இதனைத் தொடர்ந்து உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பையே மறுபரிசீலனை செய்யக்கோரி உச்சநீதிமன்றத்தில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம், அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு சீராய்வு மனுவைத் தாக்கல் செய்தது. மத்திய அரசின் சீராய்வு மனுத் தள்ளு படி செய்யப்பட்டது.

அதன் பின்னர் மத்திய அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையின் போது 7 பேரின் விடுதலைக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் மத்திய பாரதிய ஜனதா அரசு மறுசீராய்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. அதில் குறித்த மூன்று பேரினதும் தூக்குத் தண்டனை ரத்துச் செய்யப் பட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டமை தவறு. 20 ஆண்டு காலம் சிறைத் தண்டனை அனுப வித்துவிட்டார்கள் என்பதைக் காரணம் காட்டி தூக்குத் தண்டனையை ரத்துச் செய்துவிட முடியாது, அது தவறான முன்னுதாரணமாகிவிடும் எனக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# பொது இடங்களில் முத்தம் சீனப் பொலிஸார் எச்சரிக்கை

பீஜிங்,ஜூலை 23
சீனாவில் பொது இடங்களில் முத்தமிடுபவர்களுக்கு எதிராக, கடும் நட
வடிக்கை எடுக்கப்படும், எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர். சீன அர சால்
நடத்தப்படும் பத்திரிகையின் இணையத் தளப் பதிப்பில், லியானிங் மாகாண,
சுரங்க ரயிலில், இளம் ஜோடி ஒன்று முத்தமழை பொழியும், 'வீடியோ' இடம்
பெற்றுள்ளது. இந்த வீடியோவுக்கு வாசகர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு ஏற்
பட்டுள்ளது. சுரங்க ரயில் உள்ளிட்ட பொது இடங்களில் முத்தமிடுவது, அரு
வருக்கத்தக்க செயல் என்றும், அருகில் உள்ள சிறுவர்களின் மனநிலை
பற்றி, முத்தமிடும் ஜோடிகள் ஏன் யோசிப்பதில்லை? என்றும், வாசகர்கள் தெரி
வித்துள்ளனர். இதையடுத்து, பொது இடங்களில் முத்தமிட்டால், நடவடிக்கை
எடுக்கப்படும் என சீனப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# 100 வயதில் கர்ப்பமா? அதிர்ச்சியடைந்த மூதாட்டி



...ண்டன், ஜூலை 23

100 வயதில் தாம் கர்ப்பமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட தகவலை கேட்ட மூதாட்டி ஒருவர் அதிர்ச்சியடைந்துள்ளார். பிரிட்டனின் ஹேம்ப்ஷைர் நகரில் வசித்து வருபவர் டோரிஸ். 100 வய தான அவருக்குக் கடந்த மாதம் சூஸெக்ஸ் பகுதியில் உள்ள மருத் துவமனை நிர்வாகம் கடிதம் ஒன்றை அனுப்பியது.

அதில் டோரிஸ் கர்ப்பமாக இருப்பதாகவும் அது தொடர்பான மருத்துவ அறிக்கைகளையும், சிறுநீரையும் கொண்டு வந்து பரிசோதனை குறித்து மருத்துவரைச் சந்திக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த டோரிஸ் தனது மகன்மாரிடம் அத...னத் தெரிவிக்க அவர்கள் சிரித்துள்...ள், மேலும் பேரக்குழந்தைகள் வாழ்த்துத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர். இது பற்றி மருத்துவமனைக்கு தகவலளித்தபோது, டோரிஸ் என்ற பெயர் கொண்ட வேறு ஒரு பெண்ணுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை அவருக்கு அனுப்பியதே அதற்கான காரணம் எனத் தெரியவந்தது. இதையடுத்து மருத்துவமனை நிர்வாகம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டுள்ளது.

(ஐ)

# புருண்டியில் வன்முறை

புஜும்புரா, ஜூலை 23

ஜனாதிபதித் தேர்தலின் வாக்குப் பதிவு தொடங்குவதற்கு முன்னதாக புருண்டித் தலைநகர் புஜும்புராவில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியில், ஜனாதிபதியாக பியார்ரே நகுருன்ஜிசா பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் 3 ஆவது தடவையாக அவர் போட்டியிடுகிறார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு போராட்டம் நடைபெறுகிறது. இதற்கிடையே ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா, தான்சானியா நாட்டில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்கச் சென்ற போது அங்கு திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டது.

ஆனால் அரச விசுவாச இராணுவப் படைகள் புரட்சியை முறியடித்து விட்டன. இதனை அடுத்து திட்டமிட்டப்படி தேர்தல் நடைபெறும் எனக் கூறப்பட்டது.



இந்த நிலையில் நேற்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு சற்று முன்பாக தலைநகர் புஜும்புராவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஒரு காவலர் மற்றும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஓர் ஊழியர் உட்பட இரண்டு பேர் உயிரிழந்தனர். கிழக்கு ஆபிரிக்க நாடுகள் கூட்டமைப்பு இந்தத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. மேலும் அனைத்து எதிர்க் கட்சிகளும் தேர்தலைப் புறகணித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# துண்டான கை காலுடன் இணைப்பு



பீஜிங்,ஜூலை 23

சீனாவின், சாங்ஷா பிராந்தியத்தில் உள்ள ஒரு தொழிற்சாலையில், பெரிய பிளேடுகள் பொருத்தப்பட்ட இயந்திரத்தில் பணிபுரிந்த ஜோவு என்பவரின் கை, எதிர்பாராதவிதமாக துண்டிக்கப்பட்டது. உடனே, அருகில் உள்ள, ஷியாங்யா மருத்துவமனையில் ஜோவு அனுமதிக்கப்பட்டார். அங்கு, அவரைப் பரிசோதித்த வைத்தியர் தாங் தலைமையிலான குழு, துண்டான கையை, மணிக்கட்டுடன் உடனடியாக இணைக்க முடியாது என்றும், துண்டான கையில் உள்ள நரம்புகள் மற்றும் தசை சாதாரண நிலைக்கு திரும்பிய பின்தான் இணைக்க முடியும் என் றும் கூறினர்.

அதுவரை, துண்டான கை உயிர்ப்புடன் இருக்க, அதனை ஜோவுவின் காலில் அறுவை சிகிச்சை மூலம் இணைத் தனர். ஒரு மாதம்வரை, துண்டான கை, காலில் பொருத்தப்பட்டிருக்கும். அதன் பின், கை அகற்றப்பட்டு, மணிக்கட்டுடன் இணைக்கப்படும். இந்த அறுவைச் சிகிச்சைக்கு, 10 மணி நேரம் ஆகும் என, வைத்தியர் தாங் கூறியுள்ளார்.

(ஐ)



பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் வருடந்தோறும்திறக்கப்படும் செயற்கைக் கடற்கரைக்கு இந்த முறை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளது. நகரின் மையப் பகுதியில் இருக்கும் செயினே நதிக்கரையை கடற்கரை போல உருவாக்கியுள்ளனர். கடற்கரையில் உள்ளது போன்ற பாம் மரங்கள், நாற்காலிகள், குடைகள் மணல் மற்றும் மீன்பிடித் தளமும் உருவாக்கப்பட்டுள்ளது.

# ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் ஐ.நா.வுக்கு இஸ்ரேல் கண்டனம்

ஜெருசலம்,ஜூலை 23


ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் சபையில் அங்கீகாரம் அளித்திருப்பதற்கு இஸ்ரேல் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி ஈரான் அரசு 10 வருடங்களுக்கு முன்பு அணுசக்தித் திட்டங்களை தொடங்கியது. அதற்கு அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. ஈரான் நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை பொருளாதாரத் தடை விதித்தது. மின் உற்...த்தி, மருத்துவம் போன்ற ஆக்கபூர்வ காரியங்களுக்காகவே அணுசக்தித் திட்டங்களை தொடங்கியிருப்பதாகவும், அணுகுண்டு தயாரிக்கும் திட்டம் தன்னிடம் இல்லை எனவும் ஈரான் அறிவித்தது. பொருளாதாரத் தடையால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஈரான் அரசு இறங்கி வந்தது. வல்லரசு நாடுகளுடன் பேச்சு நடத்தியது. கடந்த சில வருடங்களாக நடைபெற்று வந்த இந்தப் பேச்சின் பயனாக ஈரானுடன் வல்லரசு நாடுகள் புதிய அணுசக்தி ஒப்பந்தம் செய்தன. இந்த ஒப்பந்தத்தின் படி ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்படும். ஈரான் அணுசக்தி நிலையங்களை வல்லரசு நாடுகள் பார்வை[illegible] ஈரான் அரசு அனுமதிக்கும்.



வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் திட்டத்தில் கடந்த வாரம் வல்லரசு நாடுகளும் ஈரானும் கையெழுத்திட்டன. அதற்கு இஸ்ரேல் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தது. வரலாற்றுப் பிழை என இந்த ஒப்பந்தம் குறித்துக் கருத்துத் தெரிவித்தது. இந்த நிலையில் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் அங்கீகாரம் அளித்தது. ஐரோப்பிய ஒன்றியமும் ஈரான் ஒப்பந்தத்துக்கு அனுமதி அளித்துள்ளது. அமெரிக்க நாடாளுமன்றமும் விரைவில் அனுமதி வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து ஈரான் மீதான பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்படும். இந்த நிலையில் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு அங்கீகாரம் அளித்துள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு இஸ்ரேல் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கடந்த காலத்தில் பாதுகாப்புச் சபையில் கோரிக்கைகளைத் தொடர்ந்து நிராகரித்து வந்த ஒரு நாட்டுக்கு ஆதரவாக தற்போது ஐ.நா. முடிவு எடுத்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. அதனால் இந்தப் பிராந்தியத்தில் போர் அபாயம் குறைந்திருப்பதாக உலக நாடுகள் கூறுகின்றன. உண்மையில் போர் அபாயம் அதிகரித்துள்ளது. ஈரான் மீதான பொருளாதாரத் தடைகள் நீடிக்கப்பட்டிருந்தால் ஈரான் தனது நிலையிலிருந்து நிச்சயம் இறங்கி வந்திருக்கும் என இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

(ஐ)

# நாசாவின் அற்புதப் புகைப்படம் வெளியீடு



வொஷிங்டன், ஜூலை 23

ஒரு மில்லியன் மைல்கள் தொலைவில் இருந்து பார்த்தால் பூமி எப்படி இருக்கும் என்பதை நாசாவின் செயற்கைக்கோள் படம் பிடித்து அனுப்பியுள்ளது. நாசா அண்மையில் புளுட்டோ கிரகத்தின் நெருங்கிய புகைப்படங்களை வெளியிட்டது.

இந்த நிலையில் முதல் முறையாக சூரிய ஒளிபடும் பூமியின் ...தைச் சுமார் 1 மில்லியன் மை... தொலைவிலிருந்து நாசா ... கைக்கோள் படம் பிடித்து ... பியுள்ளது.

இந்தப் புகைப்படத்தில் நீலக்... களுக்கு, வெள்ளை மேகங்... பச்சை மற்றும் பழுப்பு நிற... நிலப்பரப்பும் அற்புதமாக பதி... யுள்ளன.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி (M.A)
முன்னாள் இயக்குநர், கலைஞானி அருங்காட்சியகம்.

# மாமனிதராக வாழ்ந்து மறைந்த கலைஞானி

எவருமற்ற தனி மனிதனாக, பன்முகப் பார்வை கொண்ட கலைஞனாக, தான் சார்ந்த சமூகத்தின் மீது பற்றுறுதி கொண்ட மாமனிதராக வாழ்ந்து வந்தவர் கலைஞானி. இவர் ஓவியர், புகைப்படக் கலைஞர், நாடகவிற்பன்னர், தொல்பொருள் ஆய்வு மற்றும் சேகரிப்பாளர் மட்டுமல்லாது ஒரு பத்திரிகையாளராகவும் விளங்கினார். தானே ஆசிரியராக இருந்து கலைஞானி என்ற பத்திரிகையை கலை, இலக்கியம், வரலாறு, தொல்பொருள் சார் விடயங்களை உள்ளடக்கியதாக வெளியிட்டு வந்தார். அவரது அர்ப்பணிப்பு மிகுந்த தன்னலமற்ற பொதுச்சேவையைக் கருத்தில் கொண்டே உயர்விருதுகள் அவரைத் தேடி வந்தன.

தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழ வேண்டும்; தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் கலைஞானி. தமிழரின் கலாசாரச் சின்னங்கள் அழித்தொழிக்கப்பட்டபோதும் அதற்கெதிராகக் குரல்கொடுத்தவர். பல்வேறு சிரமங்கள், வேதனைகள் மத்தியிலும் ஈழத்தமிழரின் இருப்பை உலகோர்க்கு உணர்த்தும் பண்பாட்டுக் கருவூலங்களை கண்ணின் மணிபோல் காத்துவந்தார்.

எளிமையான தோற்றம், கடல் அலைநிறத்தில் ஒரு குடுமி. தூய உள்ளத்தின் வெளிப்பாடாக எப்போதும் வெள்ளைவேட்டிசால்வை, தீர்க்க தரிசனம் மிக்க கண்கள். இவையே கலைஞானி அ.செல்வரத்தினத்தின் புற இலட்சணங்கள், பழைய பத்திரிகைகள், சிலைகள், நாணயங்கள், ஓடுகள் என விலைமதிப்பற்ற அரிய பொருள்களை சேகரிப்பதே இவரது பிரதான பணியாக இருந்தது. கண்ணாடிப் பெட்டிகளுக்குள் மிகவும்



கலைஞானி அ.செல்வரத்தினத்தின் 82 ஆவது பிறந்ததினம் இன்றாகும்

பாதுகாப்பாக இவற்றைப் பேணி வந்தார். இதனால் ஒரு காலத்தில் கண்ணாடி மனிதன் என்று அழைக்கப்பட்டார்.

குரும்பசிட்டிக் கிராமத்தில் பிறந்த இவர் போர்ச் சூழ்நிலைகளால் பல அரும்பொருள்களைப் பறிகொடுத்த நிலையில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து, திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியை தனது இறுதி இருப்பிடமாகக் கொண்டிருந்தார்.

குரும்பசிட்டியில் பொன் பரமானந்தர் வித்தியாலயத்திலும் தொடர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரிலும் கல்வி கற்றவர். அந்தக் காலத்தில் கலைஞானியை ஊரில் தியாகு என்றே அழைப்பார்கள். தியாகன் என்றும் செல்லமாக அழைக்கப்பட்டார். பிரமச் சாரியாக இருந்து தனது வாழ்வைத் தியாகம் செய்த காரணத்தினால் இவ்வாறு அழைக்கப்பட்டமை பொருத்தமானதாகவே தோன்றுகின்றது. பள்ளிப் பருவத்திலேயே அரும்பொருள்களைச் சேகரிக்கும் ஆர்வமும் சமூகப் பார்வையும் அவருக்கு இருந்துள்ளன. 54 வருடங்கள் வேறு எவரதும் நிதி உதவியோ சரீர உதவியோ இன்றி இந்தப் பணியை ஓர் இலட்சியமாகக் கருதிச் செய்து வந்திருக்கின்றார்.

பணம் தேடும் கூட்டத்திலிருந்தும், விளம்பரம்தேடும் கும்பலிலிருந்தும் விலகி நின்று அமைதியாக வாழ்ந்தவர் கலைஞானி. அவர் தமது இறுதிக் காலங்களில் கந்தர்மடத்தி லுள்ள வேதாந்த மடத்துக்கு நீராடுவதற்காகச் சென்று வந்தார். சமாதியடைந்த சுவாமி ஸ்ரீமத் சோமஸ் கந்தவேள் சுவாமிகளுடன் சுவாரசியமாகக் கதைப்பதையும் அங்கு செல்லும்போது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அரும்பொருள் மற்றும் தொல்பொருள்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் தன்னை ஈடுபடத் தூண்டிய விடயங்களாகப் பின்வரும் சம்பவங்களைக் கலைஞானி குறிப்பிட்டிருந்தார்.

1947 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆம் திகதி பாடசாலை மாணவனாக இருந்த என்னை சித்திர ஆசிரியர் கந்தையா, சரியாகப் படம் கீற வில்லை என்பதற்காகத் தண்டித்தார். அந்தத் தண்டனையின் தழும்புகள் முதுகுப் புறத்தில் படிந்திருந்தன. அவற்றைப் பெரிய ஆச்சியோ அல்லது வீட்டிலுள்ளவர்களோ கண்டுவிடக்கூடாது என்பதற்காகத் துவாய்த்துண்டு ஒன்றினால் முதுகைப் போர்த்தியபடி கிணற்றடியில் மரங்களின் அடியில் கிண்டிக் கிளறிக்கொண்டிருந்தேன். அப்போது மூன்று காசுகளும், ஒரு சங்கும் என் கண்ணில் பட்டன. அவற்றை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டேன். அதே ஆண்டு ஆடி மாதம் நான் படித்த யூனியன் கல்லூரிக்கு தேசாதிபதி அவர்கள் கண்காட்சி ஒன்றுக்காக வந்திருந்தார். அதனையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சி நிகழ்ச்சியில் எனது சேகரிப்பான நாணயங்களையும், பழைய முத்திரைகளையும் காட்சிக்கு வைத்தேன். தேசாதிபதி அதனைப் பார்த்துவிட்டுச் சென்றதும் நாணயங்களும் முத்திரைகளுக்குமாக இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன. அது முதல் Antique எனப்படும் தொல்பொருள் மற்றும் அழகுப் பொருள்களைச் சேர்க்கலானேன்.

இந்தச் சம்பவம் இன்றைய மாணவர்களுக்கு ஒரு சிறந்த பாடமாகும். மாணவர்களின் வாழ்க்கையில் நிகழும் எதிர்பாராத நிகழ்வுகள் அவர்கள் வாழ்வில் ஒரு பெரும் திருப்புமுனையாக அமைகின்றமையை கலைஞானியின் பாடசாலை வாழ்க்கைஎமக்குவிளக்கிநிற்கின்றது.

இவருடைய பொருள்கள் அடங்கிய கண்காட்சி 1947 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் 1991 ஆம் ஆண்டு தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் பல்கலைக்கழக நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. 1998 இல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. கண்காட்சிகளில், தமிழர்களின் நாகரிக வரலாற்றை சித்திரிக்கின்ற பழைமை வாய்ந்ததும் பல்துறை சார்ந்ததுமான அரும்பொருள்களான தொல்லியற் சின்னங்கள், கலை, பண்பாடு, இலக்கியம், சமயம், வைத்தியம், சோதிடம், அரசியல் ஆகிய இன்னோரன்ன பல அரிய அறிவியற் பொக்கிஷங்களைக் கண்டுகளித்ததாக பொது மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான பெருந்தொண்டர் 2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 28 ஆம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்ததோடு அவர் பணியும் முற்றுப்பெற்றது. அவர் புகழுடல் மறைந்தாலும் மக்கள் மனங்களில் நீங்காத கலைஞனாக கலைஞானி என்றும் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.


## பென்டாபேபி உற்பத்திகளின் தரம் உறுதிப்படுத்தப்பட்டது

இலங்கையின் முதற்தரசிறார்களின் உற்பத்திவர்த்தக நாமமான பென்டாபேபி, சிறார்களின் சருமத்தை பாதுகாப்பது உறுதி என சர்வதேசதரம் வாய்ந்த அமெரிக்க மருத்துவ ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர்களின் உற்பத்திப் பொருளுக்கு சர்வதேசதரம் வாய்ந்த இத்தகையசான்றிதழ் வழங்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

அமெரிக்காவின் எவ்.டி.ஏ நிறுவனத்தின் அனுமதியை பெற்ற நியூயோர்க் நகரில் அமைந்துள்ள சருமநோய் மற்றும் சிறுவர் நோய் விசேட வைத்தியர் குழுவொன்றினால் இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பென்டாபேபி உற்பத்திகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வுகளின் மூலம் இந்ததகவல்கள் உறுதியாகியுள்ளன.

பென்டா பேபி உற்பத்திகள், சிறார்களின் சருமத்திற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத அதேவேளை சருமத்தை பாதுகாத்து சருமத்திற்கு முழுமையான போஷாக்கு கொடுப்பதாக இதன் மூலம் உறுதியாகியுள்ளது. அதற்கமைய முழுமையான நம்பிக்கையுடன் பென்டாபேபி உற்பத்திகளை தமது மழலைகளுக்கு பயன்படுத்த இலங்கைத் தாய்மார்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. செயற்கை எண்ணெய்கள் மற்றும் சிலிக்கன் அடங்காத சிறார்களுக்கான ஒரே உற்பத்தி பென்டாபேபி தயாரிப்புக்கள் ஆகும். உங்கள் மழலையின் சருமத்தை மென்மையாக வைத்திருக்கவும், சருமத்திற்கு தீங்கு விளைவிக்காமல் மிக பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கவும் உதவுகின்றது.

பேபிகிறீம், பேபி ஷெம்பூ, பேபி வொஷ் ஆகியரகங்களில் பென்டாபேபி உற்பத்திகளை பெற்றுக்கொள்ளலாம்.

பென்டாபேபி உற்பத்திகளுக்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம் தொடர்பாக கருத்து தெரிவித்த நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் ஆய்வு மற்றும்




அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் கலாநிதி நிமல் புண்யசிறி, 'பென்டாபேபி உற்பத்திகள் சர்வதேச தரம் வாய்ந்தவை. ஐரோப்பாவின் அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற பென்டாபேபி உற்பத்திகள் உள்ளூரில் காணப்படும் ஏனைய உற்பத்திகளுடன் ஒப்பிட முடியாத அளவிற்கு உயர்தரத்தை கொண்டு அமைந்துள்ளது. இலங்கையின் புகழை சர்வதேசத்திற்கு கொண்டுசென்ற இந்த உற்பத்தி தொடர்பாக அனைவரும் பெருமிதம் கொள்ள முடியும்' என குறிப்பிட்டார்.

100 வீத உள்ளூர் உற்பத்தியான பென்டாபேபி, உற்பத்திகளை தயாரித்து விநியோகிப்பது இலங்கையின் முதற்தர அழகுசாதன உற்பத்திகளை தயாரிக்கும் நேச்சர்ஸ் சீக்ரட்ஸின் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனமாகும். பாரம்பரியமாகவே முன்னெடுக்கப்படுகின்ற எமது மருத்துவ சேர்க்கைகளை புதிய தொழில்நுட்பத்துடன் கலந்து இந்த தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவ தாவரங்கள் தொடர்பாக நீண்டகாலமாகவே ஆய்வுகளில் ஈடுபட்டுவருகின்ற நேச்சர்ஸ் பியூட்டிகிரியேஷன்ஸ் நிறுவனம், இலங்கையில் முதலாவது தனியார் தாவர ஆய்வுகூடத்தை அமைத்த நிறுவனமாகவும் விளங்குகின்றது.

இலங்கையிலுள் தாவரங்கள் தொடர்பாக ஆய்வுகளை நடத்தி புதிய உற்பத்திகளை இலங்கைக்கும் சர்வதேச சந்தைக்கும் அறிமுகப்படுத்துகின்றது.

(த)

## கடமையுணர்வுக்கு பாராட்டு

ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியத்தை மீளாய்வு செய்வதற்கென வழங்கப்பட்ட படிவத்தை திரும்பவும் ஒப்படைப்பதற்கான இறுதித் திகதி இந்த மாதம் 15 என அறிவிக்கப்பட்டிருந்தது. எமது பிரிவு கிராம அலுவலர் கடமை விடுமுறையில் நின்றதால் அந்தப் படிவத்தை உடுவில் பிரதேச செயலர் அலுவலகத்தில் நேரடியாக ஒப்படைப்பதற்கென அன்று காலை வேளையில் அங்கு சென்றிருந்தேன்.


நான் அங்கு சென்றபோது பிரதேச அலுவலக உத்தியோகத்தர்கள் அலுவலகத்துக்கு வெளியே காணப்பட்டனர். கைகளில் ஏதோ வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளும் காணப்பட்டன. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

இன்று அலுவலகம் இயங்கமாட்டாது என்ற எண்ணம் எனது மனதில் ஓடியது. என்றாலும் அலுவலகத்தினுள் சென்று பார்ப்போம் என எண்ணிக்கொண்டு உள்ளே நுழைந்தேன் ஓய்வூதியக்கிளையையும் அடைந்தேன். அது வெறிச்சோடிக் காணப்பட்டது. ஒரு பெண் அலுவலர் மட்டுமே அமர்ந்திருந்தார். ஆனால் ஓய்வூதியர்களின் கடமைக்குப் பொறுப்பான பெண் அலுவலரின் இருக்கையும் காலியாகக் காணப்பட்டது. அப்போது அந்தக் கிளை அலுவலகத்துக்கு வெளியே காணப்பட்ட ஆண் ஊழியர் ஒருவர் நான் அங்கு சென்றதன் காரணத்தைப் புரிந்து கொண்டவராக என்னை அங்கு நிற்குமாறு கூறிவிட்டு வெளியே சென்றார். சில வினாடிகளில் அவரும் எனது விடயத்துக்குப் பொறுப்பான பெண் அலுவலரும் வருவது தெரிந்தது. வந்தவுடன் நான் கொண்டு சென்ற ஆவணங்களைப் பெற்றுப் பரிசீலித்த பின்னர் என்னிடமிருந்து பெறவேண்டியவற்றையும் தவறாது பெற்றுக் கொண்டார். பின்னர் அவற்றையெல்லாம் உரிய இடத்தில் வைத்த பின்னர் அங்கிருந்து அவசரம் அவசரமாகப் புறப்பட்டுச் சென்று விட்டார். நானும் வெளியே சென்று பார்த்தபோது அலுவலக உத்தியோகத்தர்களின் மது மற்றும் போதைப்பொருள்களை ஒழிப்பது தொடர்பான ஊர்வலம் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

உண்மையில் அந்தப் பெண் அலுவலரின் கடமையுணர்வு எனது உள்ளத்தை நெகிழவைத்து விட்டது. இவரது வழியில் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் செயற்படும்போது எம்மைப் போன்றவர்களுக்குப் பிரச்சினையே இருக்காது.

*த.சபாரத்தினம் ,ஓய்வூதியர்*

## வாசகர் திருமுகம்



## மனிதர்களிடத்தில் இரக்கம் பிறக்குமா?

ஒரு சிறிய வடி ரக வாகனத்தில் மிகக் கொடூரமான முறையில் ஆறு மாடுகளைக் கொண்டு சென்றவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான செய்தியைப் பத்திரிகை ஒன்றில் வாசித்தபோது கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. இவ்வளவு இரக்கமற்ற மனிதர்களும் எமது சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களா? என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

மாடுகள் வாகனத்தில் இருந்த அவல நிலையைக் கண்ட அச்சுவேலிப் பொலிஸாரும் கண்ணீர் விட்டதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தமை கல்மனம் படைத்தவர்களையும் கரைய வைத்திருக்கும்.

அந்த வாகனத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மாடுகளில் நான்கு பசுமாடுகளும் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது எந்த வகையிலும் மன்னிக்க இயலாதது.

உலகில் படைக்கப்பட்ட அனைத்துமே தமக்கானவை என மனிதர்கள் நினைக்கின்றனர்.

மனித உயிர் தவிர்ந்த ஏனைய அனைத்துமே அற்பமானவை எனவும் அவர்கள் எண்ணுகின்றனர். இதன் காரணமாகவே ஏனைய உயிரினங்களை வருத்துவதற்கு அவர்கள் தயங்குவதில்லை.


காடுகளை எடுத்துக்கொண்டால் அங்கு வாழுகின்ற கொடிய விலங்குகள் மட்டுமே மாமிசத்தை உட்கொள்ளுகின்றன. ஏனைய மிருகங்கள் புல் பூண்டுகளையும் தழைகளையும் உண்டு உயிர் வாழ்கின்றன. ஆனால் மனிதர்களும் கொடிய விலங்குகள் போன்று மாமிசத்தை நாடிச் செல்வது எந்த வகையிலும் நியாயமாகப் படவில்லை. வீதிகள் தோறும் காட்சியளிக்கும் புலால் உணவுகளைப் பரிமாறுகின்ற உணவகங்களும் மனிதனின் புலால் வேட்கையைத் தூண்டுகின்றன என்ற கருத்தையும் நாம் நிராகரித்துவிடக் கூடாது.

மேலும் மிருகங்களைக் கொல்களங்களுக்கு எடுத்துச் செல்லும்போதும், கொல்களங்களில் கொல்லும்போதும் சற்று இரக்கத்துடன் செயற்படுவதுதான் மனித தர்மமாகும்.

அச்சுவேலிச் சம்பவம் போன்று வேறு இடங்களிலும் தினமும் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றன. மனிதர்களின் மனங்களில் இரக்கம் ஏற்படாத வரை இது தொடரவே செய்யும்.

*மா. பரராசன் மட்டுவில்*

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## ஜனவரி - 8 தோல்வியை பாடமாகக் கொள்ளவேண்டும்

இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான அல் - குவைதா இலங்கையில் வலையமைப்பைக் கொண்டிருப்பதாக ஊடகங்களும் இணையதளங்களும் முன்னர் செய்திகளை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வந்தன. ஆனால் இதற்கான ஆதாரங்கள் எதுவும் வெளிவருவதில்லை; எவரும் கைதுசெய்யப்படுவதுமில்லை. இவையெல்லாம் அரசியல் நோக்கம் கொண்ட வெறும் புரளிகள் என்று பின்பு தெரிய வரும். முஸ்லிம் விரோத நடவடிக்கைகளுக்கு பொதுபலசேனா இதனை நன்கு பயன்படுத் திக்கொண்டது.

ஆனால் தற்பொழுது ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் அமைப்புடன் இலங்கையைத் தொடர்புபடுத்தி முதல் தடவையாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் இலேசுப்பட்டவர்கள் அல்லர். சிரியாவிலும் ஈராக்கிலும் பெருமளவு நிலத்தைப் பிடித்து வைத்துக்கொண்டு 'இஸ்லாமிய தேசம்' என்ற பெயரில் ஒரு நாட்டைத் தன்னிச்சையாகப் பிரகடனம் செய்துள்ளனர். மிகவும் குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சி கண்ட அமைப்பு இது. பகிரங்கமாக ஈவிரக்கமின்றிச் சிரச்சேதம் செய்வது உட்பட எதிரிகளுக்கு மரணதண்டனை விதிக்கும் அதன் கொடூரமான முறை உலக நாடுகளின் ஏகோபித்த கண்டனத்தைப் பெற்றுள்ளது.

இத்தகைய ஓர் அமைப்பில் இலங்கையர் ஒருவர் இணைந்திருந்தார் என்றும், சிரியாவில் நடத்தப்பட்ட விமானக்குண்டுத் தாக்குதலில் இவர் உயிரிழந்தார் என்றும் கடந்த சில நாள்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

தேர்தல் பிரசாரத்துக்கு எதுவும் இல்லாத நிலையில் புலிப்புராணத்தைக் கையில் எடுத்துக்கொண்டவர்கள், மஹிந்தவும் அவரது ஆதரவாளர்களும். கடந்த ஆறுமாத காலத்தில் புலிகள் மீண்டும் தலைதூக்கிவிட்டனர்; நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்று இவர்கள் தேர்தல் கூட்டங்களில் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்குத் தற்பொழுது இரு விடயங்கள் வாய்க்கு அவலாகி விட்டன. ஒன்று ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் அமைப்பில் இணைந்து கொண்ட இலங்கையர் குறித்த செய்தி. மற்றையது தமிழ்நாடு, இராமநாதபுரத்தில் சயனைட் குப்பிகளுடன் ஓர் இலங்கையர் உட்பட மூவர் கைதாகியிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி.

இந்த இரண்டு செய்திகளுமே இந்த நாட்டின் சிறுபான்மை இனங்களான தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு எதிரான பேரினவாதத்தின் பரப்புரைக்குத் தீனி போடக்கூடியவை. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் இலங்கையர்கள் தொடர்புகொண்டிருப்பது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானது என்று மஹிந்த ஆதரவு முன்னாள் எம்.பி. டலஸ் அழகப்பெரும ஏற்கனவே மகுடி வாசிக்க ஆரம்பித்து விட்டார். புலிப் புராணத்துக்கு இராமநாதபுரம் சயனைட் செய்தி உதவப் போகிறது. ஆகவே இவை தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையை வெளிக்கொணர்வது அவசியமாகும்.

உயிரிழந்த ஐ.எஸ்.ஐ.எஸ். போராளி மத்திய மாகாணத்தைச் சேர்ந்தவர் என்றும் பாகிஸ்தானில் சட்டத்துறை பயின்று பட்டம் பெற்றவர் என்றும் அவரது குடும்பத்தவர்களிடமிருந்து பொலிஸாரால் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேசமயம் தமிழ்நாடு இராமநாதபுரத்தில் கைதானோரிடமிருந்து 75 சயனைட் குப்பிகள், நான்கு புவி நிலைகாட்டிகள், 300 கிராம் சயனைட் உட்பட தடைசெய்யப்பட்ட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், வாகனம் ஒன்றில் எடுத்துச்செல்லப்பட்ட சமயம் பொலிஸாரின் திடீர் சோதனையின்போது இவற்றைக் கைப்பற்றி சந்தேக நபர்களைக் கைதுசெய்ய முடிந்ததாகவும் தமிழ்நாடு பொலிஸாரை ஆதாரம் காட்டி பி.பி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது. மஹிந்தவை வெற்றிபெற வைக்க இந்திய அமைப்பான றோ தீவிரமாகச் செயற்படுகிறது என இணையதளங்களில் செய்திகள் வெளியான நிலையில் இவ்வாறான பயங்கரவாத அச்சுறுத்தல் செய்திகள் வெளியாகின்றமை கவனிக்கத்தக்கவை.

இந்த இரு சம்பவங்கள் குறித்த உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்படவில்லை. அதற்கு முன் இவற்றை ஊதிப் பெரிதுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இனவாதம் மூலம் அரசியல் செய்ய முயற்சிப் போர் ஜனவரி - 8 தோல்வியை ஒருபாடமாகக்கொள்ள வேண்டும்.

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேர்தலை தண்டு அழுகல் நோய் அணுகாமல் பார்த்துக் கொள்க

இன்னும் இருபத்தைந்து நாள்களில், நாட்டில் நடைபெற உள்ள 15ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க உள்ள ஐந்து அனைத்துலக கண்காணிப்புக் குழுக்களில் ஒன்றான, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கொழும்பை வந்தடைந்துள்ளனர்.

தேர்தலுக்கு உரிய சட்டநடைமுறைகள், தேர்தல் தொடர்பிலான நிர்வாகப் பணிமுறைகள், தேர்தல் பரப்புரை நடைமுறைகள், அரச மற்றும் சிவில் சமூகத்தினரின் பங்களிப்புகள், வாக்களிப்பும் வாக்குகளை எண்ணுதலும் , வாக்களிப்புச் சம்பந்தமான முறைப்பாடுகள், தேர்தல் முடிவுகளை மக்களுக்கு அறிவித்தல் ஆகிய விடயங்கள் தப்பின்றி, பாகுபாடற்ற முறையில் ஒப்பேற்றப் பட்டனவா என்பதை --

உன்னிப்பாக அவதானித்து தமது கருத்துக்களை, நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது அவர்களின் பிரதான பணிகளில் உள்ளடங்கும்.

அச்சொட்டாய் பத்து ஆண்டுகளின் பின்னர், ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவினரின் பணி, சேவை, இப்போதைய நாடாளுமன்றத் தேர்தலில் எமது நாட்டுக்குக் கிடைக்கிறது.

அனைத்துலக நாடுகளில் இருந்து இங்கு வரும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களில், ஐரோப்பிய ஒன்றியக் குழு மூத்த அமைப்பு என்று கொள்ளலாம். ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய பங்காளிகளில் இலங்கையும் ஒன்றாக விளங்குகிறது.

உலகின் ஏனைய நாடுகளில் ஆற்றிய சேவைகளுக்குச் சமமான பணியை இங்கும் ஆற்றவே வந்துள்ளோம் --

சுவீடன், ஸ்பெயின், சிலோவாக்கியா, ஹொலன்ட், அயர்லாந்து, கிறீஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் எங்கள் அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர் -- என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கிறிஸ்ரியன் பிறீடா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைமுறைகள், அவை குறித்த ஆய்வாளர்கள், மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் வல்லுநர்கள், தரவுகளை ஆழமாக ஆய்வு செய்பவர்கள் எனப் பல்துறைகள் சார்ந்த நிபுணத்துவம் கொண்டவர்களும், இந்த அமைப்பில் தமது சிறந்த பங்களிப்புக்களை வழங்குகின்றனர் -- என்பதும் விசேடத்துவம் உடையதாகும். இவை ஊன்றிப் பதிவு செய்யப்பட வேண்டியவை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினரின் அறிக்கைகள், பக்கம் சாராமல், ஆக்கபூர்வமான, ஆணித்தரமான, கருத்துக்களைக் கொண்டவை என்று “முத்திரை ஒட்டப்பட்டவை” என்பதும் அனைத்துலக மட்டத்தில் பிரசித்தமானது.

ஏன்? ஊடகங்கள், இணையத்தளங்களின் நடத்தைகள் குறித்த அவதானிப்புக்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு அறிக்கையில் காத்திரமான வடிவில் உள்ளடக்கப்படும் -- என்று இலங்கை வந்துள்ள அதன் தலைமை அதிகாரி பிறெடரா கருத்து வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட தேர்தல் கண்காணிப்பு அவதானிப்புக் குழுவின் அறிக்கை தேர்தல் முடிவுற்ற ஒரு சில மாதங்களில் வெளிவரும். அப்போது எமது நாட்டின் ஜனநாயகச் செல்நெறி எந்தளவுக்குத் தலைகீழாகி வருகிறது என்பது பால் வெள்ளை போன்று வெளிச்சத்துக்கு வந்துவிடும்.

அடுத்தமாதத் தேர்தலில் எந்தப் பக்கம் வென்றாலும், ஜனநாயக நெறிமுறைகள் இந்த நாட்டில் எந்தளவுக்கு தண்டு அழுகல் நோயினால் பாதிப்பு அடைந்துள்ளது என்பது மிகப் பிரகாசமாகத் தெரியும்......!

அந்த நிலை, அனைத்துலக மட்டத்தில் இலங்கைக்கு அபகீர்த்தியை அள்ளி வீசும்.

அத்தகைய பாதகமான நிலை முளைவிடாமல் தடுக்கும் பொறுப்பு, தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு ஒட்டு மொத்தத்தில் உண்டு. நாட்டுக்கு நற்பெயர் வாங்கித்தரும் அந்தப் பொறுப்பில் அறுபது சதவீதம்,களத்தில் காலடி புதைத்து நிற்கும் சகல அரசியல் கட்சிகளின் தலைமைத்துவங்களுக்கும் வேட்பாளர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் உண்டு. உணர்ந்து செயற்படுவார்களா?


# அரசியலில் சந்தர்ப்பவாதமும் சகுனித்தனமும்

**வி.எஸ். நடராசா**

பொதுத்தேர்தல் நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு சில நாள் களேயாகியிருக்கும் இந்தத் தருணத்தில் நான் இந்த நாட்டின் அரசியல் போக்குக் குறித்துச் சில விடயங்களைப் பகிர நினைக்கிறேன். வடக்கு கிழக்கிலும் சரி தெற்கிலும் சரி பலர் வேகமாகக் கட்சி மாறுகிறார்கள். கேட்டால் ஏதோ காரணங்களைக் கூறித் தப்பிவிடுகிறார்கள்.


1977 இல் ஜே.ஆரின் பிரமாண்டமான வெற்றியின் பின்பு நாடாளுமன்றத்தில் புதிதாக ஐ.தே.கட்சிக்குத் தாவிய அங்கத்தவர்களை மற்றைய அங்கத்தவர்கள் கிண்டலாக 1ஸ்ரீ 2ஸ்ரீ என்று பட்டப்பெயர் சொல்லி அழைப்பார்கள். அந்த அளவுக்கு அந்தக் காலத்தில் கட்சித் தாவல் நடைபெறுவது மிகவும் அபூர்வம். பின்பு ஜே.ஆரே அந்தச் செயற்பாட்டை ஊக்குவித்தார். உதாரணமாக முன்னாள் அமைச்சர் இராஜதுரையின் கட்சித்தாவலைக் கூறலாம்.

சகல தமிழ்பேசும் அரசியல் தலைவர்களை எல்லாம் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (இவர் அந்த நிறுவன உரிமையாளரின் உறவினர் என்கிறார்கள்) ஒரு குறிப்பிட்ட வாராந்த அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு அழைத்து அவர்களுக்கு இடையில் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தி உண்மையில் நிகழ்ச்சியை மிகவும் பிரபலமாக்கினார். அதன் மூலம், தான் சகலமும் அறிந்த அரசியல் விற்பன்னர் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருந்தார். அதையே மூலதனமாக வைத்துக்கொண்டு கடந்த பொதுத் தேர்தலில் ரணிலின் உதவியினால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரானார். வெற்றியடைந்த அடுத்தவாரமே தனக்கும் ஐ.தே.கட்சிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்றுகூறி ஒரு சுயேச்சையான நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டார். கடந்த ஐந்து வருடங்களாக சந்தர்ப்பம் கிடைக்கும் நேரங்களில் எல்லாம், ரணிலை உதாசீனம் செய்வது மட்டுமல்லாது அவருக்கு எதிரான பரப்புரைகளிலும் ஈடுபட்டு வந்தார். ஏறிய ஏணியை மறந்தார். அதன் பலாபலன் இந்த முறை நுவரெலியா தேர்தல் மாவட்ட ஐ.தே.கட்சி வேட்பாளர் பட்டியலில் அவரது பெயர் இடம் பெறவில்லை. அவரது பார்வையில் மலையகத் தலைவர்கள் எல்லோருமே திருடர்கள். அரசியல் தெரியாதவர்கள். தான் ஒருவரே மக்கள் சேவைக்காக இறைவனால் அனுப்பப்பட்டவர் என்ற மாதிரி தோற்றம் காட்டுகிறார். இன்றைய பத்திரிகையைப் பார்த்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியின் தேசியப் பட்டியலில் அவர் பெயர் இடம்பெற்றுள்ளது. அவரிடம் கேட்டால் தான் மைத்திரியின் ஆதரவாளரேயன்றி மஹிந்தாவின் எதிரி என்பார்.



தற்செயலாக மஹிந்த பிரதமரானால் இந்தப் பிரகிருதி எவருக்கு விசுவாசத்தைக் காட்ட வேண்டி வருமோ தெரியவில்லை.

அத்துடன் நில்லாது, தன்னால் தனித்துக்குழு அமைத்துப் போட்டியிட்டு வெல்வது நடக்காத காரியம் என்று தெரிந்ததும் நிம்மதியாக தாம் உண்டு தமது வேலை உண்டு என்று வாழ்ந்து கொண்டிருந்த 11 மலையக யுவதிகளுக்குப் பணம் கொடுத்து, ஒரு குழு அமைத்து தனது இயக்கத்தின் சார்பாக சுயேச்சைக் குழுவாக நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு நியமனப் பத்திரம் பெற வைத்துள்ளார். தனித்து வெல்ல முடியாது என்ற முடிவினால்தானே தனது பெயரை தேசியப்பட்டியலில் உள்ளடக்கியிருக்கிறார். பாவம் இவரது ஆலோசனையைக் கேட்ட அப்பாவி யுவதிகள் கையில் இருக்கும் சொற்ப பணத்தையும் இழந்து கந்தறுந்து போகவேண்டியதுதான்.



அத்துடன், வன்னி தேர்தல் மாவட்டத்திலும், ஒரு குழுவை உருவாக்கி தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு எதிராகக் கிளப்பிவிட்டிருக்கிறார். அடுத்து வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனையும் த.தே.கூட்டணித் தலைமையுடன் மோதவைத்து, அவரது வாயை முடிந்த வரைகிண்டி அவர் தனியாக சுயேச்சையாகவேனும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென வற்புறுத்தி தனக்கு சகுனி வேலை செய்யவும் நன்கு பழக்கம் என்பதைக் காட்டியுள்ளார்.

அடுத்த வீரன், கொழும்பில் நிரந்தரமாக வசிக்கும் நல்லையா குமர குருபரன் ஆவார். இவர் ஒரு முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரது மகன். இவர் நெடுங்காலம் காலம்சென்ற குமார் பொன்னம்பலத்தின் கட்சியின் செயலாளராக இருந்தவர். பின்பு அதிலிருந்து வெளியேறி ஜனநாயக மக்கள் முன்னணியில் இணைந்த கொண்டவர் மனோகணே சனுடன் முரண்பட்டு அந்தக் கட்சியிலிருந்தும் வெளியேறியவர்.

அவர் அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்களை வளைத்துப்பிடித்து அவர்கள் கையினால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, வடக்கு கிழக்குக்கு வெளியிலும் போட்டியிட வேண்டும். அதாவது கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அதற்கு சகல தகுதிகளையும் கொண்டவர், நல்லையா குமர குருபரனையே தெரிவு செய்ய வேண்டும் என்ற சாரப்பட பத்திரிகைகள் மூலம் தொடர்ந்து அறிக்கைகள் வெளியிட வைத்தார். இது ஒரு வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எமது மதிப்புக்கும் உரிய தலைவர் மனோகணேசனுக்கும் இடையில் சிண்டு முடியும் வேலையாகும். ஏதோ கடவுள் புண்ணியம் அந்த முயற்சி படுதோல்வியில் முடிந்தது. குமரகுருபரனும் விட்டேனா பார் என்று முழு முயற்சி எடுத்து யார் யாரையோ பிடித்து தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணியில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஒரே தமிழ் வேட்பாளராக இடம்பெற்றிருக்கிறார். தமிழ்க் காங்கிரஸ், மனோவின் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றெல்லாம் இடம்மாறி இன்று மஹிந்த கட்சியில் போட்டியிடுகிறார். அவரைக் கேட்டால் சொல்லுவார், தான் மைத்திரியின் ஆதரவாளர், மஹிந்தவின் எதிரி என்பார். மேற்படி இரண்டு நபர்களின் அரசியல் வரலாறு கட்சி மாறும் கலையில் வல்லவர்கள் என்பதையே காட்டுகிறது. ■

# மனிதகுலம் மறவாத இரத்த சரித்திரம் ஜூலை 23


செ.உமாசுதன்
அளவையூர் பாவலன்



இனப் பிரச்சினையும், தமிழர் விரோதச் செயல்களும் இலங்கையில் இன்னும் தொடர்கின்றன அதிகாரத்தை தமது கரங்களில் கொண்டுவர தங்களுடைய கொள்கைகளில் இருந்து அடிக்கடி மாறுகின்றனர். திட்டமிட்ட படுகொலைகளையும், இன அழிப்புப் போரையும் செய்தனர். சகிப்புத்தன்மையின்மை, சமத்துவமின்மை, ஊழல், மோசடி, சர்வாதிகார ஆட்சி என்பன தலைவிரித்தாடுகின்றன. சர்வதேச அழுத்தங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அடிபணியாது அவர்களையும் பந்தாடுகின்றனர். தூக்கி வீசுகின்றனர். கடந்த முப்பது வருடகாலங்களுக்கும் மேலாகத் தொடரும் இந்த அவலநிலை தமிழர்களின் துர்ப்பாக்கியமே.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்ததுதான் ஜூலைப் படுகொலைகள், 1983 ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி ஈழத் தமிழ் ஆன்மாக்களின் வரலாற்றில் மறக்க முடியாத நாள். மரணங்களின் பிறந்தநாள், ஆன்ம ஓலங்கள் இந்த மண்ணில் பரந்த நாள், தென்னிலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக மிகப்பெரிய அளவில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

தமிழர்கள் கண்மூடித்தனமாகவும், வன்மத்தனமாகவும் கொடூரமாகக்



கொலை செய்யப்பட்டார்கள். இரண்டாயிரத்துக்கும் அதிகமான தமிழ் ஆன்மாக்களின் உயிர்கள் சூறையாடப்பட்டன. தமிழ் இனத்தை அழிப்பது என்ற இனவெறியும், இரத்த வெறியும் கோரத்தாண்டவம் ஆடின. தமிழர்களின் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த இனப்படுகொலை 4 நாள்களுக்கு தொடர்ந்து நீடித்தது. இந்த நீடிப்பின் கோரப்பிடியில் தமிழர்கள் வீதிவீதியாக விரட்டப்பட்டும் வெட்டியும், சுட்டும், உயிருடன் எரித்தும் படுகொலை செய்யப்பட்டனர். பலர் குடும்பம் குடும்பமாக வீடுகளுடன் சேர்த்துக் கொளுத்தப்பட்டனர். தமிழரின் வர்த்தக நிலையங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டன.

இவை இடம்பெற்று ஐந்து நாள்களின் பின்னரே அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கலவரம் தொடர்பில் தொலைக்காட்சியில் தோன்றி விளக்கம் கொடுத்தார். மாறாக தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் தொடர்பில் வருத்தமோ, கவலையோ கொள்ளவில்லை. இனப்படுகொலையை நியாயப்படுத்திக் கருத்துக்களை வெளியிட்டார். தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் கொண்ட நம்பிக்கையீனம் காரணமாக இனக்கலவரம் வெடித்ததாகவும், மனக்கசப்பு ஏற்படும்போது, சிங்களவர்கள் வன்முறையில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாதது என்றும் கூறி தங்களை நியாயப்படுத்தி கதை விட்டனர். இதனை யாரும் மறந்து விடவும் முடியாது மறுக்கவும் முடியாது. இந்தப் பரிதாப நிலை தமிழ் ஆன்மாக்களை பீடித்திருப்பதும் விடாமல் இன்றுவரை தொடர்வதும் ஜே.ஆர் வழி வந்த வாரிசுகளின் வழியே முடிவின்றி இன்றுவரை தொடரும் தொடர்கதையாக இருப்பதும் கவலை தரும் விடயமே.

1958இல் இருந்து தொடர்ச்சியாகத் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் இலங்கை யில் இடம்பெற்று வருகின்றன. 1958 இல் இருந்து 1978வரை கிட்டத்தட்ட 20வருடங்கள் ஜே.ஆர் மேற்கொண்ட இன அழிப்பு முயற்சியின் வெளிப்பாடாகவே 1978இன் இறுதிப் பகுதியில் தமிழீழத்தில் இன விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகியது. இதையும் யாரும் மறுப்பதற்கில்லை.

அதேபோன்று ஈழத்தமிழர்களின் கல்வி மீது திணிக்கப்பட்ட தரப்படுத்தல் செயல்முறையும் தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டியது. சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரது ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த தரப்படுத்தல் தமிழ் மாணவர்களின் கல்வியை நசுக்கியது. இது அஹிம்சை வழியில் இருந்து விலகி ஆயுதங்களின் பக்கமாக சிந்திக்கத் தூண்டியது. இந்த சுரண்டல்களுக்கு தீர்வு ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் இளைஞர்கள் மத்தியில் எழுந்தது என்பதும் வரலாறு.

இதன் தொடர்ச்சியாக மஹிந்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற மிகப் பெரிய மனிதகுல பலியிட லாக 2009 மே மாதம் இடம் பெற்ற தமிழினப்படுகொலையை யாரும் மறப்பதற்கில்லை. ஏறத்தாழ இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவை அனைத்துமே உலகத்தில் எங்குமே நடந்திராதவை. இவை அநாகரிக அனர்த்தங்கள். 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம் பெற்ற வன்செயல்கள் கறுப்பு ஜூலை என்ற அடைமொழியை சர்வதேச ரீதியாக பெற்றுக் கொடுத்தன.

இலங்கைக்கு உலகளாவிய ரீதியில் அவமானத்தையும், அவமதிப்பையும், அபகீர்த்தியையும் ஏற்படுத்தின. இந்தக் கோரத் தாண்டவத்தை மேற்கொள்ளத் தூண்டுதலாக மறைமுக ஆதரவு நல்கிய சக்திகள் கூட பின்னர் தமது தவறை உணரும் அளவுக்கு கறுப்பு ஜூலை சர்வதேச மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது.

எனினும் தென்னிலங்கை வாழ் மக்களும், அவர்தம் அரசியல் தலைமைகளும் இந்த கறுப்பு ஜூலைக்குப் பின்னரான மிகப் பெரிய இனப் படுகொலையை 2009 ஆம் ஆண்டு நடத்தி முடித்தனர். இவை அனைத்துக்கும் பிராயச்சித்தம் செய்யும் அளவுக்கு தம்மை இன்றும் பக்குவப்படுத்திக் கொள்ளவில்லை. கறுப்பு ஜூலைப் படு கொலைகள் இடம்பெற்று 32 ஆண்டுகள் கடந்த போதும் அதன்பின் 2009இல் இடம்பெற்ற இனப்படு கொலை இடம் பெற்று ஆறு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் தமிழர் விவகாரம், இனப் பிரச்சினை இன்னும் முற்றாகத் தீர்க்கப்பட்டதாக இல்லை.

தமிழர்களும் ஓர் இனத்தவர், மனிதர்கள், அவர்களுக்கும் அடிப்படை உரிமைகள் வாழும் உரிமைகள் உள்ளன. அவர்களுக்கென பிரதேச உரிமை மற்றும் மொழி, கலாசார மத உரிமைகள் உள்ளன. அவற்றை அவர்கள் அனுபவிப்பதை தடுக்கக்கூடாது. தங்கள் தலைவிதியையும் விவகாரங்களையும் தாமே நிர்ணயிக்கவும், கையாளவும் அவர்களும் உரித்துடையவர்கள். அவர்கள் ஆளப்படும் இனமாக அடிமைகளாக அன்றி ஆளும் இனமாக வாழ்ந்து அனுபவிக்க உரித்துடையவர்கள் என்ற இந்த சிறிய விடயத்தை சிங்கள மக்களும், அவர்களின் அரசியல் தலைவர்களும், இடைப்பட்ட அதிகாரிகளும் உணர்ந்து கொள்ள மறுக்கிறார்கள். புரிந்து கொண்டும் புரியாதவர்கள் போல் நடிக்கிறார்கள். தமிழனின் உரிமைகள் என்பது தமது உடலின் பாகங்களைத் தானம் செய்வதாகவும் அவற்றினை இழப்பதாகவும் கருதுகிறார்கள்.

இந்த நிலையை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாதுவிடில் அது உரிமைப் போராட்டத்துக்கு அடி எடுத்து கொடுப்பதாகவும், அதனை வலுப்படுத்துவதாகவும் அமைந்து விடும். சகோதரத்துவ, சகவாழ்வை சகித்துக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். இல்லையேல் இனப்பிரச்சினை இழுபடும் விவகாரமாகவே தொடரும்.

இதுவரை தமிழ் மக்கள் அடைந்த துன்ப துயரங்களை, இழப்புக்களை ஆற்றுப்படுத்தும் வகையில் இனியாவது சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

**“ 1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த இனப் படுகொலை 4 நாள்களுக்கு தொடர்ந்து நீடித்தது. இந்த நீடிப்பின் கோரப்பிடியில் தமிழர்கள் வீதிவீதியாக விரட்டப்பட்டும் வெட்டியும் சுட்டும் உயிருடன் எரித்தும் படுகொலை செய்யப்பட்டனர். பலர் குடும்பம் குடும்பமாக வீடுகளுடன் சேர்த்துக் கொளுத்தப்பட்டனர்.**



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 8 | 2 | 9 | 4 | 7 | 6 |
| 2 | 6 | 7 | 1 | 5 | 4 | 3 | 8 | 9 |
| 9 | 4 | 8 | 3 | 7 | 6 | 5 | 1 | 2 |
| 4 | 7 | 6 | 2 | 3 | 5 | 8 | 9 | 1 |
| 5 | 2 | 3 | 9 | 1 | 8 | 6 | 4 | 7 |
| 8 | 9 | 1 | 6 | 4 | 7 | 2 | 3 | 5 |
| 7 | 8 | 2 | 5 | 9 | 3 | 1 | 6 | 4 |
| 6 | 5 | 4 | 7 | 8 | 1 | 9 | 2 | 3 |
| 3 | 1 | 9 | 4 | 6 | 2 | 7 | 5 | 8 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 | | | | 9 |
| | 4 | 8 | | | | | | |
| | 1 | | | | | | 8 | 3 |
| | 7 | | | 4 | | | 6 | |
| | | | 3 | 5 | | 7 | 1 | |
| | | | 2 | | | 8 | | |
| 3 | | 7 | | 2 | | 5 | | |
| 2 | | | | | | | | |
| 5 | | | 9 | | | | | 6 |

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



**பிரார்த்தனையால் ஆற்றல்கள் விழிப்படைகின்றன**

இயற்கையின் இரகசியத்தை அறியும்போது மனிதன் இயற்கையின் உதவியால் இயற்கைக்கு அப்பாற்பட்ட பரம் பொருளை உணர்வதுடன் சாவையும் வெல்கிறான். இயற்கையைக் கடந்த அந்தப் பொருளின் உதவியால் அவன் எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறான். நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறுவதுடன், குரலும், தோற்றமும் மாறுகின்றன.

அப்போது நீங்கள், மனித குலத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக மாறி விடுவீர்கள். பிரார்த்தனையால் நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன. பக்தியுணர்வுடன் பிரார்த்தனை செய்தால் அனைத்து விருப்பங்களும் நிறைவேறும்.

**சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 700 | 600 | 600 |
| நண்டு | 300 | 500 | 400 | 350 | 250 | 400 |
| கணவாய் | 600 | 600 | 700 | 600 | 700 | 500 |
| பாரை | 600 | 600 | 600 | 500 | 500 | 450 |
| சுறா | 650 | 600 | 600 | 600 | – | – |
| சீலா | 300 | 450 | 500 | 500 | 500 | 300 |
| விளை | 700 | 450 | 400 | 450 | – | 350 |
| அறல் | 300 | 400 | 400 | 400 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 350 | – | – |
| கிழாக்கன் | 650 | 800 | – | 400 | – | – |
| ஓரா | 400 | 400 | 400 | 400 | – | – |
| திரளி | 250 | 250 | 220 | 300 | 200 | 250 |
| நகரை | 200 | 300 | 200 | 350 | 200 | 300 |
| ஆடை | 150 | 200 | 200 | 120 | 150 | 100 |
| ஒட்டி | 250 | 300 | 250 | 300 | 300 | 250 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 350 | 150 |
| பாலை | 350 | 300 | 350 | 450 | 300 | – |
| வாளை | 100 | 200 | – | 350 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | •50 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 280 | – | 250 |

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 40 | 60–80 | 60 | 30 | 35–40 |
| கத்தரி | 80 | 60 | 70 | 60 | 70–80 | 80 | 30 | 25 |
| கரட் | 100 | 140 | 160–200 | 100 | 160–180 | 200 | 200 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 40–50 | 60 | 45 | 45 |
| பயிற்றை | 80 | 60 | 70 | 50 | 80–100 | 80 | 100 | 100 |
| பாகல் | 100 | 140 | 160 | 120 | 100–120 | 200 | 120 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 70–80 | 120 | 220 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 90 | 90 | 100–120 | 100 | 80 | 90 |
| சி.வெங்காயம் | 140 | 120–180 | 180 | 140 | 130–140 | 160 | 100–110 | 110–120 |
| பூசணி | 30 | 30 | 30 | 30 | 25–30 | 50 | 15 –20 | 25 |
| தக்காளி | 150 | 140 | 140 | 120 | 100–120 | 120 | 90 | 100 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 | 40–50 | 40 | 60 | 30–35 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 240 | 280 | 260 | 360 | 400 | 500 | 250 |
| புடோல் | 60 | 40 | 50 | 50 | 60 | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 100 | 80 | 90 | 80 | 80 | 100 | 50 |
| வெண்டி | 80 | 60 | 80 | 50 | 120 | 120 | 120 | 50 |
| போஞ்சி | 120 | 160 | 200 | 180 | 180 | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 100 | 140 | 160 | 100 | 120 | 120 | 120 | 130 |
| தேங்காய் | 50 | 35 | 60 | 40–50 | 40–60 | 40–50 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 90–100 | 90 | 120 | 90–100 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 40 | 60–70 | 60 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30– 40 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 150 | 140 | 120 | 120 | 240–260 | 200 | 220 | 180 |
| இராசவள்ளி | 120 | 140 | – | 160 | 80–120 | 160 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 200 | 120 | 120–140 | 140 | 200 | 120 |

# நாளை

ஆடி–08

வெள்ளிக்கிழமை

24.07.2015

**திதி: அட்டமி**

**மு.இ. 07.47 வரை**

**நட்சத்திரம்: சித்திரை**

**கா.07.28 வரை**

**சுபநேரம்:**

06.02-07.32வரை

**இராகுகாலம்:**

10.32-12.02 வரை


**சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை**

**உடம்புக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பெயர்கள் யாவை?**

**ஏன் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.**


இந்த உடம்பானது நாங்கள் அணியும் ஒரு ஆடை. அதனை எவ்விதம் அணிந்து கொள்வது, முறையாக எவ்வாறு உபயோகித்து நல்ல பலனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிந்திருந்தால்தான் நாம் அதனிடம் இருந்து பெறக்கூடிய உச்ச நன்மைகளை அடையலாம்.

உடம்புக்குக் கொடுக்கப்படும் பெயர்கள் அதன் பலவகைப்பட்ட தொழிற்பாடுகளை விளக்குகின்றன. அத்துடன் நாம் அவற்றின் உச்சப் பயனை அடைய அவற்றை எவ்வாறு பயன் படுத்தலாம் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.



# சாயி சிந்தனை

# நுங்கு சாப்பிடுவதால் நன்மைகள் அதிகம்



கோடை காலத்தில் எம்மைப் பாதுகாக்க இயற்கை அளித்துள்ள ஒரு வரப்பிரசாதம் தான் நுங்கு. பனைவெல்லம், பனங்கற் கண்டு, பனங்கிழங்கு, மட்டை, ஓலை என பனையில் இருந்து கிடைக்கும் அனைத்துப் பொருட்களுமே மருத்துவ குணம் வாய்ந் தவை. நுங்கில் விற்றமின் பி,சி, இரும்புச் சத்து, கல்சியம், துத்தநாகம், சோடியம், மக்னீசியம், பொட்டாசியம், தயாமின், அஸ் கார்பிக் அமிலம் மற்றும் புரதம் போன்ற சத்து கள் அதிகம் காணப்படுகின்றன. நுங்குக்குக் கொழுப்பைக் கட்டுப்படுத்தி, உடல் நிறையைக் குறைக்கும் தன்மை அதிகம். நுங்கு நீர் வயிற்றை நிரப்பிப் பசியையும் தூண்டும். அத னால் சாப்பிடப் பிடிக்காமல் இருப்பவர்களுக்கு நல்ல பசி ஏற்படும். மலச்சிக்கல் மற்றும். வயிற்றுப் போக்கு இரண்டுக்குமே நுங்கு ஒரு சிறந்து மருந்து. சிலருக்கு உடல் உஷ்ணம் காரணமாக எவ்வளவுதான் தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்காது. அவர்கள் நுங்கைச் சாப்பிட்டால் தாகம் அடங்கிவிடும். இரத்தச் சோகை உள்ள வர்கள் நுங்கைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் விரைந்து குணமாகி உடல் சுறுசுறுப்பாகும். நுங்கில் அந்த்யூசைன் எனும் இரசாயனம் இருப்பதால் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்க் கட்டிகள் வருவதைத் தடுக்கும். வெயில் காலத்தில் அம்மை நோய்கள் வருவதைத் தடுத்து உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைத் தரும்.

# ஜூலை மாத ராசி பலன்கள்

## கும்பம்



உங்கள் ஜென்ம ராசிக்கு 4 இல் புதனும் 10 இல் சனியும் உலவுவது சிறப்பாகும். அறிவாற்றல் பளிச்சிடும். நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். வியாபாரத்தில் வளர்ச்சி காணச் சந்தர்ப்பம் கூடிவரும். எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அனுகூலமான போக்குத் தென்படும். உழைப்பு வீண்போகாது. எவ்வளவுக்கெவ்வளவு பாடுபடுவீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு பயன் பெறுவீர்கள். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் திறமைக்குரிய பயன் கிடைத்துவரும்.
இதர கிரகங்கள் அனுகூலமாக உலவாததால் குடும்பத்தில் அமைதி குறையும். பேச்சிலும் செயலிலும் நிதானம் தேவை. உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு அவசியமாகும். வயிறு சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். மக்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டிவரும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகும். விட்டுக் கொடுத்துப் பழகிவருவது நல்லது. பணம் கொடுக்கல் வாங்கலில் விழிப்புத் தேவை. தேவைகளைச் சமாளிக்கக் கடன் வாங்க வேண்டிவரும். பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரும். மனத்தில் ஏதேனும் சலனம் ஏற்படும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். உடல்நலம் சீராகும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.உடன்பிறந்தவர்களால் அனுகூலம் உண்டாகும். பண நடமாட்டம் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள், ஆன்மிகவாதிகள், ஒப்பந்த முறையில் தொழில் புரிபவர்கள், அரசியல்வாதிகள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றமான சூழ்நிலை உதயமாகும். வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.
அவிட்டம், சதயம் நட்சத்திரக்காரர்களுக்கு சுப பலன்கள் கூடும் மாதமிது.

**தொழிலாளர்களுக்கு:**
தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சியில் நற்பலன் உண்டாகும். சிலர் குறைந்த முதலீட்டில் புதிய தொழில் தொடங்குவர்.
பணியாளர்கள் நல்ல வளர்ச்சி காணலாம். பதவி, சம்பள உயர்வுக்கு தடையேதும் இல்லை. சிலருக்கு விரும்பிய இட மாற்றம் கிடைக்கலாம்.

**மாணவர்களுக்கு:**
மாணவர்கள் குரு பலத்தால் சிறப்பாகப் படிப்பர். புதன் சாதகமற்ற இடத்தில்
இருப்பதால் போட்டியில் வெற்றி பெற விடாமுயற்சி தேவை.

**விவசாயிகளுக்கு:**
விவசாயிகளுக்கு வருமானத்துக்குக் குறை இருக்காது. பயறு வகைகள் நெல், கேழ்வரகு, கரும்பு, பனைத்தொழில். பழவகைகள் போன்றவற்றில் நல்ல விளைச்சல் கிடைக்கும்.

**பெண்களுக்கு:**
பெண்கள் சுபவிடயத்தில் ஆர்வமுடன் ஈடுபடுவர். உறவினர் மத்தியில் கௌரவத்துடன் இருப்பர்.

**அதிர்ஷ்ட எண்:** 1, 3, 9
**அதிர்ஷ்ட நிறம்:** மஞ்சள்
**பரிகாரம்:** செவ்வாயன்று முருகன் கோவிலுக்குச் செல்லுங்கள். புதனன்று பெருமாளுக்கு தீபமேற்றி வழிபடுங்கள். பசுவுக்கு அகத்திக்கீரை கொடுங்கள்.



## மீனம்



உங்கள் இராசி அதிபதி குரு 5 இல் சுக்கிரனுடன் கூடி உலவுவது விசேடமாகும். மனத்தில் தெளிவும் தன்னம்பிக்கையும் பிறக்கும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். பண நடமாட்டம் அதிகமாகும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடிவரும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல் இலாபம் தரும். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். தெய்வப்பணிகள் நிறைவேறும். மகன் அல்லது மகளுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப் பெற்றோர் ஆற்றுவதற்கான சந்தர்ப்பம் கூடிவரும். ஆசிரியர்களது நிலை உயரும். உத்தியோகஸ்தர்கள் வளர்ச்சி காண்பார்கள். பொருள் நடமாட்டமுள்ள இனங்களில் தொழில் புரிபவர்கள் ஏற்றம் பெறுவார்கள். குரு உபதேசம் சிலருக்கு இந்த நேரத்தில் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வெளிச்சமான பாதை புலப்படும். மாணவர்களது திறமை வெளிப்படும். பெண்களாலும் மனைவியாலும் சங்கடம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. பொருளாதாரப் பிரச்சினை தலைதூக்கும். மன அமைதி குறையும். எதிரிகள், போட்டியாளர்கள், பொறாமைக்காரர்களால் தொல்லைகள் சூழும். கொடுக்கல்–வாங்கலில் எச்சரிக்கை தேவை. வயிறு சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மனத்தில் ஏதேனும் பயம் குடிகொள்ளும். சுஜாதகப் பலம் இருப்பவர்கள் கவலைப்படத் தேவையில்லை. உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்களுக்கு சுபபலன்கள் கூடும்.

**தொழிலாளர்களக்கு:**
தொழில், வியாபாரத்தில் மாதத் தொடக்கத்தில் அலைச்சல் அதிகரிக்கும். தொழில் ரீதியாக வெளியூர் பயணம் ஏற்படலாம். பொருளாதார வளம் அதிகரிக்கும். எதிர்பாராத வகையில் இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் வேலை விடயமாக வெளியூர் சென்றிருந்தால் வீடு திரும்புவர். சக ஊழியர்கள் ஒத்துழைப்புடன் இருப்பர். எதிர்பாராத நன்மை உண்டாகும்.

**மாணவர்களுக்கு:**
மாணவர்கள் ஓரளவு முன்னேற்றம் காண்பர். பின்தங்கிய நிலை மறையும். ஆசிரியர்களின் ஆலோசனை கிடைக்கும். போட்டியில் வெற்றி காண்பீர்கள்.

**விவசாயிகளுக்கு:**
விவசாயிகள் உழைப்புக்கு ஏற்ற வருமானம் காண்பர். வழக்கு விவகாரத்தில் மெத்தனம் வேண்டாம் பெண்கள் சிறப்பான பலனைக் காணலாம். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர்.

**அதிர்ஷ்ட எண்:** 1, 5
**அதிர்ஷ்ட நிறம்:** பச்சை, வெள்ளை
**பரிகாரம்:** லட்சுமிக்குப் பால் பாயாசம் வைத்து வணங்குங்கள். ஏழைகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். நாக தேவதையை வழிபடுங்கள்.

# ஆண் பெண் நேசம் புனிதமானது

ஆண் பெண் நேசம் புனிதமானது. ஆனால் யார் எம்மீது அன்பு செலுத்துகிறார்கள் என்று புரிந்து கொள்வதில் பலரும் தவறு செய்து விடுகிறார்கள். குறிப்பாக ஒரு ஆண் தன்னை நெருங்கி வந்தாலே, பெண்கள் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்கள். ஒதுங் கிக் கொள்கிறார்கள். ஆண்கள் பெண்களிடம் பேச விரும் புவது மோகத்தால் அல்ல. அது ரகசிய உறவுக்கான அழைப்பும் அல்ல. உண்மையில் பெரும்பாலான ஆண்கள் பெண்களிடம் நல்ல நட்புப் பாராட்டவே விரும்புகிறார்கள். பிரச்னைக்குரிய பெண்களின் பிடியில் இருந்து விலகியிருக்கவும் விரும்புகிறார்கள்!

மேக்கப் இல்லாத இயற்கையழகே பெண்களுக்கு முழு அழகு! பெரும்பாலான ஆண்கள் பெண்களின் மேக்கப் தோற்றத்தை விரும்புவது இல்லை. அவர்களின் இயற்கை அழகையே ஆண்கள் அதிகம் ரசிக்கிறார்கள். அதுபோல அழகில் கர்வம் கொண்டவர்களையும் ஆண்கள் அவ்வளவாகவிரும்புவதில்லை.பெண்கள் ஆடம்பரமான மேக்கப் இல்லாமல் எளிமையான இயற்கை யழகுடன் இருந்தால் நீங்கள் விரும்பும் ஆண் களின் மனதில் இடம் பிடிக்கலாம்.

பெண்கள் தங்கள் மனதுக்குப் பிடித்த ஆண் நண்பர்களுடன் வெளியில் போகும்போது தோழிகள் எவராவது தென்பட்டால் உடனே அளவுக்கு மீறிப் பயந்து வெட்கி தலைகுனிந்து விடக்கூடாது. பல்லைக்காட்டிச் சிரித்துக் கொண்டு வானத்துக்கும் பூமிக்குமாக தலைகால் புரியாமல் துள்ளிக் குதிக்கவும் கூடாது. இவை உங்களை மிகுந்த பயம் கொண்டவராகவும், பக்குவமற்றவராகவும் காட்டிவிடும்.

உங்களுடன் நெருங்கிப் பழகும் ஆண்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்பது பற்றி அறிய அவர்களே மிகுந்த ஆவலுடன் காணப்படுவர்.

நீங்கள் உங்கள் ஆண் நண்பர்களோடு பழகும்போது அவர்களின் புதிய முடியலங்காரம் அழகாகத் தோன்றினால், அழகா இருக்கு என்று உடனே வெளிப் படையாகச் சொல்லுங்கள். அதேமாதிரி அவர்கள் போட்டிருக்கும் உடை அழகாக இல்லை என்றால் நல்லா இல்லை என்று சொல்லி விடலாம். அது உங்களது ஆண் நண்பர் உங்களைப் புரிந்து கொள்ள உதவும்!

உங்கள் தோழிகளுடன் பொது இடத்தில் அமர்ந்திருக்கும்போது மற்றவர்கள் கவனத்தைக் கவரும் வித மாக அளவுக்கு மீறிச் சிரித்துக் கொண்டோ அல்லது குசுகுசுவெனப் பேசிக் கொண்டோ இருந்தால் நீங்கள் இன்னமும் பாடசாலை செல்லும் சிறு பிள்ளையாகத்தான் இருக் கிறீர்கள் என்பதை ஆண்களுக்கு வெளிப்படுத்தி விடும். மேலும் நீங்கள் உறுதியற்ற மனநிலை கொண்டவர் என்பதையும் வெட்ட வெளிச்சமாக்கி விடும். இந்த மாதிரியான பெண்களை ஒருபோதும் ஆண்கள் விரும்புவதில்லை.




உங்களிடம் இருக்கும் நல்ல குணங்களை மட்டுமே ஆண்கள் அதிகம் விரும்புவார்கள் என்பதை மனதில் கொள்ளுங்கள். உங்கள் புற அழகில் ஈர்ப்பு ஏற்பட்டாலும் அது அவர்களை விரும்ப வைக்காது. ஆண்கள் மத்தியில் ஒரு அதிர்ச்சியூட்டும் பெண்ணாகத் தோன்றாமல் அடக்கமும், அமைதியும் நிறைந்த பெண்ணாகப் பவனி வருவதைத்தான் அதிகமான ஆண்கள் விரும்புவார்கள்.

காதல் உணர்வுடன் உங்களுடன் ஒருவர் பழகினால், இழுத்தடிக்காமல் அவரைப் பிடிக்கிறதா? இல்லையா? என்பதை உடனே நேரடியாகச் சொல்லி விடுங்கள். நீங்கள் ஒருவரை விரும்பிக் கொண்டே பிடிக்காதது போல் பல நாள்கள் பாசாங்கு செய்தால், அவர் உங்களை விட்டு விட்டு வேறு பெண்ணை விரும்பிப் போகும்நிலை ஏற்படும். பின்னர் நீங்கள் கவலைப்பட்டுப் பயன் இல்லை.











# திருகோணமலை

இலங்கையின் கிழக்குப் பகுதியிலுள்ள முக்கிய நகரங்களில் திருகோணமலை அல்லது திரிகோணமலை ஒன்றாகும். இதே பெயரே இந்த நகரம் அமைந்துள்ள மாவட்டத்துக்கும் வழங்கிவருகின்றது. இலங்கையின் கீழ்க் கரையில் அதாவது கிழக்கு மாகாணத்தில் இது அமைந்துள்ளது. இதன் எல்லைகளாக அனுராதபுரம், பொலநறுவை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ளன. தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இன மக்களும் இந்த நகரத்தில் வாழ்கின்றபோதிலும் நகரத்தில் தமிழர்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இங்குள்ள இயற்கைத் துறைமுகம் காரணமாக இந்த நகரம் இலங்கைக்கு வெளியிலும் அறியப்பட்ட ஒன்றாகும். இங்கு அமைந்துள்ள தொன்மையான சிவன் கோயிலான திருக்கோணேஸ்வரம் கோயிலும், இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள இந்து மக்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்ட ஒன்றாகும். இது கி.பி ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பாடல் பெற்ற தலமாகும்.


இது பண்டைய காலம் முதலே பிரபலமான துறைமுகமாக இருந்துள்ளது. ஒல்லாந்தர், ஆங்கிலேயர்,போர்த்துக்கேயர், பிரெஞ்சுக் காரர் போன்றோரின் ஆட்சிக்குட்பட்டு இருந்தது. பிரட்ரிக் கோட்டையை மேற்கத்தைய ஆதிக்கத்தின் எச்சமாக இன்றும் நகரில் காணக்கூடியதாக உள்ளது. இந்தக் கோட்டை யினுள்ளேயே புகழ் பூத்த திருக்கோணேச்சர ஆலயம் அமைந்துள்ளது.

# படிக்காத மேதை



ஒருநாள் படித்த ஒருவரும், படிக்காத ஒருவரும் அருகருகே அமர்ந்து ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் இருவருக்கும் இடையே ஒரு பந்தயம். பொது அறிவு யாருக்கு அதிகம்? படித்தவருக்கா? இல்லை, படிக்காதவருக்கா? என்பதே அந்தப் பந்தயம். அதில் தோற்றவர் அடுத்தவருக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் பொருந்திக் கொண்டனர். எனக்குப் படிப்பறிவில்லை. நீங்கள் படித்தவர்கள், ஆதலால் நீங்கள் ஒரு கேள்வி கேட்டு அதில் நான் தோற்று விட்டால் உங்களுக்கு நான் இருநூறு ரூபாய் தருகிறேன், அதேசமயம் நான் ஒரு கேள்வி கேட்டு அதில் நீங்கள் தோற்றுவிட்டால் எனக்கு நானூறு ரூபாய் தரவேண்டும், சரியா? என்று கேட்டார் படிக்காதவர். சரி என்று சொல்லி, முதலில் நீங்களே கேள்வி கேளுங்கள் என்றார் படித்தவர். ஒரு விலங்குக்கு ஆறுகால்கள், இரண்டு வால்கள், ஒரு கொம்பு. அது என்ன விலங்கு? என்று கேட்டார் படிக்காதவர். நீண்ட நேரம் ஆராய்ந்தார் படித்தவர். பதில் கிடைக்க வில்லை. எனவே தனது தோல்வியை ஒப்புக் கொண்டு, பந்தயப்படி, நானூறு ரூபாவை எடுத்து நீட்டினார். பந்தயப்படி பணத்தைப் பெற்றுக் கொண்டார் படிக்காதவர். அது சரி, அந்த விலங்கின் பெயர் என்ன? என்று கேட்டார் படித்தவர். இந்தாருங்கள் இருநூறு ரூபாய் என்று பந்தயப் பணத்தை நீட்டி, எனக்கும் அந்த விலங்கின் பெயர் தெரியாது என்று சொன்னார் அறிவுஜீவியான அந்தப் படிக்காதவர்.




# ஒன்றை இழக்காமல் எம்மால் மற்றொன்றை அடைய முடியாது


ஒன்றை இழக்காமல், எம்மால் மற்றொன்றை அடைய முடியாது என்பர். இது தெரிந்திருந்தும், கையில் உள்ளதை இழக்க விரும்பாமலும், அதேசமயம் எதிர்பார்ப்பை விட முடியாமலும், மனித மனம் அல்லாடுகிறது. ஆனால், யாருக்கு எதை, எப்போது தர வேண்டும் என்பது கடவுளுக்குத் தெரியும். வயது முதிர்ந்த ஒருவர், வாத நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். அது, குணமாவதற்காக ஆலயம் சென்று, 48 நாள்கள் விரதமிருப்பதாக வேண்டி, பக்தியோடு இறைவனை வழிபட்டு வந்தார். தினமும் மூன்று வேளை குளத்தில் குளிப்பதும், இறைவனைத் தரிசனம் செய்வது மாக இருந்தார். அவ்வாறு அவர் குளத்தில் குளிக்கும்போது, தனது சேமிப்புப் பணமான, 2 ஆயிரம் ரூபாவை ஒரு துணியில் மூட்டையாகக் கட்டி, கரையில் வைத்து விட்டுக் குளிப்பார். அவர், எட்டு வயது சிறுவனொருவனைத் தனது உதவிக் காக வைத்திருந்தார். அவன், அந்தப் பெரிய வரை அழைத்துச் சென்று குளிக்க வைத்து, இறை தரிசனமும் செய்ய வைப்பான். அதற்காக, அவனுக்குச் சம்பளமும் உண்டு. அந்தப் பையனும், தனது கடமைகளை ஒழுங்காகச் செய்து வந்தான்.

கடைசி நாளான, 48 ஆவது நாள், தனது பண மூட்டையைக் கரையில் வைத்து, சிறுவனைக் காவலுக்கு இருக்கச் செய்து, குளத்தில் மூழ்கினார் பெரியவர். அவர் மனதில் ஏமாற்ற உணர்ச்சி ஏற்பட்டு, என்ன இறைவா இது... விர தம் இருந்து வழிபாடு செய்றேன்;துளி கூட முன்னேற்றம் இல்லையே? சரியாக நடக்க கூட முடியவில்லையே? என்று வெறுப்போடு மூழ்கி எழுந்தார். அதே நேரம், கரையில் பண மூட்டைக்குக் காவலாக இருந்த சிறுவன், பண மூட்டையை தூக்கியபடி ஓடத் தொடங்கினான். டேய்...திருடன்திரு டன்... என்றுகத்தியவாறு, அவனைத் துரத்தினார் முதியவர். சிறுவன் ஓட, பின்னாலேயே முதியவர் ஓட, இருவருமாக மூன்று முறை கோவிலை வலம் வந்தனர். அதன் பின்னர், கோவிலுக்குள் நுழைந்து, மறைந்த சிறுவன், அங்கே ஒரு சிலையாகத்



தரிசனம் தந்தான்.

திகைத்துப் போன முதியவர், கடவுளே... என்ன நியாயம் இது... ? எனது வாதநோயையும்குணமாக்கவில்லை பணத்தையும் கொள்ளையடிச் சுட்டீங்களே.. என்றுகண்ணீர் விட்டார். உடனே, பக்தா... உனது நோயைத் தீர்க்கவில்லை என்றால், நீ, எப்படி இவ்வளவு தூரம் என்னைத் துரத்தி ஓடி வந்திருக்க முடியும்...? என்றான் சிலை வடிவில் இருந்த இறைவன். முதியவருக்கு அப்போது தான் உண்மை புரிந்தது. தனது வாத நோய் குணமாகி, கால்கள் நன்றாக இருப்பதை உணர்ந்தார். ஆனாலும், தனது; பண மூட்டை போனது வருத்தத்தை கொடுத்ததால், இறைவனே... எனது கால்கள் குண மாகி விட்டன



ஆனால், எனது பணம் போய் விட்டதே... என்றார். நீ ரோகம் போய், ஆரோக்கியம் வேண்டுமென்று கேட்டாய்; ஆரோக்கியம் அடைய வைத்தேன். உன்னைப் போலவே, ஓர் ஏழை, தனது மகள் திருமணத்துக்குப் பணம் வேண்டு மென்று, என்னை வேண்டிக் காத்திருந்தான். உனது பணத்தை, அவனிடம் கொடுத்தேன்... என்றார் இறைவன். உண்மையை உணர்ந்து கொண்டார் முதியவர்.

# அரசிலிருந்து கூண்டோடு வெளியேற தயாராகின்றனர் சு.க. அமைச்சர்கள்

## அனுமதியளிக்குமாறு ஜனாதிபதியிடமும் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய அரசிலிருந்து கூண்டோடு வெளியேறுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் தயாராகிவருகின்றனர். இதற்காக ஜனாதிபதியிடம் அனுமதிபெறவும் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தைக்கூட்டி அமைச்சுப் பதவிகளை துறப்பதற்கு ஒப்புதல் பெற்றுத்தருமாறு அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கான யோசனை நேற்று மாலை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது என திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

தேசிய அரசிலிருந்து வெளியேறுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தயாராகவே இருக்கின்றனர் என்று அமைச்சர்களான மஹிந்த அமரவீர, ரெஜினோல்ட் குரே ஆகியோர் பகிரங்கமாக அறிவித்தனர்.

உறுப்பினர்கள் தனித்தனியாக வெளியேறுவதைவிட மத்திய குழுவின் அனுமதியைப்பெற்று ஒரேயடியாக வெளியேறுவதே பொருத்தமாக இருக்கும். மத்திய செயற்குழுவின் அனுமதிக்கமையவே அமைச்சுப்பதவிகள் பெறப்பட்டன என்று மஹிந்த அமரவீர கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி பீடமேறியது.அதன்பின்னர்,சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலரும் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த தேசிய அரசை அமைத்தனர்.

இதில் சில உறுப்பினர்கள் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னரே ஐக்கிய தேசியக் கட்சிமீது அதிருப்தி கொண்டு தேசிய அரசிலிருந்து வெளியேறினர். இதனால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு சுதந்திரக் கட்சியின் மேலும் சில உறுப்பினர்களை ஜனாதிபதி நியமித்தார். அமைச்சுகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து தேசிய அரசில் இருந்து சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் படிப்படியாக வெளியேறி வருகின்றனர். மஹிந்த ஆதரவு அணியின் அழுத்தம் காரணமாகவே இவர்கள் தேசிய அரசிலிருந்து வெளியேறுகின்றனர் எனக் கூறப்பட்டாலும், மைத்திரியின் உரைமீது கொண்ட அதிருப்தியாலேயே தாம் வெளியேறுகிறார்கள் என அவர்கள் விளக்கம் கூறுகின்றனர்.

இந்நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதும் தேசிய அரசிலிருந்து வெளியேறுவது குறித்து கருத்துகள் வெளியிடப்பட்டன.

மத்திய செயற்குழுவின் கோரிக்கையின் பிரகாரமே அமைச்சுப் பதவிகளை ஏற்றோம். பதவிகளை துறப்பதாக இருந்தால் அதே மத்திய குழுவின் அனுமதியுடன் அனைவரும் ஓரேடியாகச் செய்யவேண்டும். மாறாக, தனித்தனியாக பிரிந்து செல்வது ஏற்புடையதல்ல. எனவே, மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டி அமைச்சுப் பதவிகளைத் துறப்பதற்குரிய ஒப்புதலைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதியிடம்நாம்கோரிக்கை விடுக்கவுள்ளோம் என்று மஹிந்த அமரவீர கூறினார்.

இன்று மாலை ( நேற்று மாலை) இந்தக் கோரிக்கை ஜனாதிபதியிடம் விடுக்கப்படும் என்று திலங்க சுமதிபால இதன்போது குறிப்பிட்டார். அத்துடன், அமைச்சுப் பதவியைத் துறப்பதற்குத் தான் தயாராகவே இருக்கிறார் என அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, பௌசி, ரெஜினோல்ட் குரே, மஹிந்த அமரவீர, ராஜித்த சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க, துமிந்த திஸாநாயக்க, எம்.கே.டி.எஸ்.குணவர்தன, ஜனக்க பண்டார தென்னகோன், சாந்தபண்டார உட்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 25இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தேசிய அரசில் அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுபவர்களுக்கு சுதந்திரக் கட்சி உறுப்புரிமையை இரத்துசெய்துள்ளமை குறிப்பிடத்தகக்து. (த-சி)

# கிளிநொச்சியில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சி மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு சான்றிதழ் பதிவு செய்யும் நடமாடும் சேவை நாளை முதல் இடம்பெறவுள்ளது.


நாளை வெள்ளிக்கிழமை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மூன்று தினங்கள் இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட நான்கு பிரதேச சபைகளிற்கும் உள்ளவர்கள் இதன் மூலம் பயனடையலாம் என கிளிநொச்சி மாவட்ட உதவி அரச அதிபர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் உள்ளிட்ட பல திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேச சபை அதிகாரிகள் இந்த நடமாடும் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர். (21)

## மரண அறிவித்தல்

### கந்தையா தம்பிராசா



புங்குடுதீவு ஊரதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா 22.07.2015 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் பாசமிகு கணவரும் மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான தங்கம்மா, பரமேஸ்வரி, தர்மலிங்கம் மற்றும் சரோஜாதேவி, அன்னலட்சுமி, லீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜீவகாந்தன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு பெரியப்பாவும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சோமசுந்தரம் மற்றும் சிவசுப்பிரமணியம், இராசதுரை, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சேனாதிராஜா, ஜெயலட்சுமி (பிரான்ஸ்) மற்றும் மகேஸ்வரி, கனகம்மா, சிவலிங்கம், பூமிபாலகன் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2015) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேரதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரதீவு 7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல் - குடும்பத்தினர்.
077 802 5525

# அலரிமாளிகையில் அரசியல் நடவடிக்கைகள் ஏதுமில்லை

## தேர்தல்கள் ஆணையாளருக்கு பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

அலரி மாளிகை மற்றும் பிரதமர் காரியாலயம் என்பனவற்றை நான் அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தமாட்டேன் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர், தேர்தல்கள் ஆணையாளருக்கு இது தொடர்பில் தொலைபேசியூடாகத் தெரிவித்துள்ளார்.

அரசியல் மேடைகளில் சிலர் முன் வைக்கும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் பிரதமர் தேர்தல்கள் ஆணையாளருக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

அலரி மாளிகை மற்றும் பிரதமர் காரியாலயங்களை அரசியல் நடவ டிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதாகச் சந்தேகம் தோன்றினால் எந்த நேரத்திலும் சோதனை செய்ய முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளருக்குப் பிரதமர் தெரிவித்துள்ளார் என்று பிரதமர்காரியாலயப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், தேவையெனில் தேர்தல்கள் செயலகக் காரியாலய அதிகாரிகள் அலரிமாளிகை மற்றும் பிரதமர் காரியாலயத்தை முழுமையாகச் சோதனை செய்ய முடியும் எனவும் பிரதமர் கூறியுள்ளார் என்று பேச்சாளர் குறிப்பிட்டார். (த)

## காணவில்லை




கல்வியங்காட்டைச்சேர்ந்த 75 வயதான **க.இராசரத்தினம்(பொன்னண்ணை)** என்பவர் 22.07.2015 புதன்கிழமை மதியம் தொடக்கம் காணவில்லை. சாரமும் நீலநிறக் கோடன் சேட் அணிதிருந்தார்.

இவர் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 861 0280**
**077 223 3428**

(63294)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



### சபாரத்தினம் நாகதீபசோதிரூபன்

தோற்றம்
23.07.1957

மறைவு
24.06.2015

அன்பின் திரு உருவே
அணையாத ஒளிவிளக்கே
இல்லறத்தின் இனிய நாயகனே
இன்பமுடன் எமைக்காத்தவரே
பொங்குமனம் விம்மியழ
பொன்மக்கள் மனைவி கதறியழ

எங்கு சென்றாய் அப்பா
எமையெல்லாம் தவிக்கவிட்டு
ஐ பத்து எட்டினில் பிறந்தநாள்
ஈ பத்து முன் வியாழன் அப்பாவே
ஈ பத்து நாளில் அந்தியேட்டி
விதியாகவோ அப்பாவே! அப்பாவே!

24.06.2015 இல் இறைவனடி சேர்ந்த சபாரத்தினம் நாகதீபசோதிரூபன்(கிராமசேவையாளர் கரணவாய் வடக்கு) அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு 24.07.2015 வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று மதியம் வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வதிரிச்சந்தியடி,
வதிரி,
கரவெட்டி

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி




தோற்றம்
18.02.1943

மறைவு
23.07.2011

### யோ.அ.அமலதாஸ்

சாந்தகுணமுள்ளவர்கள்
புசித்துத்திருப்தியடைபவர்கள்,
கர்த்தரை தேடுகிறவர்கள் அவரைத்
துதிப்பவர்கள் உங்கள் இருதயம்
என்றென்றைக்கும் வாழும்




அன்போடு அரவணைத்து
ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன்
வாழ வைத்த அப்பாவே!

எந்நாளும் எம்மோடு இருந்த நீங்கள்
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் என்றும் வாழ்வீர்
அப்பா!

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(63293)(10.6)

## கண்ணீர்க் காணிக்கை



வைத்தியகலாநிதி
**பேரம்பலம் பத்மநாதன்**


யாழ். போதனா வைத்திய சாலையில் வேலைத்தள பொறுப்பு உத்தியோகத்தராக எம்முடன் பணிபுரியும் **ப. குமரகுருபரன்** அவர்களின் அன்புத் தந்தையின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அபிவிருத்தி உதவியாளர்கள்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(63288) (10.6)

## மரண அறிவித்தல்

ஆயுர் வேத வைத்திய கலாநிதி
**பேரம்பலம் பத்மநாதன்**
ஏழாலை மேற்கு
கருணாகரப்பிள்ளையார் மடாலய அறங்காவலர் , உரிமையாளர் - ஐ.பேரம்பலம் அன்சன், சுன்னாகம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன் 21.07.2015 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்த வைத்தியர் ஐ.பேரம்பலம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருஞான செல்வம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நளினியின் பாசமிகு கணவரும் குமரகுருபரன் (அபிவிருத்தி உதவியாளர்- போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கோகுலரமணன் (பிரான்ஸ்), செல்வ பாரதி (கனடா), பவதாரணி (ஆயுர்வேத வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் பிரதீபா, மதிவண்ணன் (கனடா), பிரசன்னா (கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மஹஸ்மிதை, அஜாத்மிகன், அப்ஷரன், சாமிகிருத்திகா, ஆதிஸ், பிரீத்திகை ஆகியோரின் அன்பு மிகு பேரனாரும் காலஞ் சென்றவர்களான பேராசிரியர் கனகசபாபதி, சிவலிங்கம் மற்றும் வாமதேவன், பாலசுப்பிரமணியம், மகாதேவன், புனிதவதி, ராஜராஜேஸ்வரி, சாரதாதேவி, காலஞ்சென்ற மாலினி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற வர்களான மீனாம்பிகை பார்வதவர்தினி, சிவக்கொழுந்து மற்றும் பத்மாசனி, காலஞ்சென்றவர்களான சீனா, முருகவேள், தெய்வேந்திரன், மற்றும் இளமுருகதாஸ் சுபீந்திரதாஸ் ஆனந்த நடேசன் ஆகியோரின் மைத்துனரும் பாஸ்கரனின் உடன் பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2015) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.


தகவல் -
குடும்பத்தினர்.

(63268)(3,7,11)

## மரண அறிவித்தல்

**திருமதி தங்கமுத்து தில்லையம்பலம்**

பிறப்பு 1921 . 10 . 13



இறப்பு 2015 . 07 . 20

மானிப்பாய் மெமோறியல் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து தில்லையம்பலம்20.07.2015 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புச் சகோதரியும் இராமேஸ்வரம் (C.T.B சாரதி), நன்னித்தம்பி, இராசலிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினம்மா, ரூபா, பிறேமா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் ஆசையம்மாவும் சூரியகலாவின் (சுவிஸ்) பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2015) வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மெமோறியல் வீதி,
மானிப்பாய்.

தகவல்:
இராமேஸ்வரம் குடும்பம்.
077 526 2821
021 321 6719

## மரண அறிவித்தல்

**திருமதி கமலாவதி நாகராஜா**
(மாப்பாணவூரி - காரைநகர் - கொழும்பு)



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 14.12.1931 | 19.07.2015 |

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மாப்பாணவூரி, காரைநகரை வதிவிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கமலாவதி நாகராஜா 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற நேசம்மா மற்றும் லீலாவதி, Dr.குணரட்ணம், சிவபாக்கியம், சிவராணி ஆகியோரின் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (இலங்கைவங்கி), பாலகிருஷ்ணன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் மனோஹரி, சாந்தினி, காலஞ்சென்ற சிவபாலன் (இலங்கை வங்கி) ஆகியோரின் மாமியாரும் கபிலன், கஜனன், அகிலா, சரவணன் காலஞ்சென்ற சுமந்திரன், துவாரகா, ஜனகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.07.2015) வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியிலிருந்து இறுதிக்கிரியைகள் இடம் பெற்று பிற்பகல் ஒரு மணியளவில் கல்கிசை பொது மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
சறோ சிவபாலன் (மகள், இலங்கை)
01194 112 731206
பாலசுப்பிரமணியம் (மகன், கனடா)
905 479 9852 416 509 8538
பாலகிருஷ்ணன் (மகன், ஜேர்மனி)
01149 911 464278

தகவல்:
குடும்பத்தினர்.
(யாழ்ப்பாணத்திலிருந்து S.தனபாலசிங்கம்)

## மரண அறிவித்தல்

**நல்லதம்பி மகேஸ்வரன்**



ஏழாலையைப்பிறப்பிடமாகவும் அரச வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மகேஸ்வரன் 22.07.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நல்லதம்பி - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும் நல்லூரைச்சேர்ந்த ஜெகதாம்பிகையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சின்னலாந்தேசு மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுதீசன், நிருஷன் (அவுஸ்திரேலியா), துருசன், தர்ஷன்(பிரான்ஸ்), சுதாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகநாதன், பத்மநாதன், செல்வநாதன் காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் விமலநாதன், விசுவநாதன், சுதந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23/3 அரசவீதி,
நல்லூர்.

(63287)

தகவல் :-
குடும்பத்தினர்.
077 559 0175

## மரண அறிவித்தல்

**இந்திராணி இராசரத்தினம்**
(இணுவில் கிழக்கு)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி இராசரத்தினம் நேற்று (22.07.2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - மனோன்மணி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் விஜிதரன்(லண்டன்),வசந்தரூபன்(லண்டன்), ஞானச்செல்வன் (இணுவில்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சத்திய பாமா, லோகேந்திரன், சிவலோகநாதன், வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஜிதா, சுஜாதா, விதாசுகி ஆகியோரின் மாமியாரும் கஜானன், கபீஷன், கரீஷன், சங்கீத்தனா, சங்கீத்தனன், சஞ்சீர்த், ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.
021 321 3412
செல்வா

# வெள்ளை வானுக்கும் புலிகளுக்கும் முடிச்சுப் போட்டு அரசியல் பிரசாரம்

கொழும்பு, ஜுலை 23

மிரிஹான வெள்ளைவான் சம்பவத்துடன் புலிகளை தொடர்புபடுத்தி அரசியல் இலாபம் தேடுவதற்குரிய முயற்சியில் பிரதான இரு அரசியல் கட்சிகள் இறங்கியுள்ளன என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மிரிஹான பகுதியில் வெள்ளைவானில் துப்பாக்கியுடன் சிவிலுடையில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மூவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட விவகாரம் தென்னிலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இது தேர்தல் காலம் என்பதால் அந்த பரபரப்பை தணியவிடாது இந்த விடயத்தை அரசியல் கட்சிகள் பூதாகரமாக்கி வருகின்றன. குறிப்பாக இது புலிகளுடைய வாகனம் எனவும், மஹிந்த ராஜபக்ஷவை கொலை செய்வதற்கே இவ்வாறு திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ் சாட்டியுள்ளார்.

புலிகளை அழித்த மஹிந்தவை கொல்வதற்கு புலி ஆதரவாளர்கள் முயற்சிக்கின்றனர் எனவும், அதற்கு அரசும் ஒத்துழைப்பு வழங்குகின்றது என்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்கிச் சிங்கள் மக்களிடம் வாக்குவேட்டை நடத்துவதற்காகவே விமல் வீரவன்ஸ உள்ளிட்ட சிலர் இப்படி கதை கூறி வருகின்றனர் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா,

மிரிஹானை பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்ட வெள்ளை வான் புலிகளால் பயன்படுத்தப்பட்டு,பின்னர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது என்றும் கோத்தபாய பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலகட்டத்தில் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வான்களில் ஒன்றே இவ்வாறு மிரிஹானையில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, மேற்படி சம்பவம் எதிரணியால் திட்டமிடப்பட்டதொன்று எனவும், தமக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை எனவும் குறிப்பிட்டு அரசியல் இலாபம் தேடுவதற்குதான் இவரும் முயற்சிக்கிறாரே ஒழிய உண்மை என்ன வென்பதைக் கூறவில்லை எனவும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும், கைப்பற்றப்பட்ட வெள்ளைவே[illegible] புலிகள் உடையதா அல்லது இராணுவத்தின் உடையதா என்பது விசாரணைகளின்பின்பே தெரியவரும் என இராணுவம் குறிப்பிட்டுள்ளது.
(த)

# வீரகத்தி விநாயகர் சங்காபிஷேகம்

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு சகஸ்ரநாம சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 7 ஆம் திகதிய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் நடைபெற்ற மண்டலாபிஷேகப் பூர்த்தியையொட்டி நடைபெறும் சங்காபிஷேகத்தையடுத்து மாலையில் அன்[illegible] ஊஞ்சலும், தண்டிகை உற்சவ[illegible]மும் நடைபெறும்.

ஆலயங்களில் பஜனைப் பணியை மேற்கொண்டு வருபவரான திருமதி நாகம்மா பாலசிங்கம், அன்றையதினம் கலாமன்ற சன சமூ நிலையத்தினரால் " பஜனைப் பேரரசி" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மஹிந்த பிரதமராகும் சாத்தியமே இல்லை

### பிரபல ஜோதிடர் சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 23

முன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமராகக்கூடிய சாத்தியம் கிடையாது என பிரபல ஜோதிட நிபுணர் இந்திக்க தொட்டவத்த தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் இடம் பெற்ற போது பெரும்பாலான ஜோதிடர்கள் மஹிந்த தேர்தலில் அமோக வெற்றியீட்டுவார் எனக் கூறிய போதிலும், இந்திக்க தொட்டவத்த மஹிந்த தோல்வியடைவார் என எதிர்வு கூறியிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ பெரிய தேர்தல் தோல்வியைச் சந்திக்கவுள்ளார் என்று அவர் அப்போது எதிர்வு கூறியிருந்தார்.

இவ்வாறு எதிர்வு கூறியதைத் தொடர்ந்து அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவினர் தம்மைச் சந்தித்தனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அவர்கள் தம்மை அச்சுறுத்தவில்லை எனவும், மஹிந்தவை வெற்றிபெறச்செய்ய என்ன செய்ய வேண்டும் என கோத்தபாய ராஜபக்ஷ தம்மிடம் ஆலோசனை கோரினார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி மாதம் 8ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் வெற்றி இயற்கை ஆசீர்வாதம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு மிகவும் பாதகமானது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கிரக நிலைகளின் பிரகாரம் மஹிந்த வுக்குத் தோல்விக்கான சாத்தியங் களே அதிகம் என்று குறிப் பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டினாலும் பிரதமராகத் தெரிவாகக் கூடிய சாத்தியங்கள் கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கிரக நிலையில் பாதகத்தன்மை எதுவும்கிடையாது என்றும் பிரபலஜோதிட நிபுணர் இந்திக்க தொட்டவத்த மேலும் தெரிவித்துள்ளார். (த)

# ஆஸி. அனுப்புவதாக ஏமாற்றிய சந்தேகநபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஆஸ்திரேலியா நாட்டுக்கு அனுப்புவதாக கூறி பத்திரிகைகளில் கவர்ச்சிகரமான விளம்பரங்களை வெளியிட்டு பலரிடம் பல இலட்சம் ரூபா பணத்தை பெற்று வெளிநாட்டுக்கு அனுப்பாமல் ஏமாற்றினார் என்ற குற்றச்சாட்டில் விசா ஆலோசனை நிலையம் ஒன்றின் உரிமையாளர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், சிவகுருநாதர் வீதிப் பகுதியில் இயங்கிவந்த விசா ஆலோசனை நிலையமொன்றின் உரிமையாளரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

குறித்த விசா ஆலோசனை நிறுவனத்தின் உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாண விசேட குற்ற விசாரணைப் பிரிவில் பலரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தம்மை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பணம் பெறப்பட்டு ஏமாற்றப்பட்டதாக அவர்கள் முறையிட்டுள்ளனர்.

இதனடிப்படையில் குறித்த உரிமையாளருக்கு எதிராக பொலிஸாரால் நீதிவான் நீதிமன்றில் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது. எனினும் அந்த வழக்குகளில் தான் கைது செய்யப்படுவதை தவிர்ப்பதற்காக குறித்த உரிமையாளர் முன்பிணை பெற்றிருந்தார்.

அண்மையில் அவருக்கெதிராக தொடரப்பட்ட பிறிதொரு வழக்கொன்றில் அவரை முற்படுத்துமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு பணித்திருந்தது. எனினும் பொலிஸார் அவரை முற்படுத்தாததால் நீதிமன்றம் அவருக்கு பிடியாணை பிறப்பித்திருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை விசா ஆலோசனை நிறுவனத்தின் உரிமையாளர் தனது சட்டத்தரணி மூலமாக நீதிமன்றில் சரணடைய முயற்சித்தவேளை அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். நேற்று இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபரின் விளக்கமறியலை நீடித்து நீதிவான் உத்தரவிட்டார்.(ற-103)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு விற்பனைக்கு**

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு. (BOC இற்கு முன்பாக) தொடர்பு: 021 222 6115 (63296) (10.6)

**காணி விற்பனைக்கு**

அல்லைப்பிட்டி கடற்கரை வீதியில் பிரபல்யமான ஹொட்டேல் அருகில் உள்ள 43 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 6115 (63295) (10.6)

**விற்பனைக்கு**

எம்மிடம் YP4190 Four சோக் ஆட்டோ விற்பனைக்கு உள்ளது.தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: 077 984 8849

**தவறிவிட்டது**

தி.சூரியகுமாரன் அவர்களின் 752013705V இலக்க தே.அ.அட்டை யாழ் நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் 0770430078 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் உண்டு.

**பெயர்மாற்றம்**

வண்ணாங்கேணி வடக்கு, தம்பகாமம் பளை என்னும் முகவரியில் வசிக்கும் நான் நவரத்தினம் குஜீ என்னும் பெயரை இன்றி லிருந்து நவரத்தினம் ரதன் என மாற்றிக்கொள்கிறேன். என்பதை அறியத்தருகின்றேன்.
ரதன்

**விற்பனைக்கு**

எம்மிடம் 1000 கிளுவங் கதியால் விற்பனைக்கு உண்டு. நியாய விலையில் விற்கப்படும் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி நவரட்ணராஜா வீதி, கோண்டாவில் மேற்கு.
தொடர்பு:077 9848849
க. பரிசிலிங்கம், க.பாபு

**தவறிவிட்டது**

இல.11, ராணி வீதி, நல்லூரைச் சேர்ந்த ப.நுகனேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (752063362 V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம், அலுவலக அடையாள அட்டை என்பன அடங்கிய பேஸ் கடந்த 20.07.2015 செம்மணி வீதியிலோ, ராணி வீதியிலோ தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (63290) (10.6)
தொடர்பு: 0770890464

**மகப்பேறு இனவிருத்தி நிலையம்**

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ, கருச்சிதைவு, மாதவிடாய் உட்பட சகலவிதமான பிரச்சினைக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும், IVF, ICSI யும் கொடை முட்டை (donaor egg) விந்து நன்கொடை (donaor sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK), 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்தியசாலையில் அளித்து வருகின்றார்.
தொடர்புகளுக்கு: திருமதி கௌரி 0773439988
021 2219988, 0212219977, 02122263
(C/18122) (10.6)

**J.D.C.S.I**
**CENTRE FOR HOLISTIC HEALING**

**DIPLOMA IN COUNSELLING**

Applications are invited for the fourth batch of students for Diploma in Counselling conducted by the Centre for Holistic Healing (GHH) of the Jaffna Diocese of the Church of South India.

Those involved in social work, medical field and community developments as well as the ones requiring additional study, training and exposure in the field of counselling are welcome to apply to the Director, Centre for Holistic Healing, Church of South India, Vaddukoddai before 10th of August, 2015.

Interviews are scheduled for 15th of August 2015 at 9am in Centre for Holistic Healing, Mc. Leod Hospital, Inuvil.

**Centre for Holistic Healing –Office**
**Mc. Leod Hospital Premesis**
**Inuvil**

Dr (Mrs) Thayalini Thiagarajah
Director
Fax: +94-(0) 112582015
Mob: +94-(0) 777370494
E-mail: thayathiagarajah@gmail.com
Website: www.holistichealingjdcsi.org

**பாராளுமன்றத் தேர்தல் – 2015**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



5

"உதய நாயகன்"

**ஈ.சரவணபவன்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
குழுமத் தலைவர் - உதயன் பத்திரிகை

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
ඉලංගයි තමිළ් අරසු කච්චි
Ilankai Tamil Arasu Kadchi

1 2 3 4 5 6 7 8 9 10

போடுங்கள் புள்ளடி வீட்டுக்கு நேரே அடுத்த புள்ளடி 5 க்கு மேலே

உ

**பாராட்டும் பட்டமளிப்பும்**



திருநெல்வேலி
கலாமன்ற சனசமூக நிலையம்
திருமதி நாகம்மா பாலசிங்கம்
அவர்களுக்கு அவரது ஐம்பதாண்டுகளுக்கு மேலான பஜனைப் பணியைப் பாராட்டிப் பட்டம் வழங்கி கௌரவித்தல் நிகழ்வு

இடம் பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய முன்றில்.
காலம் 24.07.2015 (வெள்ளி) பி.ப 5.30 மணியளவில்
தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா முன்னாள் தலைவர், தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நிகழ்ச்சிகள்

- ஆசியுரை: பிரம்மஸ்ரீ வை.ஜெகதீஸ்வரக்குருக்கள் (ஆலய பிரதம குரு)
- தலைமையுரை:
- வாழ்த்துரைகள்: செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தலைவர், சிவபூமி அறக்கட்டளை
  பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன் தலைவர் இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்.
  த.சி. சிவநேசன் (திருநெல்வேலி கலாமன்றச் செயலாளர்)
  க.பரமநாதன் (க.ம.ச.ச நிலைய நிர்வாக சபை உறுப்பினர்)
- பட்டம் வழங்கிப் பாராட்டுதல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கலாசாலை வீதி, திருநெல்வேலி. திருநெல்வேலிக் கலாமன்றத்தினர்.

(C/18120) (10.6)

## 67 ஆண்டு கால

மட்டுமே முடியும்" என்று கட்சித் தலைவரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
ஒரு சமூகத்தை அடக்கவும், துன்புறுத்தவும் தேசிய பாதுகாப்பைப் பயன்படுத்தக்கூடாது. ஒரு பகுதி மக்கள் பாதிக்கப்படும்போது தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட மாட்டாது. இலங்கையிலுள்ள அனைத்து மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே தேசிய பாதுகாப்பாகும். அதை ஜே.வி.பியால் மட்டுமே உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.
கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று இடம்பெற்ற ஜே.வி.பியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய போதே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்நிகழ்வில், கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, வேட்பாளர்களான விஜித ஹேரத், லால் காந்த, சந்திரசேகரன் உள்ளிட்ட 25 மாவட்டங்களினதும் தேர்தல் குழுத் தலைவர்களும், சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். நாடு முழுவதிலுமிருந்து பெருந்திரளான ஜே.வி.பி. ஆதரவாளர்களும் பங்கேற்றனர்.
இதில் மேலும் உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க,
இலங்கை ஸ்திரத்தன்மை மிக்க நாடாக இருக்கவேண்டுமாயின், இங்கு வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பேர்கர், மலே ஆகிய அனைத்து இனத்தவர்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஆனால், 67 வருடங்களாக ஆட்சி நடத்தியவர்கள் தேசிய சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் இதுவரை ஏற்படுத்தவில்லை. மாறாக, தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இனவாதத்தினூடாக இனங்களுக்கிடையே சந்தேகத்தை ஏற்படுத்தி, இனங்களைப் பிளவுபடுத்துகின்றனர்.
அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்க்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால்தான் ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்பமுடியும். அதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவின மக்களது சமய, கலாசார, மொழி உரிமைகள் சமவுரிமைகளாக்கப்படவேண்டும். அதை நிறைவேற்றுவதற்கு ஜே.வி.பியால் மட்டுமே முடியும். எமது அரசில் அதை நிறைவேற்றுவோம்.

**தேசிய பாதுகாப்பு**

ஒரு தரப்பினரைப் பாதிப்புக்கு உட்படுத்தாது, நாட்டிலுள்ள அனைத்து மக்களது பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதே தேசிய பாதுகாப்பாகும். உலகில் அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய போராட்டமாக ஆயுதப் போராட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆயுதப் போராட்டத்தினூடாக அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்பதை ஜே.வி.பி. ஏற்காது. வரலாற்றில் எம்மால் பல தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன. அதற்காக இன்று நாம் மனச்சாட்சிக்கு உண்மையாக கவலையடைகின்றோம். கருத்துகளுக்கு இடையிலான மோதல் ஊடாகவே மாற்றத்தை ஏற்படுத்த முடியும். கருத்து மோதலை ஏற்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் –என்றார். (த–சி)

## சயனைட்டுடன்

னைட் ஆகியனவும் கைப்பற்றப்பட்டிருந்தன.
இவர்களிடம் கியூப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். 5 பேர் கைது செய்யப்பட்டிருந்ததாகச் சொல்லப்பட்டிருந்தாலும், மூன்று பேர் மாத்திரமே கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இலங்கை அகதிகள் இருவரும், அவர்கள் இருவரையும் காரில் ஏற்றிச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த ஒருவரையுமே கைது செய்திருப்பதாக, கியூப் பிரிவு பொலிஸார் ஊடகங்களிடம் நேற்றுத் தகவல் வெளியிட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்ட இலங்கை அகதியான கிருஸ்ணகுமாரே, பிரபாகரனின் நெருங்கிய நண்பர் என்று விசாரணைகள் மூலம் அறிய வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அவரிடமிருந்து சயனைட் குப்பிகள், இலங்கை – இந்திய நாணயங்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.
மேலும், அவர் இலங்கைக்குப் படகு மூலம் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தபோதே கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார், அவர் எவ்வாறு தமிழகத்துக்கு வந்தார் என்பது தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டனர்.
இந்தக் கைதைத் தொடர்ந்து, தமிழகத்தின் கரையோரப் பிரதேசங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த–5–ரி)

## வெள்ளை வானுட

போது இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்குக் கைது செய் யப்பட்டனர்.
சிவில் உடையில் இருந்த இவர்களிடம் இருந்து ஒரு கைத்துப்பாக்கி மற் றும் 13 ரவைகள் கைப் பற்றப்பட்டன. அத்துடன் இவர்கள் பயணம் செய்த வெள்ளைவானின் இலக் கத்தகடு மாற்றப்பட்டிருந்தது.
மீரிஹான பகுதியிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரது தற்போதைய வதிவி டங்கள் உள்ளன. இந்த நிலையில், அந்தப் பகுதியில் வைத்து வெள்ளை வானில் இருந்த ஆயுததாரிகள் கைது செய்யப்பட்ட விவகாரம் கொழும்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
அதேவேளை, கைது செய்யப்பட்ட ஒரு அதிகாரி மற்றும் இரு படையினரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து நுகேகொடை நீதி மன்றத்தில் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டனர். அப்போது அவர்களை ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.
அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
இவர்கள் மெய்க்காவலர்களாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா இராணுவத்தின் கொமாண்டோ படைப்பிரிவுத் தளபதியாக இருக்கிறார். இவர் முன்னர் 55 ஆவது மற்றும் 59 ஆவது டிவிசன்களின் கட்டளை அதிகாரியாக வன்னி இறுதிக்கட்டப் போரில் பங்கெடுத்திருந்தார் என்பதும், முன்னாள் பாதுகாப்புச் செயலருக்கு நெருக்கமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பான தகவல்கள் வெளியானதை அடுத்து, மஹிந்தவின் ஆதரவாளர்களான உதய கம்மன்பில, ஜி.எல். பீரிஸ், விமல் வீரவன்ஸ ஆகியோர் கோத்தாபய ராஜபக்ஷ மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகளை வெளியிட்டிருந்தமை கவனத்தில் கொள்ளத்தக்கது. (த–5)

## திம்புக்

மாவை.சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் பங்கெடுத்துள்ளனர். தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் சாராம்சம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிரதானமாக மூன்று பிரிவுகளாக அது வரையறுக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினை தீர்வு, போரின் பின்னரான அடிப்படைப் பிரச்சினை தீர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்த வரையில், வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில், தமிழர் ஒரு தேசிய இனம். அவர்களுக்குரிய சுயநிர்ணய உரிமை, இறையாண்மை, சுயாட்சி அடிப்படையிலான தீர்வே தேவை என்பதை முன்வைத்துள்ளோம். இதில் திம்புக் கோட்பாட்டில் சொல்லப்பட்டுள்ள, தமிழர் தனித்துவத் தேசிய இனம் என்பதையும், தனியான தாயகம் என்பதையும், சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தியுள்ளோம்.
போரின் பின்னர், இராணுவ வெளியேற்றம் – மக்களின் மீள்குடியமர்வு – அரசியல் கைதிகளின் விடுதலை – காணாமற்போனோர் விவகாரம் – முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரம் – பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலை உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றியும் அவற்றுக்கான தீர்வு கள் எவ்வாறு பெறப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளோம்.
வடக்கு – கிழக்கு அபிவிருத்தி தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக்கப்படவேண்டும் என்பதும் அதனூடாக வடக்குச் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்து, தமிழ் – இளைஞர் – யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பிலும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது. யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீர் மாசடைவது தொடர்பிலான பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் மற்றும் வன்னிப் பிரதேசத்தில் சிறிய குளங்களைப் புனரமைத்து – ஒருங்கிணைத்து – நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத் துதல் பற்றியும் தெரிவித்துள் ளோம்.
போரின் பின்னர் வடக்கில் திட்டமிட்ட ரீதியில் பரப்பப்பட்டுள்ள போதைப் பொருள் பாவனை மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றை இல்லாதொழிப்பதற்குரிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது பற்றியும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
இதனைவிட, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளியாகும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஐ.நா. சபையை கோரும் விடயங்களும் அடங்கியுள்ளன– என்றார். (த–5)

## ஐரோப்பிய

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
கிழக்கு மாகாணத்தில் தனது கட்சிக்கு ஆதரவு திரட்டும் வகையில் நடை பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரை யாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக் கையில், மட்டக்களப்பு, பொலநறுவை, அனுராதபுரம், வன்னி ஆகிய பகுதிகளில் கைத் தொழில் பேட்டைகள் அமைக்கப்படவுள்ளன. இது பற்றிய பேச்சுக்களின் பயனாக எதிர்வரும் ஒக்ரோபர் அல்லது நவம் பரில் இறக்குமதிக்கான தடை நீக்கப்படலாம்.
ஐக்கிய தேசிய கட்சி தலைமையில் அடுத்த ஆட்சி அமையும் போது 10 லட் சம் இளைஞர் யுவதிக ளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் வெளிநாட்டு முதலீட்டா ளர்களை வரவழைத்து கைத் தொழில் வர்த்தக வலயங்கள் பல ஏற்படுத்தப்படும்.
திருகோணமலை மாவட்டம் சம்பூரில் ஏற்கனவே இந்திய உதவியுடனான அனல் மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. சீன உதவியுடன் அந்தப் பகுதியில் மற்றுமோர் அனல் மின் உற்பத்தி நிலையமும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றும் அமைப்பது தொடர்பானபேச்சுக்களில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தற் போது ஈடுபட்டுள்ளார்–என்றார். (த–4)

## ஐ.தே.மு.வின்

யிடப்படவுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இதற்கான நிகழ்வு கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் முற் பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடும் கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் இந்நிகழ்வில் பங் கேற்கவுள்ளனர்.
அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 27ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. இதற்கான நிகழ்வு மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது. (த–சி)

## 80 கண்காணி

மாகாணத்தின் பதில் முதலமைச்சர் த.குருகுலராஜா மற்றும் சிவில் சமூகத்தினரையும் அவர்கள் சந்தித்திருந்தனர்.
சந்திப்புக்களின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கிறிஸ் ரெய்ன், இலங்கையின் அரச அதிகார தரப்பினரின் அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ளோம். கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரைச் சந்தித்திருந்தோம். வட பகுதியில் யாழ்ப்பாணம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாகும்.
நாம் தேர்தலுக்கு முன்னரும், தேர்தல் தினத்திலும், அதன் பின்னரும் எமது கண்காணிப்புகளை மேற்கொள்வோம். இறுதியில் இது தொடர்பில் 200 பக்கங்களைக் கொண்டதாக அறிக்கை வெளியிடுவோம். அதில் நாம் அவதானித்த விடயங்கள், மற்றும் எமது பரிந்துரைகளை முன்வைப்போம் – என்றார். (த–5)

## யாழ்ப்பாணத்தில்

கத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியி டும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் முதன்மை வேட்பாளர்கள் மற்றும் கட்சிச் செயலாளர்களு டன், பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரட்ணாயக்கா தலைமை யில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே, தெரிவத்தாட்சி அலுவலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் இதுவரை 5 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், மாவட்டச் செயலகத்திலும், வேலணை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களிலும் தேர்தல் முறைப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.
தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தவிர, வேறு எவரும் தேர்தல் பரப்புரை துண்டுப் பிரசுரம் வெளி யிட முடியாது. அதனை மீறிச் செயற்படுவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பொது இடங்களில் வைத்துத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்க முடியாது. வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் போது, வேட்பாளரோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களோ செல்ல முடியாது என்று ஆணையாளர் தெரிவித்தார். (த–5)

## நிரந்தரத்

பி.பி.சி. செய்திச் சேவையின் சிங்கள ஒளிபரப்பான சந்தேசியவுடன் முகநூல் மூலம் நடத்திய உரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.
இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு, இந்த நாட்டில் வாழும் சிங்கள, முஸ்லிம், தமிழ் மற்றும் பறங்கியர் அனைவரும் இலங்கையர்களாக வாழக் கூடிய, இலங்கையர்கள் எனும் அடையாளத்தை ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே சாத்தியப்படும்.
சிறுபான்மையினரும் நாட்டில் ஆட்சி அமைப்பில் சில முடிவுகளை எடுக்கக் கூடிய வகையிலும் அவர்களுடைய நியாயமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையிலும் புதிய அரசமைப்பு ஒன்று உரு வாக்கப்படவேண்டும். அத்தகைய அரசமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தை அனைத்து இனத்தவருடனும் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக அந்த தீர்வு அமைந் திருக்க வேண்டும்.
அவ்வாறான சூழலில் பல்லின தன்மையுடன் அனவரும் தாங்கள் இலங்கையர் என்பதை உணர்ந்து பெருமையுடன் வாழமுடியும் என்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (த–5)

## வெள்ளை வான்

திர முன்னணியின் வேட்பாளர் உதய கம்மன் பிலவின் தேர்தல் பரப்புரையை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லிணக்கத்துக்குத் தடையாக இருப்பதாக அவர்கள் எம்மைக் குற்றம் சாட்டினர். ஆனால் எல்லாமே தேசிய பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும். தமிழ் நாட்டில் கூட ஐந்து விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நாம் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியபோது போர் வெறியர்களாகக் குற்றம் சாட்டப்பட்டோம். ஆனால் இந்தக் குறுகிய காலத்தில் நாட்டின் பாதுகாப்பு எந்தளவுக்கு மோசமடைந்துள்ளது என்பதைத் தெளிவாக காண முடிகிறது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவைச் சிலர் சர்வாதிகாரி என்று குற்றம் சாட்டினர். அவர் சர்வாதி காரியாக இருந்திருந்தால், இப்போதும் அவர் ஜனாதிபதியாக இருந்திருப்பார், நான் பாதுகாப்புச் செயலராக இருந்திருப்பேன். அவருடன் இருந்த சிலர் தவறுகளைச் செய்துள் ளனர். அதுவே அவரது அரசின் வீழ்ச்சிக்கு வழி கோலியது.
தவறு செய்தவர்களை மஹிந்த கண்டறிந்திருக்கிறார். கடந்த கால அனுபவங்களின்படி நாம் தவறுகளைத் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்–என்றார். (த–5)

## ஆதரவாளர்

ஒருவரை நோக்கி எரிச்சலுடன் ஆவேசமாகப் பாய்ந்தார்.
உடனடியாக மஹிந்த ராஜபக்ஷவின் மெய்ப் பாதுகாவலர்கள், அவரை இழுத்து மேடையை நோக்கி அழைத்துச் சென்றனர். இந்தச் சம்பவம் தொடர்பான காணொளி சமூக ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் தீயாகப் பரவியுள்ளது.
இது தொடர்பில் அவரது பேச்சாளர் ரொகான் வெலிவிட்ட வெளியிட்டுள்ள அறிக்கையில்,
சில சக்திகள் மஹிந்த ராஜபக்ஷவின் பரப்புரைகளுக்குத் தடையை ஏற்படுத்தும் வகையில், மது அருந்தியவர்களைக் கூட்டங்களுக்கு அனுப்பி வருகின்றன. மதுபோதையில் இருந்த குறிப்பிட்ட ஆதரவாளர் மஹிந்தவின் கைகளைப் பிடிக்க முயன்றார்.
இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்ட அவரின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காகவே, மஹிந்த அவ்வாறு நடந்து கொண்டார். தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தால், இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்திருக்காது என்று கூறியுள்ளார். (த–5)

## யாழில்

தெரிவத்தாட்சி அலுவலரினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.
தமது கட்சியின் வேட்புமனு தகுந்த காரணங்கள் இன்றி நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவித்தே, கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட் டுள்ளது. நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை, வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட இரண்டு சுயேச்சைகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(த–5)

# விடுப்பு எடுக்காமல் போட்டியிடும் சிவாஜி

## ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் விடுப்பில்

கொழும்பு, ஜூலை 23

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துக் குருநாகல் மாவட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கத்தை தவிர, தேர்தலில் போட்டியிடும் ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் விடுப்பு எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நடப்புத் தேர்தலில் மாகாண முதலமைச்சர்கள், அமைச்சர், உறுப்பினர்கள் எனப்பலரும் போட்டி யிடுகின்றனர். வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்களாக உள்ள ஆறு பேரும், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், க.சிவநேசன், க.சிவமோகன், எம்.கே. சிவாஜிலிங்கம், இ.அங்கஜன், ஜயதிலக ஆகியோரே போட்டியிடுகின்ற னர். மூவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பிலும், ஒருவர் சுயேச்சையாகவும், ஒருவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் மற்றையவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலும் போட்டியிடுகின்றனர்.

இவர்களில், குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் சிவாஜிலிங்கம் மாத்திரமே, மாகாண சபையிலிருந்து விடுமுறை பெற்றுக்கொள்ளவில்லை. ஏனைய 5 பேரும் விடுமுறை எடுத்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும்போது, மாகாண சபை உறுப்பினர் பதவி விலகவேண்டிய சட்ட ஏற்பாடுகள் எதுவுமில்லை. ஆனாலும், அவ்வாறு போட்டியிடும் மாகாண சபை உறுப்பினர்கள்,தேர்தல் காலப் பகுதியில் சபை அமர்வுகளிலிருந்து விடுப்பு எடுப்பது வழமையாகும். (த)

# இறக்குமதியாகும் உணவுக்கு வருடாந்தம் ரூ.154 பில்லியன்

## இறக்குமதியாகும் 38 பொருள்களில் பெரும்பாலானவற்றை இங்கே உற்பத்தியாக்க முடியும் என்கிறார் ஜனாதிபதி மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூலை 23

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களுக்காக வருடாந்தம் சுமார் 154 பில்லியன் ரூபா பணம் செலவிடப்படுகிறது. அவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற 38 உணவுப் பொருள்களில் பருப்பு, கடலை, அப்பிள் உள்ளிட்ட நான்கு உணவுப் பொருள்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து உணவுப் பொருள்களையும் நமது நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



அதற்காக அரச மற்றும் தனியார் துறையை சேர்ந்த அனைவரையும் சேர்த்துக்கொண்டு இந்தத் திட்டத்தைச் செயலூக்கத்துடன் நடைமுறைப்படுத்தவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் உள்ளூர் உணவு உற்பத்தி நிகழ்ச்சி தொடர்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இதனைக் கூறினார்.

எம்மை விட்டும் அரிதாகிச் செல்லும் எங்களுக்கே உரித்தான உணவுக் கலாசாரத்தை மீண்டும் நாட்டில் பிரபல்யப்படுத்தி முறையான உள்ளூர் உணவு உற்பத்தி செயற்பாட்டுக்கு நாட்டைக் கொண்டு செல்ல வேண்டும். இந்நாட்டில் பயிரிடக்கூடிய, இருப்பினும் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்படுகின்ற அனைத்து உணவுப் பொருள்களையும் நிறுத்திவிட்டு நாட்டைத் தன்னிறைவுள்ள பொருளாதாரத்தை நோக்கிக் கொண்டு செல்வது அரசின் நோக்கம் என்றார் ஜனாதிபதி.

இதனை 3 ஆண்டுகள் கருத்திட்டமாகச் செயற்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி ஆலோசனை கூறினார். இந்தத் திட்டத்தை மூன்று வாரங்களுக்குள் தமக்குச் சமர்ப்பிக்கும்படி ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, இதன்போது இத்துறையில் சிறந்த அறிவுள்ள அனைவரினதும் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

தன்னிறைவுள்ள நாடொன்றைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் விவசாயிகள் முகம் கொடுத்துள்ள சிக்கல்களை அடையாளம் கண்டு அவற்றுக்குத் தீர்வு வழங்க வேண்டும். விவசாயிகளுக்காக உரிய அனைத்து வசதிகளையும் குறைவின்றி நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

மண்ணைச் சிறந்த முறையில் பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்வது தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் பயிரிடப்படாத காணிகளை கட்டாயமாகப் பயிர் செய்வதற்கு செயல்முறை ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் விவசாய கலாசாரத்துடன் இருக்கின்ற மக்களின் அறிவை அடையாளம் கண்டு விஞ்ஞான அடிப்படையிலும் ஏர் பூட்டு விழா போன்ற மாபெரும் கலாசார மரபுரிமைகளுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் கூறியுள்ளார். (த-4)

# 50 பில்லியன் ஏற்றுமதியை கருத்தில் கொண்டு மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கையிலிருந்து 50 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதியை நோக்கியதாக இம்முறை இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள வருடாந்த பொருளாதார மாநாடு நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இது நடைபெறவுள்ளது. இதில் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் 8 கட்டங்களாக ஆராயப்படவுள்ளது.

இம்மாநாட்டில் அரச கொள்கை வகுப்பாளர்கள், அரச மற்றும் தனியார் துறைசார் நிபுணர்கள், உயர் பொருளியலாளர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். இதில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# பிரேமதாச மைதானத்தில் மோதல் நடந்தவேளை பாதுகாப்பு அதிகாரி வீட்டில் போதையில் உறக்கம்

கொழும்பு, ஜூலை 23

கொழும்பில் ஆர்.பிரேமதாச மைதானத்தில் இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில், பார்வையாளர்களுக்கு இடையில் மோதல் நடந்தபோது, அந்தப் போட்டியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த அதிகாரி மதுபோதையில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் இந்தப் போட்டியின் , பாதுகாப்புக்குப் பொறுப்பாக, அஜித் ஜெயசேகர என்ற முன்னாள் சிறிலங்கா விமானப்படை அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். இவர் 2001 ஆம் ஆண்டு கட்டுநாயக்க விமானப் படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியபோது, அந்தத் தளத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பிரேமதாச மைதானத்தில் கிரிக்கெட் ஆட்டம் நடந்துகொண்டிருந்த போது பார்வையாளர்களின் இரு குழுக்களிடையே மோதல் ஏற்பட்டது. அதில் பலர் காயமடைந்ததுடன், 12 வாகனங்களும் சேதம்டைந்தன.

சிறப்பு அதிரடிப்படை, இராணுவம் என்பன அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், கண்காணிப்புக் காணொளிப் பதிவுக் கருவியின் ஆதாரங்களைக் கொண்டு தாக்குதலில் ஈடுபட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோதல்கள் நடந்தபோது மைதானத்தின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட அஜித் ஜெயசேகர வீட்டில் மதுபோதையில் இருந்துள்ளார். போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் மது அருந்திவிட்டு அவர் வீடு சென்றிருக்கிறார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-5)

# பக்கச் சார்பாகச் செயற்பட்டால் பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 23

பக்கச்சார்பான முறையில் செயற்படும் பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவர் எனத் தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வேட்பாளர்களுடன் நட்புப் பாராட்டி அவர்களுக்குச் சார்பாகச் செயற்படும் பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

பக்கச்சார்பாகச் செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், பக்கச் சார்பாகச் செயற்பட்டுவரும் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் ஏற்கனவே தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் தொடர்பில் இரகசிய விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வேட்பாளர்களுக்குச் சார்பாகச் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தால் அது தொடர்பில் தகவல் வழங்கமுடியும் எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (ந)



# இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள்

# சம்பியனானது அல்வாய் மனோகரா இளைஞர் கழகம்

கரணவாய், ஜூலை 23
கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் 37 புள்ளிகளுடன் அல்வாய் மனோகரா இளைஞர்கழகம் நடப்பு வருடச் சம்பியனாகியது.

எல்லே தொடரில் முதலாமிடத்தை வதிரி டைமன்ஸ் இளைஞர் கழகமும் இரண்டாமிடத்தை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும் கபடி தொடரில் (ஆண்கள் பிரிவு) முதலாம் இடத்தை கோயிற்கடவை இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை மனோகரா இளைஞர் கழகமும் துடுப்பாட்டத் தொடரின் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை மாலிசந்தி மைக்கல் இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை கொம்மாந்தறை இளைஞர் கழகமும் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வதிரி டைமன்ஸ் இளைஞர் கழகம், அல்வாய் மனோகரா இளைஞர் கழகமும் கரம் தொடரின் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை ஸ்ரீமுருகன் இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை கரவைச்சுடர் இளைஞர் கழகமும் பெண்கள்பிரிவில்முதலாம்இடத்தை வதிரி டைமன்ஸ் இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை இமையாணன் மத்தி இளைஞர் கழகமும் கரப்பந்து தொடரில் (பெண்கள் பிரிவு) முதலாம் இடத்தை சிவகுமரன் இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை மனோகரா இளைஞர் கழகமும் கயிறு இழுத்தல் தொடரின் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சமரபாகு நியூட்டன் இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை இமையாணன் மத்தி இளைஞர் கழகமும் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வதிரி டைமன்ஸ் இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை அல்வாய் மனோகரா இளைஞர் கழகமும் தடகளத்தொடரில் ஆண்கள் பிரி வில் முதலாம் இடத்தை அண்ணா சிலையடி இளைஞர் கழகமும் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சிவகுமரன் இளைஞர் கழகமும் கைப்பற்றின.(ம-108)

## யாழ். மாவட்ட உதைபந்தாட்ட நடுவர்களுக்கான பயிற்சிமுகாம்




வலி வடக்கு, ஜூலை 23
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூயில் நடைபெற்றது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவரின் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர்களுக்கான பணிப்பாளர் யாப்பா, பயிற்றுவிப்பாளர் வடிவேலு மற்றும் வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேதாபரணம் வலி காமம் உதைபந்தாட்ட லீக் தலை வர் நா.நவரத்தினராசா, யாழ். மாவட்ட விளையாட்டுத்திணைக்களத்தின் உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் எம்.முகுந்தன், வலிகாமம்,பருத்தித்துறை,யாழ்ப்பாணம், வடமராட்சி உதைபந்தாட்ட லீக்குகளின் மத்தியஸ்தர்கள் உட்படப்பலரும் கலந்து கொண்டார்கள்.(ம-86)

## கலைமதி விளையாட்டுக்கழகத் தொடர் ஐக்கியம், ஞானமுருகன் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 23
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் யாழ்.ஐக்கிய அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் யாழ். ஐக்கிய அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நக்கீரன் அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் வெற்றிபெற்றன. (ம-23)

## அறிவொளி முன்பள்ளியின் விளையாட்டுவிழா

அறிவொளி சனசமூக நிலையத்தின் ஆதரவின் கீழ் இயங்கிவரும் அறிவொளி முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒருமணியளவில் யாழ்.வண். ஸ்ரீ வைத்தியலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.க.தம்பிராசாவின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக பாலர் கல்விக் கழகத்தின் தலைவர் எஸ்.பி.காசிநாதனும் பாலர் கல்விக்கழகத்தின் செயலாளர் தெ.இரட்ணகோபாலும் யாழ். மாநகரசபையின் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ச.லோகசிவமும் ஸ்ரீ வைத்தியலிங்கம் வித்தியாலயத்தின் அதிபர் புஸ்வபதி சண்முகராசாவும் அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலையின் அதிபர் கு.அகிலனும் ஜெ-88 கிராம அலுவலர் ர.சல்பீரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## இன்றைய மோதல்கள்

**விக்னேஸ்வரா வி.க.தொடர்**
யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எல்லாளன் அணியை எதிர்த்து வீனஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதவுள்ளது.

**கலைவாணி வி.க.தொடர்**
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு கலைவாணி சனசமூக நிலையத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடற்கல்வி ஐக்கிய அணியை எதிர்த்து விண்மீன் அணி மோதவுள்ளது.

**கலைமதி வி.க.தொடர்**
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதான்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை ஹென்றிஸ் அணியை எதிர்த்து யாழ்.ஐக்கியம் அணி மோதவுள்ளது. (ம-23)

## கலைமதி எதிர் ஆவரங்கால் மத்தி இறுதியில் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். மாவட்ட ரீதியாக கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதிக் கொண்டது. இதில் புத்தூர் கலைமதி அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.இரண்டவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் ஆவரங்கால் மத்திய அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (ம-23)



நெடுந்தீவு பிரதேச செயலகத்தினால் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் சில பதிவுகள். (ம-7)

## இந்து இளைஞர் - புத்தூர் கலைமதி இறுதியில் இன்று பலப்பரீட்சை



யாழ்ப்பாணம், ஜூலை 23
கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 56ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இரவு 7மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. (ம-23-288)



இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியின் (கனிஷ்ட பிரிவு) உதவிப் பயிற்றுவிப்பாளராக யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுனர் பாலகிருஸ்ணன் முகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். இவருடைய பயிற்சியின் கீழ் யாழ். மாவட்டம் பல வெற்றிகளைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-108)

## பழைய மாணவர்களுக்கிடையில் துடுப்பாட்டத்தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்.மத்திய கல்லூரியின் நிறுவுனர் தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கிடையில் துடுப்பாட்டத் தொடரொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

14பாடசாலைகளின் பழைய மாணவ அணிகளுக்கிடையில் 6 வீரர்கள் பங்குபற்றும் 5பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட தொடராக நடைபெறவுள்ள இந்தத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ம-23)



# பலம்பெறுகிறது பங்களாதேஷ்



பங்களாதேஷ்– தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் பங்களாதேஷ் 179–4 என்ற பலமான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் ஷீல் மற்றும் எல்கர். ஆரம்ப இணைப்பாட்டம் அரைச்சதத்தை எட்டியது. 34 ஓட்டங்களுடன் விடைபெற்றார் ஷீல். எல்கருடன் இணைந்தார் பிளாஸிஸ். மீண்டும் ஒரு சொல்லிக்கொள்ளும் படியான இணைப்பாட்டம். மேலதிக் இலக்குகள் இழப்பின்றி நூறு ஓட்டங்களை எட்டி தொடர்ந்துகொண்டிருந்தது தென்னாபிரிக்கா. மூன்று ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் எல்கர். இரண்டு ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் பிளாஸிஸ். தற்பொழுது தென்னாபிரிக்கா 136–3. திடீர் எழுச்சிகண்டது ரஹ்மானின் பந்து. நான்கு பந்துகளில் மூன்று இலக்குகள் வரிசையாகச் சரிந்தன. ஆனபோதிலும் ஹற்றிக் பதியப்படவில்லை. ஆனால் அகப்பட்ட மூவரும் அனுபவ வீரர்களே. பின்வரிசை ஒற்றையிலக்கச் சொதப்பல். முடிவில் தென்னாபிரிக்கா 248. பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக ரஹ்மான் 4 இலக்குகளையும் ஹொசைன் 3 இலக்குகளையும் – கிப் அல் ஹசன், முகமதுல்லா, இஸ்லாம் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

249 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களத்தில் இக்பாலுடன் கையிஸ். சொதப்பல் என்று சொல்லிக்கொள்ளவும் முடியாது அதே நேரம் சுப்பர் என்று சொல்லிக் கொள்ளவும் முடியாது. ஆனால் தென்னாபிரிக்காவை விரட்டக் கூடிய இணைப்பாட்டம் என்று நிச்சயம் சொல்லிக்கொள்ளலாம். அணியின் ஓட்டம் 46ஆக இருந்த வேளையில் பவிலியன்திரும்பினார்கையிஸ். வந்தவேகத்தில் விடைபெற்றார் ஹக்கியூ. பங்களாதேஷின் ஓட்ட வேகம் தற்காலிகமாக ஸ்தம்பிதமானது. இக்பாலுடன் இணைந்து பங்களாதேஷை பலப்படுத்தும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டார் முகமதுல்லா. இணைப்பாட்டமாக 89 ஓட்டங்கள் பகிரப்பட்டதுடன் ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்தனர். போல்ட் முறையில் இக்பாலை வெளியேற்றினார் எல்கர். அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களில் முகமதுல்லாவும் பவிலியனில். தற்பொழுது களத்தில் ரஹிம் மற்றும் ஷகிப் அல் ஹசன். பங்களாதேஷின் ஆதிக்கத்தை அப்படியே இல்லாமல் செய்தது மழையின் ஆதிக்கம். மழை விடாமல் தொடர இரண்டாம் நாள் முடிவில் பங்களாதேஷ் 179–4. (ம)



# ஆணின் வெற்றிக்குப்பின் பெண் என்பது இதைத்தானோ



இங்கிலாந்து – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 405 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய வீரர்கள் தமது காதலியுடன் இரவு விடுதிகளில் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

முதல் ஆட்டத்தில் தோற்றிருந்த போதிலும் இரண்டாவது ஆட்டத்தில் அபார வெற்றிபெற்று தொடரை 1–1 என்று சமன் செய்தது ஆஸி. வெற்றியையடுத்து இரட்டைச் சதம் அடித்து ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றிய சிமித் தன்னுடைய தோழியான டானி வில்லிஸிடனும், மிட்செல் மார்ஷ் அவரது துணையான இசாபேல் பிளாட்டுடனும் இரவு விடுதி ஒன்றில் கொண்டாட்டத்தில் ஈடுப்பட்டனர். வேகப்பந்து வீச்சாளர் பீட்டர் சிடில் தந்துரி சிக்கன் வகைகளை ஒரு கை பார்த்துக்கொண்டிருந்தார். அதே போல மற்ற வீரர்களும் லண்டனில் உள்ள பிரபல இரவு விடுதிகளில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

# இலங்கை - இந்தியா டெஸ்ட் தொடர் இந்திய அணி இன்று அறிவிப்பு



இலங்கை – இந்தியா அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரில் ஓய்வுகொடுக்கப்பட்ட அனுபவ வீரர்கள் அத்தனைபேரும் அணிக்குத் திரும்புகின்றனர். வேகப்பந்து வீச்சாளர்களில் இஷாந்த் சர்மா, புவனேஸ் குமார், உமேஷ் யாதவ் இடம்பெறுவார்கள். வருண் ஆரோன் உடல் தகுதியை பொறுத்து தெரிவு செய்யப்படுவார். இந்த அணிக்கு கோஹ்லி தலைவராக கடமையாற்றுவார். (ம)

# ஹொக் - இக்பால் மோதல்

பங்களாதேஷ் – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட்டின் இரண்டாம் நாளான நேற்றையதினம் உணவு இடைவேளையின் பொழுது தென்னாபிரிக்க இலக்குக்காப்பாளர் குவின்டன் டி ஹொக்குக்கும் பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர் இக்பாலுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு இருவரும் ஒருவரை ஒருவர் நேருக்குநேராக முட்டிக் கொள்ளும் அளவுக்கு சென்றனர்.

உணவு இடைவேளைக்கான இறுதிப் பந்தை எதிர்கொண்ட இக்பால் அதனை ஓட்டமற்ற பந்தாக மாற்றிவிட்டு பவிலியன் நோக்கி நடந்தார். அப்பொழுது எதிரே வந்த ஹொக் அவருக்கு எதையோ தெரிவிக்க வார்த்தைப்போர் ஆரம்பமாகி இருவரும் ஒருவரையொருவர் முட்டிக்கொள்ளும் நிலைமைக்குச் சென்றனர். பின்னர் அம்லாவும் ஸ்ரெயினும் தலையிட்டு இருவரையும் சமாதானம் செய்தனர். மோதல் மைதானத்தின் பெரிய திரையில் தொடர்ந்து காட்சிப்படுத்தப்பட்டுக்கொண்டேயிருந்தது. இருவரிலும் கணிசமான அளவுக்கு தவறுகள் உள்ள காரணத்தினால் இருவருக்கும் அபராதம் விதிக்கப்படலாம் போலத் தெரிகிறது. (ம)

# அனுபவ வீரர்களுக்கு எச்சரிக்கை பாகிஸ்தான் தெரிவுக்குழு விடுத்தது

அனுபவ வீரர்கள் தம்மை நிரூபிக்காவிட்டால் அணியிலிருந்து உடனடியாக நீக்கம் செய்யப்படுவார்கள். இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் தெரிவுக்குழுத் தலைவர் ஹரூன் ரஸீத்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் எதிர்காலம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது பாகிஸ்தான் கிரிக்கெட்டின் எதிர்காலத்தையோ அல்லது அடுத்த வருடம் நடைபெறவுள்ள ரி–20 உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானின் வாய்ப்புக்களையோ கேள்விக் குறியாக்கும் எவருக்கும் அணியில் இடமில்லை. தற்காலங்களில் பாகிஸ்தானின் கனவுகளை சிதைப்பவர்கள் பெரும்பாலும் மூத்த வீரர்களாகவே உள்ளனர். மூத்த வீரர்களின் செயற்பாடுகள் தெரிவுக்குழுவுக்கோ அல்லது பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கோ திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் அணியில் இருந்து ஓரங்கட்டப்படுவார்கள். ரி–20 அணியின் தலைவர் அப்ரிடியிடம் இருந்து நிறைய எதிர்பார்க்கிறோம். உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய வலுவான அணியை தயார் செய்ய வேண்டியது அவரின் கடமை– என்றார். (ம)

# ஆஷஸில் மீண்டும் ஹடின் காத்திருப்பு வரிசையில் நெவில்

இங்கிலாந்து–ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் லோட்ஸில் நடைபெற்றது. இதிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக ஓய்வினை அறிவித்த இலக்குக் காப்பாளர் ஹடின் மூன்றாவது ஆட்டத்தில் விளையாட மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

இதனால் 37 வயதாகும் ஹடின், இனிமேல் அணியில் இடம்பெறுவாரா? என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. ஹடினுக்குப் பதிலாக லோர்ட்ஸ் டெஸ்டில் களம் இறங்கிய நெவில், முதல் இன்னிங்சில் 45 ஓட்டங்களை எடுத்தார். மேலும், 7 பிடிகளையும் எடுத்து அசத்தினார். ஹடின் மீண்டும் வருவதால் நெவில் ஆஸ்திரேலிய அணியில் தொடர்ந்து இடம் பிடிக்க சில காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் ஆஸியின் எதிர்கால இலக்குக்காப்பாளர் தான் என்பதை நெவில் ஆணித்தனமாக நிரூபித்துள்ளார். (ம)

# இணைப்பாட்டமாக 500 ஓட்டங்கள் தாயகத்தில் வரலாற்றுச் சாதனை

கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்தில் நடந்து வரும் கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டத் தொடரில் இணைப்பாட்டமாக 501 ஓட்டங்களை குவித்து பீற்றர்சன், பிரின்ஸ் இணை புதிய சாதனை படைத்துள்ளது.

லாங்ஷயர் அணியும் கிளமார்கன் அணியும் மோதிய இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய லாங்ஷயர் அணி 698 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. 699 ஓட்டங்களைப்பெற்றால்முன்னிலை பெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய கிளமார்கன் அணிக்கு 3ஆவது இலக்குக்காக ஜோடி சேர்ந்த தென்னாபிரிக்க வீரர்களான பீற்றர்சன் (286 ஓட்டங்கள்), ஆஷவெல் பிரின்ஸ் (261 ஓட்டங்கள்) நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் இந்த இணை 501 ஓட்டங்களை குவித்து புதிய சாதனை படைத்தது. சர்வதேச அளவில் முதல் தர ஆட்டங்களில் இணைப்பாட்டமாக 500 ஓட்டங்களைக் கடப்பது இது 13ஆவது முறையாகும். ஆனால் 151 வருடங்கள் பழைமைகொண்ட கழக தொடர்களின் வரலாற்றில் இணைப்பாட்டமாக 500 ஓட்டங்களை கடப்பது இதுவே முதன்முறை. (ம)



## எனது புறக்கணிப்பு தெரிவுக்குழுவின் சிறுமைத்தனம் -கெவின்



இங்கிலாந்தினால் புறக்கணிக்கப்பட்ட கெவின் பீற்றர்சன். இங்கிலாந்தைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற சோகம் தன்னை வாட்டுவதாக மியாமி கடற்கரையிலிருந்து ரூவீட் செய்துள்ளார்.

தனது புறக்கணிப்பு தொடர்பாக பீற்றர்சன் தெரிவித்திருப்பதாவது எப்போதையும் விட சிறப்பாக துடுப்பெடுத்தாடி வருகிறேன். இங்கிலாந்து அணியின் முன்வரிசை தற்பொழுது பெரும் சிக்கலில் இருக்கிறது. நான் இங்கிலாந்து அணிக்கு உதவ முடியும், உதவ விரும்புகிறேன். மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்காக இங்கிலாந்தில் தயார் செய்ய வேண்டிய நான் கடற்கரையில் படுத்துக் கிடப்பது நகைக்கத்தக்கதாக உள்ளது. உண்மையில் இது முட்டாள்தனமாகவும் சிறுமைத் தனமாகவும் இருக்கிறது, வருத்த மளிக்கிறது என்றார். (ம)


விற்பனையாகின்றன

A/L 2015

சகலதுறை மாணவர்களுக்குமான பொதுச்சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூல் தொகுப்பு

த.தவசேகர்

* பிரபல புத்தக நிலையங்களிலும் D.M.I கல்வி நிலையத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

* இப் பரீட்சைக்கான கருத்தரங்கு D.M.I (ஆரியகுளம்) கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(...18124)



வரலாறு A/L 2015

விசேட கருத்தரங்கு

காலம்: 25.07.2015 (சனிக்கிழமை)
26.07. 2015 (ஞாயிற்றுக் கிழமை)

நேரம் காலை 8.30 முதல் பிற்பகல் 3.30 வரை எதிர்பார்க்கை வினா விடை

வளவாளர்கள்: M. பத்மன் M.A (History)
S. சுஜிகரன் B.A (SL)

வெளி மாணவரும் பங்குபற்றலாம்.

இடம்: D.M.I யாழ்ப்பாணம்

(63133)(46.3.7)



A/L 2015 கருத்தரங்கு

அரசியல் - N.பாபு

காலம் :- 24.07.2015
வெள்ளி 8.00 am - 4.00 pm


* வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
* கையேடுகள் வழங்கப்படும்.

யூனிவேர்சல்
(யாழ்/இந்து மகளிர் அருகில்)


## பாகிஸ்தானைக் கலாய்த்த இந்தியா

இலங்கைக்கு எதிரான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து மாலிக், சானியா மிர்சா ஆகியோர் பாகிஸ்தான் வீரர்களுடன் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக டப்மேஷ்வீடியோவிற்கு பாகிஸ்தான் வீரர்களுடன் சானியா மிர்சா மற்றும் அவரது கணவர் மாலிக் நடனமாடினர். இந்த வீடியோவை சமூக வலைதளமான ரூவிட்டரிலும் வெளியிட்டனர். இதற்கு இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரரான யுவராஜ் சிங் கிண்டலாக கருத்து தெரிவித்துள்ளார். அவரது பதிவில் சிறந்த விளையாட்டு வீரர்கள். ஆனால் இவர்களது நடனம் மோசமாக இருக்கிறது என்றுள்ளது. இதற்கு மலிக்கும் சானியாவும் தமது விருப்புக்களைத் தெரிவித்துள்ளனர். (ம)





# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி செல்வராசா

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோணாந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்வராசா 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - வள்ளியம்மை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பார்வதி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும் செல்வநாயகி, இராஜேந்திரம், ஜெயராணி(வசந்தி - கனடா), சுகுணா, ரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவராசா (செல்வா ஸ்ரோர்ஸ்), இராஜேஸ்வரி, சிறீஸ்கந்தராசா (கனடா), மதிரூபன், ரதனி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான பாலசுப் பிரமணியம் பரஞ்சோதிநாதன் (மார்க்கண்டு), சிவயோகம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் சகோதரியும் காலஞ் சென்றவர்களான இந்திரா, இராஜதுரை (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், பிரணவன், கபிலகாந் (UK), கௌசல்யா, துசீதன் (டுபாய்), குகன்ராஜ், லதாங்கனி (கனடா), சுவர்ணா (கனடா), சோபனா (கனடா), கரீஸ் (சுவிஸ்லாந்து), சியாம் (சுவிஸ்லாந்து), அபிரா (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரவினின் (கனடா) அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.07.2015) வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்.

41/6, மானிப்பாய் வீதி, (கோணாந்தோட்டம்), யாழ்ப்பாணம்.

TEL - 021 222 5047



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 15.05.1934 | 19.07.2015 |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.